தை – பங்குனி, 2005

விலை ரூபா 50/=

# வெளிச்சம்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

31/8/2005




## சுனாமி
## 26.12.2004

கொடியுயர்த்தி வாழ்ந்தவொரு
குடிவாழ்க்கை
இடிவிழுந்து எல்லாமிழந்து
இருக்கிறது சூனியமாய்.
நாளையிது மீண்டும் நிமிரும்
மீள அழகொளிரும்.

இலண்டனில் வெளிவந்துவிட்டது.
இங்கு மிக விரைவில்.

# பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்





கடந்த பத்தாண்டுகளாக
கவிஞர் புதுவை இரத்தினதுரை
எழுதிய கவிதைகளின்
தேர்ந்த தொகுப்பு இது.

- பேராசிரியர் கா.சிவத்தம்பியின் முன்னுரை.
- தமிழக ஓவியர் ட்ரொஸ்கி மருதுவின் ஓவியங்கள்.
- காலப் பதிவான கவிதைகள்.
- 450 பக்கங்களில் அழகிய பதிப்பு.
- விலை: ரூபா 550.00

தொடர்புகளுக்கு:
விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்
யாழ்.மாவட்டச் செயலகம்
பொற்பதி வீதி,
கோண்டாவில்.

T.P: 021 222 3897




தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன்..

**கவிதைகள்**

மாலிகா
புதுவை இரத்தினதுரை
த.ஜெயசீலன்
கணனிக்கவி
பாட்டுக்குயில்
சோ.சி.கலைக்கதிர்
ந.தகையன்
யோ.கர்ணன்
இளைய அப்துல்லாஹ்

**கட்டுரைகள்**

செங்கைஆழியான்
யதீந்திரா
ஞானரதன்
பொன்.பூலோகசிங்கம்
மலைமகள்
அ.அன்ரனி

**சிறுகதைகள்**


சாந்தன்
ஆதிலட்சுமி சிவகுமார்
உடுவில் அரவிந்தன்

**நேர்காணல்**

கவிஞர் சு.வில்வரெத்தினம்

குறிப்புகள், அஞ்சலிகள், புதிய வரவுகள் இன்னும்பல...

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



சுனாமியின் சுவடு

# தலைவாசல்

இதழ் 90 தை - பங்குனி 2005.

## சிறீலங்கா ஒரு தீவு இரு நாடுகள்

சுனாமியென்ற கடற்பூகம்பப் பேரழிவிலிருந்து 'மீண்டெழுதல்' இன்று எம்முன்னேயுள்ள பெரும் சவாலாகும். இது என்ன ஏதென்று முன்னர் அறியாதோர் முன்னே சில கணங்களே வந்ததாயினும் எம் கரையிடித்து இருந்த வாழ்வையும் சிதிலமாக்கிப்போனது சுனாமி. இந்தச் சிறுபொழுதில் பல்லாயிரம் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. குடிமனைகள் இடியுண்டன. வாழ்வின் ஆதாரங்கள் யாவும் வாரிச் சுருட்டப்பட்டன. அவலக்குரலும், அந் தரிப்புமே மீண்டும் எமக்களித்துப்போனது பேரலை. போரின் தகிப்பில் வெந்த எம்மீது சுனாமியும் சுடுநீரூற்றிப்போனது.

ஆயினும் இந்த அனர்த்தத்திலிருந்து எப்படியும் மீண்டாகவேண்டிய தேவையே மீதமாயிருக்கிறது. ஆசியாவின் பெரும் பகுதியைத் தாக்கிய சுனாமி அனர்த்தத்திலிருந்து முதலில் மீண்டோரென்ற பெருமை எமக்கே யுண்டு. அனர்த்தம் நிகழ்ந்த சிலமணி நேரத்துள்ளேயே தமிழீழப் பகுதிக ளில் மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இத்தனை விரைவாய் வேறெங் குமே மீட்புப் பணிகளோ, நிவாரணப் பணிகளோ, மறுசீரமைப்பு வேலை களோ ஆரம்பிக்கப்படவில்லையென உலகப் பத்திரிகைகளே விதந்துரைக் கும் வண்ணம் விடுதலைப்புலிகளின் விரைவுப்பணி விளங்கியது.

எமது தேசியத் தலைவரின் மக்கள்மீதான கரிசனையும், ஏலவே ஒழுங் கமைக்கப்பட்டிருந்த புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்களுமே இதனைச் சாத்தியமாக்கியது. புலம்பெயர்ந்த எமது உறவுகளின் தாயகத்தின்மீதான பிடிமானமும், வாரி வழங்கிய வள்ளல் தனமுமே எமக்கு வலுச்சேர்த்தன. பேரழிவு நிகழ்ந்து ஒரு வாரமாகியபின்னரும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சிறீலங்கா அரசின் அவசர நிவாரணப் பணிகள் சென்றடையாதிருந்தவேளை புலிகளின் பகுதிகளில் அவசரப் பணியாவும் முற்றுப்பெற்று நீண்டகாலக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவென உதவிவழங்க வந்த உலக நிவாரண நிறுவனங்கள் அதிசயத்துடன் ஒப்புக்கொண்டன. புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்களும், அவற்றின் பிசகற்ற துரித பணிகளும் தனி யான அரசுக் கட்டுமானமொன்றைப் புலிகள் தம் நிலப்பரப்பில் வைத்திருக் கின்றனர் என்பதை இந்தச் சுனாமியும் சொல்லிப்போனது. அழிவு தந்த தெனினும், ஆற்றாத் துயரளித்ததெனினும் 'தமிழீழம் என்பது தனியரசு' என்று உலக விழிகளைத் திறக்கவைத்து சுனாமி ஆறியது.

இன்று உதவியென வரும் பொருட்கள் யாவும் சிறீலங்காவின் சீழ்பிடித் தொழுகும் காலாவதியான கட்டமைப்புக்களினால் மக்களைச் சென்றடை யாமல் கள்ளச்சந்தைக்குப் போகின்றன. நிலத்தில் புதைத்து மறைக்கப் படுகின்றன. பூட்டிய அறைக்குள் வைக்கப்பட்டவைகூட மாயமாய் மறைகின் றன. உதவியென வரும் உலக நிதியிலிருந்து அரசு ஆயுதக் கொள்வனவு செய்கிறது. யுத்த விமானங்களை மறுசீரமைப்புச் செய்கிறது. கப்பல்களை வாங்குகின்றது. நவீன ராடர் கருவிகளைப் பொருத்துகின்றது. சுனாமி சிறீலங்கா அரசுக்குக் கிடைத்த 'லொத்தர்' பரிசாகிவிட்டது. எப்படியோ 'சிறீ லங்கா ஒரு தீவு இரு நாடுகள்' என்பதை சுனாமி உலகுக்கு உணரச் செய் துள்ளது.

தர்மம் மேலே மிதக்கும். அதர்மம் ஆழத்தைச் சென்றடையும் என்ற நம்பிக்கையில் நாம் மீண்டெழுவதில் முன்னேறுவோம்.

தொகுப்பும் அமைப்பும்
ஆசிரியர் குழு

ஒளிப்படங்கள்
மு.வளநாடன், எஸ்.சிவபாலன், விடுதலைப்புலிகள் புகைப்படப்பிரிவு.

ஓவியங்கள்
ட்ரொஸ்கி மருது, சோ.சி.கலைக்கதிர்

அச்சுப்பதிப்பு
நிலா பதிப்பகம்
கிளிநொச்சி

வெளியீடு
விடுதலைப் புலிகள்
கலை,பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்
தமிழீழம்.

இணையத்தில் வெளிச்சம்
WWW.Velichcham.com

தொடர்புகளுக்கு:
*வெளிச்சம்*
புதுக்குடியிருப்பு-04
முல்லைத்தீவு

*வெளிச்சம்*
விடுதலைப்புலிகள்
கலை,பண்பாட்டுக்கழகம்
மாவட்டச் செயலகம்
பொற்பதி வீதி, கோண்டாவில்
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212223897

# இயலாமை ஏற்படும்போது ஒடுக்குமுறையாளர் வெகுசனங்கள்மீதே இலக்கு வைக்கின்றனர்



இனவாரியாக எமது கழுத்தைத் திருகி எம்மைத் துன்பத்தின் எல்லைக்குத் தள்ளி, எமது உறுதிப்பாட்டை உடைத்து, எமது சுதந்திரவேட்கையைக் கொன்று, எம்மை மண்டியிடச் செய்வதுதான் எதிரியின் பிரதான நோக்கம். தமிழினத்தின் தேசிய ஆன்மாவை ஆயுத பலாத்காரத்தின் மூலம் அடிமைகொள்வதே எதிரியின் திட்டம். ஒடுக்குமுறையாளன் தனது ஆற்றாத்தன்மையால், தனது கையாலாகாத் தனத்தால், தனது பலவீனத்தால் வெகுசனத்திற்கு எதிராகத் தனது அடக்குமுறையை முடுக்கிவிடுகிறான். இது உலகளாவிய வரலாற்று உண்மை. முதிர்ச்சிபெற்று முன்னேற்றம் கண்டு வரும் எந்தவொரு விடுதலைப்போராட்டத்திலும், எதிரியானவன் தனது இயலாத்தன்மையால் வெகுசனம் மீது மூர்க்கமாகப் பழிதீர்த்துக்கொள்ளத் தயங்குவதில்லை. விடுதலைப்போராட்டத்திற்கு வெகுசன ஆதரவும் பங்களிப்பும் பெருகும்போது, வெகுசனத்திலிருந்து விடுதலைப்போராளிகளை இனங்காண முடியாதபோது ஒடுக்குமுறையாளன் வெகுசனத்திற்கு எதிராகத் திரும்புகின்றான். சிங்கள இனவாத அரசும் இந்த இறுதிக்கட்டத்திற்குத் தள்ளப்பட்டதால்தான் அப்பாவிகளாகிய உங்கள் மீது அதர்ம யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

நாம் தர்மத்திற்காக, தன்மானத்திற்காக, சுதந்திரத்திற்காக ஆயுதம் ஏந்தியிருக்கிறோம். எமது இலட்சியப் பயணமும் அதற்காக நாம் புரிந்துவரும் உன்னத தியாகங்களும் உங்களுக்குப் புரியும். ஆதலால்தான் நீங்கள் எம்மை அரவணைத்துக்கொள்கிறீர்கள், ஆதரவு அளிக்கிறீர்கள். எமக்குப் புகலிடம் தருகிறீர்கள், நாம் மக்கள் சமுத்திரத்தில் சங்கமமாகியுள்ளோம். இதனால் பொதுமக்களாகிய உங்களிடமிருந்து எம்மைப் பிரித்துவைக்கும் தந்திரோபாயங்கள் எதுவும் பயனளிக்கவில்லை. இதனால் விரக்தியுற்று ஆத்திரங்கொண்ட சிங்கள இனவாத அரசு வெகுசனம்மீது போர் தொடுத்திருக்கிறது.

**தமிழீழத் தேசியத் தலைவர்.**

(எனது மக்களின் விடுதலைக்காகவில் இருந்து)

1984 ஆம் ஆண்டு அன்றைய போர்ச் சூழலைப்பற்றிய தலைவரின் விளக்கம் இன்றும் பொருத்தப்பாடாகிறது.

# மாலிகா கவிதை

நீலக்கடலின் சேலை மீது
நெருப்பை வைத்தவனாரடா - எங்கள்
ஈழத்தாயின் மடியின் மீதில்
எண்ணை ஊற்றியதாரடா.

அன்று விடிந்தது பொழுது - கடல்
வந்து இடிந்தது அழகு.
திரைகள் எழுந்து கரைகள் கரைந்து
உயிர்கள் யமனின் பிடியில் - ஐயோ
உடல்கள் கரையின் மணலில்.

சின்ன மலர்களுக் கென்ன நடந்தது
வண்ணமிழந்தது எப்படி - நீ
உன்னையே தாயென நம்பியிருந்தவர்
உயிரையெடுத்தாய் தப்படி


கடலே! கடலம்மா - உன்
முடிவே பிழையம்மா
எடியே எங்களின் உறவை முழுதும்
எடுத்தாய் கொடிய பழியம்மா.

நிலவு நாளில் உலவும் போதில்
இருந்தாய் கோடியழகாய் - எம்மை
இழவு வீட்டில் இருத்தல் போல
முடித்தாய் உதிர்ந்தசருகாய்.

கடலே கடலம்மா - வந்து
தரையைத் தடவம்மா
நாங்கள் உயிர்த்த மனிதர்போல
நாளையுனது மடியம்மா.



சுனாமியின் சுவடு



**அ**ருளம்பலத்தார் இடிந்தே போய்விட்டார். வெளிவிறாந்தையில் இடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தபடி தூரத்தே அடி வளவில் தெரியும் கிணற்றையும் கண்முன்னால் கூட்டித் துப்பரவாக்கி வெளிக்கேற்வரை விரிந்து கிடக்கும் முற்றத்தையும் அடங்காக் கவலை யோடு பார்த்தபடி நிலைக்குத்தியிருந்தார். எல்லாம் முடிந்துவிட்டன.

"மாமா" என்றழைத்தபடி பாக்கியம் உள்ளி ருந்து வந்தாள்: "இந்தாங்கோ தேத்தண்ணி. வந்த திலிருந்து எதுவுமே வாய் நனைக்கவில்லை. இந்த அற்பவிடயத்திற்குப்போய் இப்படி இடிந்து போயிட்டியள். அவர் இந்த வீட்டையும் இடித்து விட்டு மோடேனா ஒரு அப்ஸ்ரெயர் கட்ட படம் போட்டிருக்கிறார், மாமா."

அவரின் இதயத்தில் சன்னம் பாய்ந்த மாதிரி யான உணர்வு.

"இதுக்காகவா பிள்ளை... என்னைக் கனடா விற்கு அனுப்பி வைச்சியள்?"

"என்ன மாமா கதைக்கிறியள்.? உங்கட கடைசி மோன் தம்பிராசா உங்களை அங்க வந்து ஒரு மாதம் தங்களுடன் இருக்குமாறு வற்புறுத் தினதால போனியள். பேரப்பிள்ளையள் 'ஒருக்கா வாருங்கோ கிறாண்ட் பா' என்றதால போனியள். இப்ப நாங்க வற்புறுத்தி அனுப்பினமாதிரிக் குற் றம் சொல்லிறியள் மாமா."

"ஒரு மாதம் அங்க இருந்தன். அதுக்குள்ள இவ்வளவும் செய்திட்டியள்?" என்றார் விரக்தி யோடு.

"உங்களுக்காகத்தான் மாமா அவர் இவற்றி னைச் செய்திருக்கிறார். துலாக் கிணத்தில நீங்க அள்ளிக் குளிக்கிறதைப் பார்த்துவிட்டு இந்த வய தில நீங்க கஷ்டப்படவேண்டாமென்றுதான் தண் ணித்தாங்கி கட்டிப் பைப் பூட்டி விட்டிருக்கிறார். தேத்தண்ணியைக் குடியுங்கோ.." அவர் நீட்டிய தம்ளரை வாங்கி காலடியில் நிலத்தில் வைத்தார். மருமகள் உள்ளே திரும்பிச் சென்றாள்.

அவர் விழிகள் சோகத்துடன் கிணற்றடியைப் பார்க்கின்றன. துலாவைத் தாங்கி நின்ற ஆடு கால் அங்கிருக்கவில்லை. அந்தப் பொளிகல்லுக் கிணற்றினையும் ஆடுகால் துலாவையும் அவரின் தகப்பனார் ஆறுமுகத்தார் இரசித்து இரசித்துக் கட்டுவித்தார். அவருக்கு அப்பொழுது வயது பத்து.

ஒருநாள் அதிகாலை அவர் பாயிலிருந்

யாழ்ப்பாணம் பாரீர் 4

# ஆடுகால் துலா

செங்கைஆழியான்

தெழுந்து வெளியில் வந்தபோது அடிவளவில் நிறைகுடம், விளக்கு என்பன தலைவாழை இலையில் வைக்கப்பட்டிருந்தன. சாணத்தில் பிள்ளையார் அறுகம்புல் தலையுடன் காட்சிதந்தார். சாஸ்திரியார் தேங்காய் உடைத்துக் கற்பூரம் காட்டிவிட்டு அரையிலிருந்த சால்வையைத் தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டு வலது கையில் பெருவிரலுக்கும் சின்ன விரலுக்குமிடையில் தென்னீர்க்கு ஒன்றினை வில்வளைவாகப் பிடித்தபடி வளவெல்லாம் நடக்கத் தொடங்கினார். அப்புவும் அவரும் அவருக்குப்பின்னால் நடந்தனர். ஓரிடத்தில், இப்பொழுது கிணறிருக்கின்ற விடத்தில் சாஸ்திரியார் தரித்து நின்றார்.

அவர் கரத்தில் விரல்களிடையே வில்லாகப் பிடித்திருந்த தென்னீர்க்கு அங்குமிங்குமாக ஏணையாடுவதுபோல ஆடியது.

"ஆறுமுகம் இங்க பார்... ஈர்க்காடுகிறதை... இங்கதான் நல்ல தண்ணியிருக்குது இங்க கிணற்றைக் கிண்டு."

"அங்கயும் ரெண்டு மூண்டிடத்தில ஆடினது.." என்றார் பத்துவயது அருளம்பலம்.

"ஓமோம்.. அங்க இப்படி ஆடவில்லை. இந்த இடத்தில திறமான ஊற்றிருக்குது. அதுதான் இப்படி ஆடுது. நம்பிக் கிண்டு ஆறுமுகம்."

தரைக்குக் கீழிருக்கிற அமிர்தத்தை ஈர்க்கின் மூலம் சாஸ்திரியார் எப்படிக் கண்டறிந்தார் என்பது அவருக்கு இப்பவும் புரியவில்லை. அதோ கிணறு வெட்டுதல் தொடங்கிவிட்டது. சாஸ்திரியார் காட்டிய மையத்தில் தறியடித்து அதில் ஒரு இழைக்கயிற்றினைக் கட்டிவிட்டு இழைக்கயிற்றினைப் பற்றியபடி சின்னவன் கனகனைப் பார்த்தான். கனகன் அப்புவைப் பார்த்தான்.

"பதின்மூண்டு முழம் கிண்டினால்தான் தண்ணி வரும்..." என்கிறார் அப்பு.

"அப்ப ஏழு முழத்தில கிணத்தின்ர சுற்று இருக்கவேணும். பொளிகல்லுக் கட்டு. விட்டுவீதியா நிண்டு கட்ட பதினான்கு முழத்தில சுற்று வரையடா சின்னவா.."

சின்னவன் முழங்கை அளவாகப் பதினான்கு தரம் இழைக்கயிற்றில் அளந்து அந்தத்தில் கட்டி அலவாங்கினைப் பிணைத்துக்கொண்டான். தறியிலிருந்து இழைக்கயிறு தொய்ந்து போகாத இழுவையோடு அப்படியே ஒரு சுற்றுச்சுற்றி வந்தான். கிணற்றின் வட்ட வடிவம் மண்ணில் கீறப்பட்டுவிட்டது. கிணறு தோண்டப்படுகின்ற வேலையை அப்பு இரசனையோடு அவதானித்து வந்தார். அவரும் அவரோடு சேர்ந்து கொள்வார்.

நான்கு அடிவரை கபிலநிற மேற்படை மண். அடுத்து இரண்டடிகளுக்குப் பெருங்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அதன் பின்னர் மக்கி. அதன்பின்னர் மக்கியின் இறுக்கமான பகுதி. இருபதடி ஆழம் வரையிற் கிண்டப்பட்டது.

"என்ன கனகு.. அசுகையைக் காணவில்லை.." என்று ஆறுமுகத்தார் கேட்கவும் சின்னவன் ஓங்கிப்போட்ட பிக்கான் 'கணீர்' என்று ஒலி எழுப்பியது. அப்புவின் முகம் மலர்ந்தது: "சரி சரி... கண்ணாடிப்பார் வந்திட்டுது... இனி ஊற்றுத் தான்..."

மரக்கப்பி பொருத்தி தேடாவளையக் கயிற்றின்மூலம் கிணற்றிற்குள்ளிருந்து அகழ்ந்த மண், மக்கி என்பன மேலே தூக்கி வகைவகையாகக் கொட்டப்பட்டன. தேடாவளையக் கயிற்றின் அந்தத்தில் மான்கொம்புக் கெவர் ஒன்று பொருத்தப்பட்டது. அனலைதீவு நார்க்கடகத்திற்கு மேலதிகப் பலத்திற்கு சாக்கு அணைத்துக் கடகமட்டையோடு பனை ஈர்க்கினால் இறுகக் கட்டப்பட்டது. அத்தோடு மான்கொம்புக் கெவரில் கொழுவிவிடுவதற்கு வசதியாக ஒவ்வொரு நார்க்கடகத்திற்கும் மட்டக்களப்புக்கயிற்றினால் தாங்கு தூக்கிக் கொழுவி பொருத்தப்பட்டது.

அவருக்கு இன்றும் நன்றாக நினைவு இருக்கிறது. கப்பியில் மாட்டப்பட்டிருந்த தேடாக்கயிற்றின் ஒரு அந்தத்தில் பிணைக்கப்பட்ட இழுதடியைப் பற்றி இருவர் இழுக்க கிணற்றிற்குள்ளிருந்து மக்கி நிரப்பிய கடகத்தினைக் கொழுவிக் காவியபடி மான்கொம்பு கெவர் மேலே வரும்.

கிணறு அகழப்பட்டுவரும் நிலையில் ஒரு நாள் பொளிகற்களுக்கான சுண்ணப்பாளங்கள் வண்டில்களில் கொண்டுவரப்பட்டு பறிக்கப்பட்டன. கல்தச்சர்களின் பொளியும் ஓசை பலநாட்கள் அந்த வளவில் எழுந்துகொண்டிருந்தது. எத்தனை நுட்பமாக அவர்கள் கிணற்றுவளைவைக் கணக்கிட்டு பொளிகற்களைப் பொளிந்தனர்.

கிணற்றில் ஊற்றுத் தென்பட்டதும் அவ்விடத்

தில் குதூகலம் பொங்கியது. அப்புவின் முகம் பிரகாசமாகியது. பொங்கலிட்டு ஊற்றுக்கங்கையை வரவேற்றமை மறக்கக்கூடியதன்று. பொளிகற்களைப் பொருத்திக் கிணறு கட்டிமுடிக்கப்பட்டது. மிதிகல்... சலவைக்கல்... தொட்டி என்பனவும் கிணற்றுக்கட்டும் பூர்த்தியாக்கப்பட்டன.

அடுத்த பணியை அப்பு தொடங்கியிருந்தார். ஆடுகால் அமைக்கின்ற பணி.

அருளம்பலத்தாரின் நெஞ்சு கனக்கின்றது. இன்று அந்த ஆடுகால் இல்லை. துலாவைத் தாங்குகின்ற ஆடுகால் பூவரச மரங்கள் அனைத்தும் தறித்து வீழ்த்தப்பட்டுள்ளன. அவ்விடத்தில் தண்ணீர்த்தாங்கி ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. "உங்களுக்காகத்தான் மாமா" என்கிறாள் மருமகள் பாக்கியம். அந்த ஆடுகால் அவர் அப்புவின் கரம்பட்ட பூவரச மரங்களைக் கொண்டது. அதில் அப்புவின் உழைப்பிருக்கிறது. மூச்சிருக்கிறது. அப்பு கிராமம் முழுவதும் அலைந்து தேடி வேலிவேலியாகத் தெரிந்தெடுத்து வெட்டி எடுத்துக்கொண்டுவந்த முற்றிமுறுகிய பத்து முழுப் பூவரசம் தடிகள் ஆடுகாலிற்காக அவரால் நாட்டப்பட்டன.

"கனகு, ஆடுகால் தடிகள் வளர்ந்து பலம் பெறும்வரை ஐந்தாறு காட்டுத் தடிகளையும் நட்டுவிடு..."

அப்பு சொன்னவாறு ஆடுகால் அமைந்தது. ஐந்தடி இடைவெளியில் இரண்டு வரிசையில் ஆடுகால் மரங்களும் பூவரசம் தடிகளும் நாட்டப்பட்டன. துலா அச்சுலக்கையைத் தாங்குகின்ற பக்க மரங்கள் தெரிந்தெடுத்து இழைக்கயிற்றினால் வெகுநேர்த்தியாகக் கட்டப்பட்டன. ஒவ்வொருநாளும் இழுவாளியால் கிணற்றிலிருந்து நீரள்ளி ஆடுகால் தடிகளுக்கு மறக்காமல் அப்பு நீர்வார்த்தார். பூவரசந்தடிகள் துளிர்த்தபோது அவர் பிரகாசமானார்.

இன்று அவை இல்லை. ஆடுகால் இருந்த இடத்தில் கொற்கிறீற் தூண்கள் எழுந்து நீர்த் தாங்கியொன்றினைக் காவி நிற்கின்றன. ஆடுகால் பூவரச மரங்கள் தறிக்கப்பட்டு ஓர் ஒதுக்கில் குவிக்கப்பட்டிருக்கின்றன.

ஐம்பது வருடங்களுக்குமேல் அவர்களுக்காக உழைத்த துலா கழற்றப்பட்டு முற்றத்தில் வெறுந் தரையில் புரட்டிவிடப்பட்டிருக்கிறது. அச்சுலக்கை கழற்றப்பட்டு ஒரு பக்கத்தில் கிடக்க துலா பரிதாபமாகக் கிடந்தது. அவருடைய அப்புவைத் தூக்கி வளர்த்தியதான பிரமை அவருக்கு ஏற்பட்டது. அந்தத் துலாவுக்காக அப்பு எடுத்த கரிசனை அவருக்கு இப்பவும் நினைவிலாடுகிறது.

பனந்துலாவினைப் போடுவதாக முடிவாகியதும் அரியாலை வேலுப்பிள்ளை அழைத்துவரப்பட்டார். அக்கிராமத்தில் அவர் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட துலாக்கள்தாம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கின்றன. அரியாலை வேலுப்பிள்ளையின் துலா என்பதை அத்துலாவின் எழுதகத்திலிருந்து எவரும் புரிந்துகொள்வர். துலாவின் நுனியில் சுற்றப்படும் துலாக்கயிறு நழுவாதிருப்பதற்காகச் சீவப்பட்டிருக்கும் சிற்பப் பொதிகைதான் எழுதகம். துலாவிலுள்ள எழுதகத்தினைப் பார்த்து அத்துலாவின் சிற்பன் வசாவிளானைச் சேர்ந்தவரா, நல்லூர் அரசடியைச் சேர்ந்தவரா, கைதடியைச் சேர்ந்தவரா என்பதை இனங்காண அப்புவால் முடியும்.

வேலுப்பிள்ளையை அழைத்துக்கொண்டு தனது பனந்தோப்புக்கு அப்பு போனார். அவரும் பிடிவாதமாகக் கூடவே போனார். அவர்களிடமிருந்து பல விடயங்களைக் கற்கமுடியும் என்பது அருளம்பலத்தாரின் நம்பிக்கை.

துலாவிற்கான பனை தெரிவுப்படலம் ஆரம்பமானது.

"இது எப்படி வேலுப்பிள்ளை?"

"இது மரவைப்பனை கமக்காரன். அடி ஒடுங்கி உச்சி பருத்திருக்குது பாத்தியளே? மரவைப் பனைகள் வலிமை குறைந்தன. துலாவிற்குச்சரிவரா."

ஐொம்பியின் கூடு



"அப்ப இது?"

"நீங்கள் என்னைச் சோதித்துப் பார்க்கிறியள்போல. அடியும் தலையும் ஒரே தடிப்பில் இருக்கிற செங்காலிப்பனையை ஆராவது துலாவிற்கு எடுப்பினமோ? துலாவிற்கு வால்கால் பனைதான் ஏற்றது. இந்தா பாருங்க இந்தப் பனையை." வேலுப்பிள்ளை ஒரு பனையைச் சுட்டிக்காட்டினார்: "அடிப்பனையின் சுற்று ஒன்றரை அடிக்கு மேலும் அப்படியே உச்சிவரை சீராக ஒடுங்கியும் இருக்கிற இந்த வால்கால் பனைதான் ஏற்றது..."

அந்த வால்கால் பனை தறிக்கப்பட்டு வீட்டுவளவிற்குக் கொண்டு வரப்பட்டது. துலா வடிவு பெறத் தொடங்கியது. எட்டு இரும்பு ஆப்புகளுடனும் இரண்டு மர ஆப்புகளின் துணையுடனும் வெகு அற்புதமாக அந்தப் பனை இருசம பாதிகளாகப் பிளக்கப்பட்டது. வேலுப்பிள்ளை ஓயாது பேசிக் கொண்டு வேலைசெய்தார்.



சுனாமியின் சுவடு

"பனையை இரு சம பாதிகளாகப் பிளப்பதற்குப் பயிற்சிதேவை தம்பி. கொஞ்சம் பிழைச்சாலும் துலாவின் சமநிலையும் இறுக்கமும் பிழைச்சுப்போகும்."

"எப்படித் துலாவின் நீளம் கணிப்பியள்?"

வேலுப்பிள்ளை சிரித்தார். "கிணற்றின் ஆழத்தைப் பொறுத்து நிச்சயிப்பம். உங்கட கிணற்றிற்கு பதின்னான்கு முழத்துலா தேவை. அச்சுலக்கைக்கு அடிப்பாகம் ஐந்தரை முழம் இருக்கும் அச்சுலக்கைக்கு அங்கால உச்சப்பகுதி எட்டரை முழமாக அமையும் கண்டியோ தம்பி."

பிளக்கப்பட்ட பனைமரம் வாச்சியைக் கொண்டு சீவப்பட்டது. கால்களை அகட்டி அவற்றின் இடையில் பனைமரப் பாதியை வைத்து வாச்சியால் சீவியபோது அவருக்குக் கூச்சமாக விருந்தது. எங்கு வாச்சி தவறி வேலுப்பிள்ளையின் காலைக் காயப்படுத்திவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. இரண்டு பாதியும் சீவி முடிக்கும்வரை அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. இடையிடையே கோடரியும் உளியும் பயன்படுத்தப்பட்டன. அச்சுலக்கை பொருத்தப்பட்டு இரண்டு பாதிகளையும் இணைத்து நெம்புகள் இறுக்கி கடையாணிகள் இறுக்கப்பட்டன.

துலாவேலை முற்றுப்பெற்றது. அப்பு கடைசியாகப் பார்த்தார். வேலுப்பிள்ளை கீராணியை எடுத்து அடித்துலாவிலிருந்து நுனித்துலாவரை இரண்டு பாதிகளும் பொருத்தியவிடத்தில் கீறியிழுத்துச் சென்றார். கீறாணி பிளவுப் பொருத்துள் சிறிதளவும் உள்ளிறங்கவில்லை.

"நல்ல திறமான வேலைப்பாடு வேலுப்பிள்ளை..."

அப்புவால் மெச்சப்பட்ட அந்தத் துலா இன்று முற்றத்தில் மண்ணிற் கிடக்கிறது. அவரின் இதயம் கனக்கிறது.

"மாமா... இதென்ன தேத்தண்ணி குடிக்காமல் ஆறிப்போய்க் கிடக்குது?, வேற ஊத்திவாறன்" என்றபடி குனிந்து தம்ளரை எடுத்தாள் பாக்கியம்.

"வேண்டாம் பிள்ளை. மனசு சரியில்லை..."

"போய்க் குளிச்சிட்டு வாருங்கோ மாமா..."

"எங்கை?"

"பாத்ரூமில்தான்.."

அவர் மருமகளை ஏறிட்டுப் பார்த்தார். துலாவை இறக்கி வாளியில் தண்ணிர் அள்ளி தலையில்

ஊற்றுகின்ற சுகம் எதிலும் வராது. அரையில் துவாயோடு அரைக்கிணற்று நீரை மொண்டு குளிப்பதுபோல வருமா?

முற்றத்தில் துலா கழற்றிப் போடப்பட்டிருக்குது. இப்படியே கிடந்தால் நிலக்கறையான் ஏறிப்படர்ந்து சிதைந்து போய்விடும். அரிகற்களில் தூக்கி வைக்கவாவது வேண்டும்.

அவர் எழுந்துசென்று அரிகற்களைத் தூக்கி வந்து முற்றத்திற் போட்டார்.

"என்ன மாமா செய்யிறியள்? அதைத்தான் விலைக்கு வித்திட்டம்."

அப்புவை விற்றதுமாதிரி உணர்வு. "என்ன?"

வெளிகதவைத் தள்ளித் திறந்துகொண்டு மாணிக்கன் வந்தான்.

"தங்கச்சி.. இப்ப ஆர் பழந்துலாவை வாங்கினம். முதலில ஓமெண்ட சதாசிவத்தார் இப்ப வேண்டாமாம். பம் வைச்சு தண்ணித்தாங்கி கட்டப்போகினமாம். விறகாகக் கொத்திப் போட்டு விடுகிறன் தங்கச்சி..."


மாணிக்கனின் கன்னத்தில் அருளம்பலத்தாரின் அறை மின்னல் வேகத்தில் படிந்தது. "போடா இங்க இருந்து.. நிண்டியண்டால் கொலை விழும்.."

அவர் அப்படியே தளர்ந்துபோய் சாய்வு நாற்காலியில் அமர்ந்து சரிந்துகொண்டார். கண்கள் கலங்கி நீரைக் கொப்பளிக்கத் தொடங்கின. எப்படி அயர்ந்துபோனார் என்பதோ எப்படி விழிப்பு வந்ததென்பதோ அவருக்குத் தெரியவில்லை. கண்களை விழித்தபோது மூத்தவன் கலங்கிய விழிகளுடன் அவர்முன் நின்றிருந்தான். முற்றத்து மண்ணில் கிடந்த துலா அரிகற்களில் தூக்கி வைக்கப்பட்டிருந்தது.

"மன்னியுங்கோ ஐயா. உங்களைப் புரியாமல் உங்களுக்கு நன்மை செய்யிறதா எண்ணிப் பிழை விட்டிட்டம். இனி அப்படி நடக்கமாட்டம். நீங்க வாழ்ந்த வீட்டை அப்படியே வைச்சிருப்பன். பரம்பரை பரம்பரையாக வைச்சிருக்கச் செய்வன். எழுந்து வாருங்கோ..."

அவர் தன் முகத்தினை அழுத்தித் துடைத்துக் கொண்டார்.

## அஞ்சலி



நாட்டுப்பற்றாளர்
வே.க.ஏரம்பு ஆசிரியர்

**தமிழ்மீதும், ஈழத் தமிழரின் தேசிய விடுதலைப்போராட்டத்தின்மீதும் இளமைக்காலம் தொட்டே அளவற்ற பற்றுறுதியும் ஈடுபாடும் கொண்டிருந்த நாட்டுப்பற்றாளர் வே.க.ஏரம்பு ஆசிரியர் அவர்கள் வெளிச்சம் வெளிவரத் தொடங்கிய காலத்திலிருந்தே அதன் வளர்ச்சியிலும் கரிசனை கொண்டிருந்தார். வெளிச்சத்தின் இடையறாத வாசகராக இருந்ததுடன் வெளிச்சம் உருவாகும் அச்சகம்வரை வந்து ஆலோசனைகள் வழங்கியும், சிலவேளைகளில் சரவைபார்க்கும் பணிவரை செய்தும் வெளிச்சத்தை வெளிச்சமாக்குவதில் ஒத்துழைப்பு நல்கினார். அங்கதம் கலந்த உரையாடலும், பழந்தமிழ் இலக்கியங்கள்மீது பரிச்சயமும், விடுதலைப்போராட்டத்தின்மேல் நம்பிக்கையும், போராளிகள்மீது அளவற்ற பாசமும், மக்கள் படும் துயர்கண்டு பச்சாதாபமும் கொண்டு எம்முடன் இவர் கலந்திருந்தார். தன் மனதில் உள்ள கருத்தை எவர் முன்னும் நேர்கொண்டெடுத்துரைக்கும் நேர்மையாளராகவும், கலை, இலக்கியங்கள்மீது காதல்கொண்ட தேடலராகவும் எம்முடன் உலவினார். வெளிச்சத்தைத் தாங்கிய விழுதொன்றின் இழப்பில் கலங்கியபடி அன்னாரின் பிரிவில் துயருறும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து பிரிவில் பெருந்துயரடைகின்றோம்.**

**வெளிச்சம்**

இக்கட்டுரை the Northeastern monthly என்ற ஆங்கிலச் சஞ்சிகையில் இடம்பெற்ற கட்டுரையின் தமிழ்பிரதி.

# தகர்க்கும் பொறிமுறையை இனங்காணல்

## நிலை மாற்றத்திற்கு தயாரற்ற சிங்களம் குறித்து.

யதீந்திரா

1

ஒரு ஒடுக்கப்பட்ட தேசத்தின் குடிமகன் என்ற வகையில் சிங்கள தேசத்தின் பழமைவாதப் போக்கை மையப்படுத்தி, சில கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள விழைகிறேன். நாம் வரலாற்றின் முக்கியமானதொரு காலகட்டத்தில் பிரவேசித்திருக்கிறோம். இத்தீவின் அமைதி குறித்து சிந்திப்போர் இச்சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தத் தவறின் ஏற்படப்போகும் விளைவுகள் பற்றிக் கூறிவருகின்றனர். ஆனாலும் சிங்களத்தின் அரசியல் போக்கில் ஏதும் மாற்றங்கள் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. சமீபத்தில் எதேச்சையாக தயான் ஜயதிலக எழுதிய கட்டுரையொன்றைப் படித்த போதுதான் இப்படியொரு தலைப்புக் குறித்துச் சிந்திக்க நேர்ந்தது. அது 1990ல் எழுதப்பட்ட கட்டுரை. (பொருளியல் நோக்கு இதழ் - 6). கட்டுரையில் தயான் ஜயதிலக புதிய சிந்தனையொன்றின் அவசியம் குறித்து எழுதியிருந்தார். அவர் ஒரு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தைத் தொட்டுக்காட்டியிருந்தார். “கொர்பச்சோவின் வார்த்தையில் கூறுவதானால் இலங்கை இன முரண்பாட்டில் எங்கோ ஒரு தகர்க்கும் பொறிமுறை இயங்கி வந்திருக்கிறது. நாம் ஒரு பழைய பாணியிலான சிந்தனையில் காலத்தைக் கடத்திவிட்டோம். அதுதான் எல்லாப்பிரச்சினைகளுக்கும் காரணம். இலங்கை மூன்றாவது மண்டலத்தின் புதிய சிந்தனைகளின் தொட்டிலாக இருந்து வந்திருக்கவேண்டும். ஆனால் அப்படியெதுவும் நிகழ்ந்ததாகத் தோன்றவில்லை. புதிய அரசியல் சிந்தனைக்கு அவசியமான முன் நிபந்தனைகள் எம்மிடமில்லை. புதிய சிந்தனையை எடுத்துவரக்கூடிய சமூக சக்திகள் எம்மிடம் இருக்கவில்லை.” ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால், தகர்க்கும் பொறிமுறையைப் பற்றிப் பேசிய தயான் ஜயதிலகவே ஒரு தகர்க்கும் பொறிமுறையாக செயற்படும் அவலம் நிகழ்ந்திருப்பதுதான். இன்று சிங்களத்தின் நலன்கள் குறித்துச் சிந்திக்கும் தீவிர இனவாத புத்திஜீவிகளில் தயான் ஜயதிலகவும் ஒருவர். தகர்க்கும் பொறிமுறையைப் பற்றிப் பேசிய தயான் ஜயதிலகவினால் ஏன் தகர்க்கும் பொறிமுறையை இனங்காணமுடியாமற் போனது? தானே அந்தத் தகர்க்கும் பொறிமுறையாகத் தொழிற்படும் அவலத்தைப் புரிந்துகொள்ள முடியாமற் போனது? தென் பகுதியிலிருக்கும் பெரும்பாலான சிங்கள புத்திஜீவித்துவ செயற்பாட்டாளர்கள், அந்தத் தகர்க்கும் பொறிமுறையை இனங்கானத் தவறி, தாங்களே தகர்க்கும் பொறிமுறையாகச் செயற்படுவதுதான் இத்தீவின் சாபக்கேடு.

இலங்கை இன முரண்பாட்டுத் தீர்வின் தகர்க்கும் பொறிமுறைதான் என்ன? இலங்கைத் தீவானது ஒரு பௌத்த சிங்கள நாடு. இது சிங்களவர்களுக்கு மட்டுமே வாக்களிக்கப்பட்ட பூமி. தமிழர்கள் அந்நியர்கள் வேண்டுமானால் எங்களின்கீழ் வாழ்ந்துவிட்டுப்போகலாம். இலங்கை ஒரு பல்லினத்தன்மையான தேசம் என்பதை ஏற்றுக்கொள்ளுமளவிற்கு சிங்கள செயற்பாட்டாளர்களால் முன்னேற முடியாமல் இருப்பதுதான் இன்றுவரை இன முரண்பாட்டு நிலைபெற்றிருப்பதற்குக் காரணம். இதுதான் தயான் ஜயதிலக போன்றவர்கள் பார்க்கத் தவறுகின்ற பழையபாணியிலான சிந்தனை. ஜயதிலக போன்றவர்களை இனவாத சகதிக்குள் அமிழ்த்தி வைத்திருப்பதும் அதே சிந்தனைதான். 1997ம் ஆண்டு சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் தென்னாபிரிக்காவில், தமிழர்கள் ஒரு பூர்வீகக் குடியல்ல. பூர்வீகக் குடியல்லாத சிறுபான்மைத்

தமிழர்கள் தனிநாடு கோருகிறார்கள் என்று கூறியதும் இந்த பழைய சிந்தனையின் அடிப்படையிற்தான். இதனை அடியொற்றி (ஜாதிக சிந்தனையின் பிதாமகர்) பேராசிரியர் நளின்.டி. சில்வா ஜனாதிபதி இன்னும் சிறப்பாகச் சொல்லியிருக்கலாம் என புகழாரம் சூட்டியதும் இந்த கருத்தியலின் அடிப்படையிற்தான். இந்த பத்தாம்பசலித்தனமான கருத்திலிருந்து சிங்கள தேசம் விடுபடாதவரை இத்தீவில் ஒருபோதும் அமைதியோ ஐக்கியமோ தோன்றப்போவதில்லை. ஆனால் இனியாவது சிங்களம் தன்னை மாற்றிக்கொள்ளக்கூடிய வாய்ப்பிருக்கிறதா? என்பதுதான் நம்முன்னுள்ள கேள்வி.


சலோமியின் சுவடு

2

சிங்களம் தனது பழமைவாதப் போக்கிலிருந்து விடுபடுவதற்கான, நம்பிக்கைக்குரிய எந்த அசைவையும் சிங்கள அரசியல் போக்கில் காணமுடியவில்லை. சிங்களத்தின் போட்டி அரசியலின் மையப்புள்ளியே, யார் அதிகம் தமிழர்களை ஏமாற்றுவது என்பதிலிருந்துதான் தொடங்குகிறது. பழைய பாணியிலான கருத்தில் சிங்கள மக்களை ஒன்றுபடுத்தி இத்தீவை, ஒரு எரியும் தீவாக வைத்திருக்கவே சிங்கள அரசியல்வாதிகளும் பெரும்பாலான சிங்கள புத்திஜீவித்துவ செயற்பாட்டாளர்களும், ஊடகவியலாளர்களும் விரும்புகின்றனர். ஒரு தனியரசு குறித்துப் போராடி வந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு அதற்கு மாற்றானதொரு தீர்வு குறித்து சிந்திப்பதற்கு இணங்கியிருக்கின்றனர். அதற்கு அடித்தளமாக ஒரு இடைக்காலத் தீர்வு *(ISGA)* யோசனையை முன்வைத்திருக்கின்றனர். பொதுவாக ஒடுக்கும் தேசம்தான் இறங்கிவர வேண்டும். ஆனால் மாறாக இங்கு ஒடுக்கப்பட்ட தமிழர் தேசம் இறங்கிவந்திருக்கிறது. அதனைப் பரிசீலிக்கக் கூடிய நிதானத்தைக்கூட சிங்களத்திடம் காணவில்லை.

ஒற்றையாட்சிக்கு மாற்றான எல்லாத் தீர்வு முறைகளையும் தனிநாடாகச் சொல்லிவந்த சிங்களம், இடைக்காலத் தீர்வு யோசனையையும் தனிநாடாக பிரச்சாரப்படுத்துகின்றது. நான் சிறு வயதில் பாட்டி வடைசுட்டகதை கேட்டிருக்கிறேன். என்னுடைய அம்மம்மா என்னைத் தூங்க வைப்பதற்காகவும், நான் சாப்பிடாமல் அடம்பிடித்தால் எனக்குச் சோறு ஊட்டுவதற்காகவும் அந்தக் கதையைச் சொல்லுவார். அந்தக் கதையை, இன்று என்னுடைய அம்மா எனது குழந்தைக்குச் சொன்னாலும் நாளை நான் எனது பேரக்குழந்தைக்குச் சொன்னாலும் கதையில் எந்த மாற்றமும் இருக்கப்போவதில்லை. வடை சுட்ட கதை போன்றதுதான் சிங்களத்தின் தனிநாடு குறித்த கருத்து நிலையும். 1957ன் பண்டா - செல்வா ஒப்பந்தமும் சிங்களத்தால் தனிநாட்டுக்கான அடித்தளமாகத்தான் சுட்டிக்காட்டப்பட்டது. 1965இன் டட்லி - செல்வா ஒப்பந்தமும் தனிநாடாகத்தான் சொல்லப்பட்டது. இன்று முன்னிறுத்தப்பட்டுள்ள இடைக்காலத்தீர்வுக் கோரிக்கையும் தனிநாடுதான். 57ன்

யோசனையை எதிர்க்க ஒரு ஜே.ஆர்.அணியினர், 65ன் ஒப்பந்தத்தை எதிர்க்க சிறிமா அணியினர். இத்தனைக்கும் 65இல் மாவட்டசபை பற்றித்தான் பேசப்பட்டது. இப்பொழுது இடைக்காலத் தீர்வு யோசனையை எதிர்க்க ஜே.வி.பி, ஹெல உறுமய அணியினர். இது சிங்களத் தேசியத்தின் முற்றுப்பெறாத நாடகம். பாத்திரங்கள் மாறியிருக்கிறதே தவிர கருவில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இங்கு ஒரு விடயத்தை பழமைவாதப் போக்கிலான சிங்கள செயற்பாட்டாளர்களும் அரசியல்வாதிகளும் பார்க்கத் தவறுகின்றனர். 57, 65 கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதுதான் 1968ல் சுயாட்சிக் கழகத்தின் தோற்றத்திற்குக் காரணமாகியது. 1976இன் வட்டுக் கோட்டைத் தீர்மானத் திற்கு வித்திட்டது. பின்னரும் பல்வேறு பேச்சுவார்த்தைகளிலும் சிங்களம் ஆரோக்கியமாகவும், அறிவு பூர்வமாகவும் நடந்துகொள்வதற்கு மாறாக தமிழர் தரப்பை ஏமாற்றிப் பிழைக்க நினைத்ததன் விளைவே தமிழ் மக்களை இலங்கையர்கள் என்ற நிலையிலிருந்து அந்நியப்படும்படி நிர்ப்பந்தித்தது. இலங்கைக் குடியரசின்கீழான ஒரு பகுதி தேசியவாதம் என்ற நிலையிலிருந்து தமிழரின் அரசியல் தனியான தேசியமாக பரிணமித்தது. இப்பொழுது இடைக்காலத் தீர்வு யோசனையையும் சிங்களத்தின் வழமையான பாணியில் கையாளப்படும் நிலையில் அடுத்து நடக்கப்போவதை முன்னுணர அதிக அரசியல் அறிவு வேண்டியதில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் அதிகாரப் பகிர்வு நாட்டைப் பிரித்துவிடுவதாகக் கூச்சலிடும் அதி தீவிர சிங்கள அரசியல் செயற்பாட்டாளர்களால் இத்தீவில் ஏற்பட்டிருக்கும் முழு அளவிலான பிளவை இனம்காண முடியாமல் இருப்பதுதான். ஒரு தசாப்தத்துக்கும் மேலாக விடுதலைப்புலிகளின் தலைமையில் தமிழ் மக்களுக்கான தனியரசு இயங்கிவருகிறது. இது சிங்களமும் அறியாத ஒன்றல்ல. இன்று தமிழர் தேசம் என்பதில் தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாக ஒன்றுபட்டிருக்கின்றனர். ஒருவேளை சிங்கள ஆட்சியாளர்கள் சட்ட பூர்வமான பிரிவினையைத்தான் விரும்புகிறார்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.



3

ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய நிலையில் நின்று நோக்கினால், இந்த இடத்தில் எம்மை ஊடறுக்கும் கேள்வி. சிங்கள அரசியலாளர்கள் இந்தப் பிரச்சனையை எரியும் பிரச்சனையாக வைத்திருப்பது தங்களது அதிகாரத்துவத்தையும் கதிரைப்பசியையும் போக்கிக்கொள்வதற்கென நாம் சமாதானம் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் சிங்கள மக்களால், அரசியல்வாதிகளின் பத்தாம் பசலித்தனத்துடன் எவ்வாறு ஒத்துப்போக முடிகிறது.? சிங்கள மக்களைச் சரியான திசைவழி நோக்கி நகர்த்தவேண்டிய (பெரும்பாலான) சிங்கள புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் ஏன் தொடர்ந்தும் தமிழர் விரோதப் போக்கையே கைக்கொண்டு வருகின்றனர்? அதிலும் குறிப்பாக ரொட்ஸ்கிய சார்பான இடதுசாரிப் பாரம்பரியம் வேர்கொண்டிருந்த சிங்களச் சூழலில் இந்த பழமைவாதப் போக்கிற்கு மாற்றான பலமான சிந்தனையை ஏன் கட்டியெழுப்ப முடியாமலிருக்கிறது? பழமைவாதப் போக்கிற்கு மாற்றான (உண்மைகளை) சிந்தனையை முன்னிலைப்படுத்தும் சிங்கள அரசியலாளர்களும் புத்தி ஜீவிகளும் சிங்கள மக்களால் தொடர்ந்தும் ஓரம்கட்டப்படுவது ஏன்? (உண்மைகளைப் பேசும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின, வாசுதேவ நாணயக்கார போன்ற இடதுசாரி அரசியலாளர்கள். பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட, DR.குமார் ரூபசிங்க போன்ற சில புத்திஜீவிகளை இந்த இடத்தில் நினைவுகொள்ளலாம்.)

உண்மையில் இந்த நிலைமைக்கான காரணத்தை தமிழ்நிலை நின்று மதிப்பிட்டால், பெரும்பாலான சிங்கள மக்கள் மத்தியில் (தம்மதீப, சிஹலதீப) பழமைவாதக் கருத்துக்கள் ஆழமாக வேரூன்றியுள்ளன. இந்நிலைமை சிங்கள மக்களை இன்னமும் (ஒரு வகையான கனவில்) ராஜரட்டை சிந்தனையில் மூழ்கடித்தும், இத்தீவு சிங்களவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட பூமி என்ற பழைய சிந்தனையிலும் பிணைத்துள்ளது. இந்தச் சிந்தனைதான், இன்றைய யதார்த்த நிலைமை கண்டிய யுகத்தையும்

தாண்டி பல்லின கலாசார நிலையை எட்டிய பின்னும், உலகமயமாக்கல் சூழலுக்கு ஆட்பட்ட பின்னரும், சிங்கள மக்களை அரசியல்வாதிகள் சமத்துவத்திற்கும் அதிகாரப் பகிர்வுக்கும் எதிரான போக்கில் வழி நடத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதாக இருக்கவேண்டும். இந்நிலைமை நீடிப்பது அடிமட்ட சிங்கள மக்களுக்கு எந்த நன்மையை ஏற்படுத்தாவிட்டாலும் மத்தியதர வர்க்க சிங்கள உயர் குழாமினருக்கு பல்வேறு நலன்களை அளித்திருக்கிறது. இதுதான் இன்றும் பெரும்பாலான சிங்கள புத்திஜீவிகளும் ஊடகவியலாளர்களும் தொடர்ந்தும் தமிழர் விரோதப் போக்கைத் தக்கவைப்பதில் அக்கறை கொண்டிருப்பதன் சூட்சுமம். ஆனால் யதார்த்தம் இந்த நிலையிலிருந்து சிங்கள மக்களை மீட்க வேண்டிய காலத்தேவையை உணர்த்திக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்தக் காலப்பணியை உணர்ந்து செயற்படக்கூடிய ஆரோக்கியமான அரசியல் தலைவரைப் பெறமுடியாமலிருப்பதுதான் சிங்கள மக்களின் துரதிஷ்டம்.

4

மீண்டும் சமகால அரசியலுக்கு வருவோம். இனி நடக்கப்போவதென்ன? என்பதுதான் இன்று இத்தீவை ஆக்கிரமித்திருக்கும் கேள்வி. விடை சுலபமானது. புலியைப் புல்லுத் தின்னவைக்கலாம் என எண்ணினால் மீண்டும் கடந்தகாலம் உதயமாகும். தற்போது விடுதலைப்புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்காலக் கோரிக்கை முற்றிலும் நியாயமானது. அதனை இத்தீவின் எதிர்காலம் குறித்து ஆழமாக சிந்திக்கும் முற்போக்கான சிங்கள புத்திஜீவிகளும் ஏற்றுக்கொள்கின்றனர். உண்மையில் இடைக்காலத் தீர்வு யோசனை, யுத்தத்தால் மிக மோசமான பாதிப்பிற்குள்ளான தமிழ் மக்களின் இயல்பு வாழ்வை மீளக் கட்டியெழுப்பும் நோக்கத்தைக் கொண்டது. உலகின் சனநாயக மரபுகளுக்கு இசைவானது. அதிலும் குறிப்பாக விடுதலைப்புலிகள் அமைப்பு இடைக்கால நகலை பரிசீலனைக்கு அப்பாற்பட்ட ஒன்றாக வாதிடவில்லை. இதிலிருந்து பேசுவோம், அடுத்த கட்டத்தை நோக்கிப் பயணிப்போம் என்றுதான் கூறிவருகின்றனர். ஆனால் அதைக் கூடப் புரிந்துகொள்ளும் நிலையில் சிங்களம் இல்லை. ஐக்கியப்பட்ட இலங்கைக்குள், மையப்படுத்தப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்து மக்களின் சமத்துவமான வாழ்வை உறுதிப்படுத்துவதற்குக் கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பம் இதுவென யதார்த்தநிலை விளங்கியோர் கூறிவருகின்றனர்.

இதுபற்றி தென்பகுதியின் பிரதான கருத்தியலாளரும் சிங்களச் சூழலில் உண்மைகளைப் பேச முன்வரும் சிலரில் ஒருவருமான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட அவர்கள் முக்கியத்துவம் வாய்ந்த சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

“தமிழினத்தின் பிரச்சினை 1949ம் ஆண்டிலிருந்து 1976ம் ஆண்டுவரை உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையிற்தான் இருந்தது. 1976ல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தீர்மானம் தமிழர் தேசியவாதப் போராட்டத்தை தனி ராச்சியம் என்னும் இலக்கை நோக்கித் திரும்பியது. இதன் கருத்து தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை வெளியக அர்த்தத்தில் புரிந்துகொள்ளும் நிலைமைக்குத் தமிழ்த்தேசியவாதம் முன்னேறியது என்பதாகும். இருபது வருடகால ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் பின்னர் தமிழ்த் தேசியவாத அரசியல் கருத்திட்டம் இப்பொழுது சுயநிர்ணய உரிமையை உள்ளக அர்த்தத்தில் புரிந்துகொள்ளும் நிலைக்குத் திரும்பியுள்ளது. சிங்கள அரசியல் சமூகத்தில் பலரைப்போலவே சிங்கள தேசியவாத புத்திஜீவிகள் பலருக்கும் இந்த விடயம் இன்னமும் புரியவில்லை. இலங்கையின் அரசியல் நிலை மாற்றம் குறித்து பாரதூரமாகச் சிந்திப்போர்


சுனாமியின் சுவடு

புரிந்துகொள்ள வேண்டிய விடயம் தமிழ்த்தேசிய வாத அரசியல் கருத்திட்டம் "இரு இனங்கள், இரு அரசு" என்பதற்கு நிலைமாற்றம் பெற்று வருகின்றது என்பதேயாகும்''. (சமாதான நோக்கு - 4, 2003)

சிங்கள தேசியவாத அரசியல் செயற்பாட்டா ளர்கள் இதனைப் புரிந்துகொண்டு செயற்படத் தவறின் நாடு மிகவும் மோசமான விளைவு களைச் சந்திக்கும் என்ற எச்சரிக்கைக் குரலும் உயன்கொட அவர்கள் கருத்தில் பொதிந்திருக் கிறது. அவரது சமீபத்திய கருத்தொன்றும் இவ் விடத்தில் நினைவுபடுத்திக்கொள்ளத்தக்கது. "தமி ழர் பிரச்சினைஐய ஒரு சிறுபான்மைப் பிரச் சினை யாக சிங்கள ஆளும் வர்க்கம் இன்னமும் பார்ப்பதுதான் சிக்கல் என நினைக்கிறேன். பேரா சிரியர் பீரிஸ் ஆகட்டும் சனாதிபதி சந்திரிகா ஆகட்டும் அவர்கள் தமிழ் மக்கள் பிரச்சினையை ஒரு சிறுபான்மையினரின் விடயமாகவே பார்க் கின்றனர். சிங்கள ஆளும் வர்க்கத்தின் புரிதலில் உள்ள வரையறை இதுதான்.... துரதிஷ்டவசமாக இலங்கையினுடைய யாப்பியல் சட்ட விவாதங் கள் சமஷ்டி என்கிற கருத்தை ஏற்குமளவிற்கு வளர்ச்சியடையவில்லை. அதாவது "தமிழ் சிறு பான்மை தேசிய குறிக்கோளின் அங்கமாகக் கொள்ளப்படவில்லை" (வீரகேசரி, நேர்காணல், 10.08.2003 - டி.சிவராம்) உண்மையில் சிங்களம் தமிழர்களை சிறுபான்மையாகப் பார்க்கும் நிலையானது, தம்மதீபக் கோட்பாட்டின் (ஒரு மொழி, ஒரு இனம், ஒரு மதம், ஒரு அரசு) நெகிழ்வு நிலையாகும். வேண்டுமானால் தமிழர் கள் வாழ்ந்து விட்டுப்போகட்டும் என்ற புரிதல்.

ஒட்டுமொத்தமாகப் பார்ப்பின் சிங்களத் தேசி யம் முன்னோக்கிப் பார்க்கக்கூடியதொரு நிலை யிலிருப்பதாக விளங்கவில்லை. பிரச்சனையும் இந்த இடத்திலிருந்துதான் தொடங்குகிறது. ஆனால் சிங்களம் முன்னோக்கிப் பார்ப்பதற்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தின் இடைவெளி படிப் படியாகக் குறைந்துகொண்டிருக்கிறது. ஆகக் குறைந்தது சிங்கள மக்களின் நலனைக் கருத்தில் கொண்டாவது சிங்களம் சிந்திக்கத் தயாராக வேண்டும். கடந்த காலத்தில், தொடர்ச்சியாக தமிழர்களின் கோரிக்கைகளை புறக்கணித்தே அவர்களை பிரிவினையை நோக்கித் தள்ளியது. மறுதலையாக சிங்கள மக்களின் நிலைமையை யும் மேலும் மோசமாக்கியது. இது மிகவும் தெளி வாகத் தெரியும் உண்மையாகும். யதார்த்தங் களை புரிந்துகொண்டு செயற்படத் தவறின் நாடு பிரியும் அல்லது நாடு அழியும். லியோநாட் வுல்பின் "விலேஜ் இன் த யங்கிள்" நாவலில் இடம்பெறும் கிராமத்தைக் காடு மூடுவதாகக் கதை முடிகிறது. வுல்பின் நாவல் குறிக்கும் நிலை இத்தீவிற்கு ஏற்படாமல் இருக்கட்டும். சமீபத்தில் க.வே.பாலகுமாரன் அவர்கள் நெல்சன்மண்டேலா தனது விடுதலைக்கான நெடும் பயணத்தில் குறிப்பிட்ட வரிகளை முன்னிறுத்தி தமிழர் தேசத் தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந்தார். (விடுதலைப்புலிகள் - ஓகஸ்ட், 2004) "ஒவ்வொரு தேசத்திற்கும் வரலாற்றில் ஒரு தருணம் வரும். அப்போது இரண்டே வழிகள்தான் எஞ்சியிருக் கும். ஒன்று பணிந்துபோதல் மற்றது எதிர்த்துப் போரிடுதல். நாம் பணிந்து போகப்போவ தில்லை. எதிர்த்துப் போரிடவே விரும்புகிறோம். எம்மிடம் இருக்கும் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி எதிர்ப்போம்."

இந்த வரிகளோடு நிறைவுசெய்வோம். இப் பொழுது துருப்புச்சீட்டு சிங்களத்தின் கைகளில்.




இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்

ஆசிரியர்: சி.அ.யோதிலிங்கம்.

வெளியீடு: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி, கொழும்பு 12.

# மீளுதல்

உடுவில் அரவிந்தன்

கிர்ரென்ற ரீங்காரம் இரவின் அமைதியைக் குலைப்பதுபோல ஒலித்துக் கொண்டிருக்கிறது. கவனத்தைக் குவித்தால் மட்டுமே கேட்கக்கூடிய கட்புலனாகா உயிரினங்களின் சிறுசிறு முணு முணுப்புக்களும் உடன் போட்டி யிடுகின்றன. கனதியான இருட் பின்னணியில் நிழலுருவங் களாய்த் தெரிந்த மரங்களில் இடையிடையே ஏற்படும் சலனம்.

இவையெல்லாம் உயிர்ப்பின் மெய்ம்மையை உணர்த்தியபடியிருக்கின்றன.

தலைமுதல் கால்வரை இழுத்துமூடிய போர்வைக்குள் நான் செயற்கையாக


சுனாமியின் சுவடு

ஏற்படுத்திய என்னுடைய இரவினுள் அமிழ்ந்துகொண்டிருக்கிறேன். மிக மெல்லிய இடைவெளியினூடாகவும் அத்துமீறி உள்நுழைந்து உயிரை உலுப்பக்கூடிய மாசிப்பனி உக்கிரமாக வீசும் இந்த நடு இரவில், அவன் கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதியொன்றில் ஆழ்ந்த உறக்கத்திலிருப்பான்.

நிம்மதியை இழந்துபோவதான நினைவுகளுடன் பயணப்பட்ட அவனுள், விதம்விதமான கனவுகள் இப்போது வியாபித்திருக்குமோ?


நீண்டகாலப் பின்நகர்வில் தற்செயலாகவே அவனைச் சந்தித்தேன். அந்தச் சந்திப்பும், அதனைத்தொடர்ந்த நிகழ்வுகளின் பதிவும் எண்ணப்பரப்பில் சுமையாக அழுத்த இலேசாகப் புரண்டு படுக்கிறேன்.

l l l

சூரியக்கதிர்கள் முறிந்துநொருங்கும் அழகிய மாலைப்பொழுதில் கிட்டு பூங்காவின் வாசலிலுள்ள பஸ்தரிப்பிடத்தில் காத்திருந்தேன். மாநகரசபை நூலகத்தில் இரவலாகப்பெற்ற இரு புத்தகங்களும் கையிலே கனத்தன.

பருத்தித்துறைவீதி இன்னமும் ஓயவில்லை. வீதியோரம் ஏழெட்டு ஓட்டோக்கள் வழமையான எதிர்பார்ப்புடன் காத்திருந்தன. அருகே உயரமான பீடத்தில் நின்ற குதிரையின்மீது 'சளுக்கென்று' அமர்ந்தபடி எதிர்ப்புறக் காவலரண்களை உற்றுநோக்கிக்கொண்டிருந்தான் சங்கிலியன். நல்லைக் கந்தனின் கோபுரத்தைத் தழுவியபடி மிதந்துவந்த ஒளிக்கிரணங்கள் அவனுக்கு மஞ்சள் வண்ணம் தீட்ட முயன்றன. இராணுவ ஆக்கிரமிப்பில் பழைய சிலையின் தலை உடைக்கப்பட்டதும். உரப்பையினால் மூடப்பட்டு சிறிது

காலம் அநாதரவாகக் கிடந்ததும், பிறகு 'மக்கள் மனங்களை வெல்லவேண்டும்' என்றநோக்கில் யாரையோகொண்டு இந்தச் சிலை பிடித்து வைக்கப்பட்டதும் நடந்து முடிந்த கசப்பான நிகழ்வுகள்.



வீதியால் செல்லும் எவரையும் ஒரு கணம் திரும்பிப் பார்க்கத் தூண்டும் ஈர்ப்பும் வேகமும் முன்னைய சிலைக்கிருந்தது. இப்போது 'கழுதைக்குமேல் கள்ளன்' இருப்பதாக என் நண்பனொருவன் கூறியது எவ்வளவு பொருத்தம் என எண்ணிக் கொண்டேன்.

நான் தனிநபராக நிற்பதால் மினிபஸ்கள் என்னைச் சுமக்கத் தயங்கியபடி விரைந்தன.

நீடித்த பெருமூச்சுடன் திரும்பினேன்.

மிக வேகமாக வந்த ஹைஎஸ் வாகனம் பக்கத்திலே கிரீச்சிட்டது. உள்ளிருந்து வெளிப்பிதுங்கிய அவனைக் கண்டதும் ஆச்சரியமானேன்.

சுரேந்திரன்!

கல்லூரியில் என்னுடன் ஒன்றாகப் படித்தவன். இப்போது ஊதிப்பெருத்து, முன்தலை வழுக்கையாகி, முழங்காலைத் தாண்டி நீண்ட அரைக்காற்சட்டையின் மேலாக வழிந்த தொந்தியுமாக அவன்.

உருவத்துக்குச் சற்றும் பொருந்தாத ரீ சேட்டும், விரிந்து பறக்கும் தலையுமாக உடனிறங்கியது அவனுடைய மனைவி போலும்.

குளுகுளுவென்று இரு குழந்தைகள் பின்னால் துள்ளிக்குதித்தன.

சுரேந்திரன் புகைப்படக்கருவியை எடுத்து ஏதோவொரு வேகத்துடன் காட்சிகளை விழுங்கத் தொடங்கினான்.

அவனை நெருங்கினேன்.

"சுரேந்திரன்!"

விருட்டெனத் திரும்பியவனின் விழிகள் ஓரிருநொடித் தயக்கத்தின் பின்னர் விரிந்தன.

"சிவா!"

இரண்டெட்டில் அண்மித்து என் தோளை வளைத்துக்கொண்டான். அவனது உடலிலிருந்து கிளம்பிய நறுமணம் என் நாசியை அரித்தது.

"நல்லா மாறிப்போனாய் மச்சான்!"

சுரேந்திரனின் குரலில் ஒட்டியிருந்த அனுதாபத்தை நான் இரசிக்கவில்லை.

முடிவற்று நீளும் போரின் வடுக்கள் என் தோற்றத்தில் மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கக்கூடும். காலத்தின் கனதியான ஓட்டத்தின் இடையிடையே வரும் நெகிழ்வான நிலைமைகளில் இம்மாறுதல்கள் பலரில் உள்ளொடுங்கி வெளித்தெரியாமல் போய்விடுவதுமுண்டு.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

அவன் வெகு உணர்வுபூர்வமாகத் தன் மனைவியிடம் என்னை அறிமுகப்படுத்தினான்.

அவளுடைய காதுகளுக்கிடையில் நீண்டிருந்த சிவப்புச்சாயம் இலேசான வெறுப்புடன் நெளிந்தது. பிள்ளைகள் பூங்காவை வேடிக்கை பார்க்கும் விறுவிறுப்புடன் நின்றிருந்தார்கள்.

"எங்கை இருக்கிறாய் மச்சான்?"

நிலைமையைச் சமாளிக்கும் அவசரத்துடன் சுரேந்திரன் குறுக்கிட்டான்.

"நீர்வேலியிலை முடிச்சனான், சந்திக்கு எதிர்வீடு"

"என்னுடைய மனுசியும் உன்ர ஊர்தான். வாழைக்குலைக் கந்தசாமியின்ர கடைசிமகள்."

"ஓ...!"

என் குரலில் கேலி இழைந்தது.

வாழைக்குலைக் கந்தசாமி!

கறைபடிந்த சேட்டுடன் பெரிய கரியர் பூட்டிய சைக்கிளில் லொடலொடத்தபடி திரிந்தவர். மலையாளத்தான் கடையில் பத்திரிகை படித்தபடி 'காட்டா' எனப்படும் கடுஞ்சாயம் போட்ட தேநீர் அருந்திக் கொண்டிருப்பார். ஆறு பெண்களில் மூத்தவள் வெளிநாட்டில் முடித்தபின் ஒவ்வொருவராகக் கரைசேர்ந்ததும், எல்லோரையும் தொடர்ந்து கந்தசாமியரும் மனைவியுடன் கனடா போய் நிரந்தரமாகத் தங்கியதும் தெரிந்த விடயம்.

"கடைசிப்பெண் என்றால் இது தேவகியா?"

மனிதர்களின் உருவையும், இயல்பையும் சிதைப்பதில் காலமும், சூழலும் எவ்வளவு ஒற்றுமையாக இயங்குகின்றன!

மாறுபட்ட உணர்வுகளின் கலவையாய் மனக்கொதிப்புக்கள் என்னுள்ளே தோற்றம் பெற்றன.

நீண்டநேரம் உரையாடுவதற்கு உகந்த நேரம் இதுவல்ல என்பதை மயங்கும் மாலைப்பொழுது நினைவூட்டியது.

"நாளைக்கு எல்லாரும் மத்தியானம் சாப்பிட வாங்கோ."

"கட்டாயம் வாறம் மச்சான்."



சுனாமியின் சுவடு

தொலைவிலே தெரிந்த மஞ்சள் பஸ் எங்களுக்கிடையிலான வார்த்தையாடல்களை முறித்தது. விடைபெற்று வீதியை விரைவாகக் கடந்தேன்.

மறுநாள் நண்பகல் சுரேந்திரனுடைய வாகனம் என்வீட்டு வாசலில் நின்றது.

அவன் மட்டும் இறங்கினான்.

என் முகத்தை எதிர் கொள்ள அவன் சங்

கடப்படுவது தெரிந்தது.

"தேவகிக்குச் சரியான தலையிடி. நேற்றிரவு படுத்தது. இன்னும் எழும்பேல்லை."

வாழைக்குலைக் கந்தசாமியரின் கடைக்குட்டியை நிச்சயமாக நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்பது அவனுக்குத் தெரியாது. வந்தவனின் பார்வை என் வீட்டுப் பூந்தோட்டத்திலும், அதற்கப்பாலும், வீட்டின் மேலும் மொய்த்தது.

"நல்ல வடிவா வைச்சிருக்கிறாய் மச்சான்! வளவு எவ்வளவு குளிர்மையாகக் கிடக்கு!"

இராணுவத்தின் மூர்க்கத்தனமான சூரியக்கதிர் முன்னகர்வில் என்னுடைய வீடும், நிறைமாதக் கர்ப்பிணிபோலக் குலைசுமந்த தென்னைகளும், அழகான பூந்தோட்டமும் அவலமாகச் சிதறிப் போக; எல்லாவற்றையும் ஆரம்பத்திலிருந்து மீளக்கட்டியெழுப்ப நான்பட்ட அவதி இவனுக்கெங்கே புரியப்போகிறது? இன்னமும் செலுத்தி முடிக்கப்படாத கடன்கள் கழுத்தை இறுக்கிக்கொண்டிருந்தாலும், மேலுக்குப் பூசிய புன்னகையுடன் என்னைப்போன்றவர்கள் உலாவருவதை இன்றும் காணலாம்.

இவற்றையெல்லாம் வெளிநாட்டில் இருந்து வருகின்ற இவனைப்போன்றவர்களிடம் கூறுவது தவறான கற்பிதங்களுக்கு இடமளிக்கக்கூடும்.

ஒவ்வொரு பூவாகப் பிடித்து இரசித்துக் கொண்டிருந்தவனை உள்ளே அழைத்துப் போனேன். எதிர்ப்பட்ட என் பிள்ளைகளிடம் கையிலிருந்த பையை நீட்டினான்.

"இரண்டுபேரும் தானோ?"

"ம்!"

இன்னொன்றின் படம் விறாந்தையின் மூலையில் தொங்கிக்கொண்டிருப்பதை நான் கூறவில்லை.

என் மனைவியை அழைத்து அறிமுகப் படுத்தினேன். புறங்கையிலும், முன் உச்சி மயிரிலும் மலர்ந்த ஓரிரு தேங்காய்ப் பூக்களுடன் வந்தவள், சுரேந்திரனிடம் தேவகியைப் பற்றி விசாரித்துவிட்டு மறுபடியும் உள்ளே போய்விட்டாள்.

இன்னமும் சமையல் முடியவில்லைப் போலும்.

வழமையான ஊர்ப்புதினங்களில் சற்று நேரம் கழிந்தது.

சமையலறையிலிருந்து வெளிப்பட்ட நண்டுக்குழம்பின் மணம் நாசிக்குள் நுழைந்து உமிழ்நீரைப் பெருக்கியது.

சாப்பிட அமர்ந்தோம்.

"எந்த வீட்டை போனாலும் ஆட்டையும், கோழியையும் சமைத்துத் தருகுதுகள். இதுகளைச் சாப்பிட்டு எவ்வளவு காலம் மச்சான்!"

எண்ணெய்ப் பளபளப்புடன் திரண்ட நண்டுக்காலை உடைத்து வாயில் வைத்து சர்ரென்று இழுத்தபடி சொன்னான்.

ஆடு, கோழி வாங்குவது என்னுடைய இந்தமாத வருமானத்தினை அபாயகரமாக மீறிய செலவாக இருக்கும் என்பதும், மாறுதலாக உணவு கொடுக்கவேண்டும் என்ற நோக்கமும் எனக்கிருந்ததால் மலிவானதும், சுவையானதுமான நண்டினைத் தெரிவுசெய்தேன்.

காரமான மிளகு இரசத்துடன் மதிய உணவை முடித்துக்கொண்டு கைகளைத் துடைத்தபடி வெளியே வந்தோம்.

முற்றத்தின் குளிர் நிழலிலிருந்த கதிரையில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்து தலையை நிமிர்த்தினான் சுரேந்திரன்.

தென்னோலைகளால் கிழிக்கப்பட்ட நீலவான் பரப்பை அவனுடைய விழிகள் ஊடுருவின.

ஆழமான பெருமூச்சொன்று அவனிட மிருந்து வெளிப்பட்டது.

"நிறைய இழந்திட்டம் மச்சான்! உயி ருக்குப் பயந்து ஒவ்வொரு நாடா ஓடி, இயந்திரம் மாதிரி உழைச்சுக்கொட்டி, ஒவ்வொருத்தராகக் கூப்பிட்டு... கடைசி யிலை கண்டது எதை? இப்படி நிம் மதியா இருக்கிற சந்தோஷம் எதிலையு மில்லை. உன்னைப் பார்க்கப் பொறாமை யாகக் கிடக்கடா!"

உள்ளொடுங்கிய உணர்வுகளின் வீச்சாக அவனுடைய வார்த்தைகள் வசமிழந்து வெளிப்பட்டன.

"சுரேந்திரன் நீ அந்த வாழ்க்கைக்குப் பழகிவிட்டாய். விடுபட நீ விரும்பினா லும் அது உன்னை விடாது. உன்ரை பிள் ளைகளும் விடாதுகள்."

"உண்மைதான் அதுகள் ஆறேழு வய திலேயே முத்திப் போகுதுகள். வரவர உச்சரிப்பும், மொழியும் மாறுது, சிலசில இடங்களிலை நடக்கிற இனக்கலப்புத் திருமணங்கள் இப்படியே தொடர்ந்தால், எதிர்காலத்திலை எங்கட மூதாதைகளின் வழித்தோன்றல்கள் இப்போது தமிழ்த் தேசத்தில் வாழ்கிறார்கள் என்று சொல் லக்கூடிய சந்ததிதான் உருவாகப்போகுது!.. நாங்கள் பிழை விடுகிறமோ எண்டு பய மாயிருக்கு மச்சான்."

எனக்குள் சுரேந்திரன்மீது பரிதாபம் மிகுந்தது. அதில் ஒருவித நெருடலும் இல்லாமலில்லை.

அவனைத் தேற்றும் நோக்கில் கூறி னேன்.

"சுரேந்திரன். இங்க நடக்கிற போராட் டத்திலையாகட்டும், பெரும்பாலான மீள் கட்டுமானங்களிலையாகட்டும் உங்கட பங்களிப்பு நிறைய இருக்கு. எத்தினை பேரின்ர வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக் குது. எவ்வளவு கலியாணங்கள் கைகூடி யிருக்குது. சிலவேளை நீங்கள் எல்லா ரும் திரும்பிவந்தால் நாங்களோ எங்கட சந்ததியோ நிச்சயம் எதிர்பார்த்திருப் பம்... போராட்டச் சூழலிலை உறுதியாக வாழ்ந்த உன்னதமான நினைவுகளோட..!"

சுரேந்திரன் மெல்ல எழுந்தான்.

நெருங்கிவந்து என்னைத் தழுவிக் கொண்டான்.

"போயிட்டு வாறன் மச்சான். இனி எப்பவோ?"

என் மனைவி பிள்ளைகளிடமும் விடை பெற்று நடந்தவனை வாசல்வரை சென்று வழியனுப்பினேன்.

வாகனத்தினுள் ஏறி அமர்ந்தவனின் விழிகளில் இலேசாக நீரின் பளபளப்புத் தெரிந்தது.

அவன் போய்விட்டான்.

அவனால் என்னுள் உற்பவிக்கப்பட்ட அதிர்வுகள் இன்னமும் அவ்விடத்தில் உலவுவது போன்ற உணர்வுடன் பிரமித் துப்போய் நின்றேன். அப்போதுங்கூட என்னுடைய மனப்பரப்பின் ஒரு மூலை யில் அந்த நெருடல் இருக்கத்தான் செய் தது.

1 1 1

யன்னலினூடாக நூலிழையான ஒளிக் கீற்றொன்று அறைக்குள் நுழைந்து இர வின் இரகசியங்களெல்லாம் அற்றுப் போனதைச் சொல்கிறது.

எழுந்து வெளியே வருகிறேன்.

மெல்லிய புகார்ப்பின்னணியில் காலை யின் ஒளிக்கலவி கண்களைக் கௌவு கின்றது.

வேலியோரம் ஒதுங்குகிறேன்.

உடைந்த ஓட்டுக்குவியலின் நடுவே நிமிர்ந்து நிற்கின்ற அந்த மல்லிகைச் செடி தான் எவ்வளவு அழகாக இருக்கிறது!

# நேர்காணல்

**கவிஞர் சு.வில்வரெத்தினம்**

## நேர்கண்டவர்

**யதீந்திரா**

**கவிஞர் சு.வில்வரெத்தினம் ஈழத்தின் தமிழ்க் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். தன் கவிதைகளால் இங்கு மட்டுமல்ல தமிழகத்திலும், புலம்பெயர்ந்த எம்மவர் மத்தியிலும் நன்கு அறியப்பட்டவர். தமிழ்த்தேசிய இலக்கியப் பாரம்பரியத்தில் முக்கியமானவர். இடையறுந்து போகாத இலக்கியச் செயற்பாட்டாளர். கவிதைகளை அரங்கில் எடுத்துரைப்பதில் ஆற்றல் மிக்கவர். இசையோடு பாக்களைப் பாடி சபைகவரும் திறனுடையவர். 'அகங்களும் முகங்களும்', 'காற்றுவெளிக் கிராமம்', 'காலத்துயர்', 'நெற்றிமண்', 'உயிர்த்தெழும் காலத்துக்காக' போன்ற கவிதைத் தொகுப்புகளை எமக்களித்தவர். அவரின் நேர்காணலை அவருக்களிக்கும் கௌரவமாகவே கருதி வெளிச்சம் வெளியிடுகிறது.**



**முதலில் உங்களது கவிதைத்துறை ஈடுபாடு பற்றிய ஆரம்பகால நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்?**

மிகச் சிறுவயதிலேயே எனது வீட்டுச் சூழல் எனக்கொரு வாசிப்புத் தளத்தை வழங்கக் கூடிய சூழலாக அமைந்திருந்தது. எனது வீட்டில் எனது சகோதரன், எனது மூத்த சகோதரி போன்றவர்கள் எல்லோரும் பல்வேறு திராவிடக்கழகச் சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஈழத்திலிருந்து வெளியான சுதந்திரன் பத்திரிகை, S.D.சிவநாயகம் அவர்களால் ஆசிரியத்துவம் வழங்கப்பட்டு வெளிவந்த 'தமிழின்பம்', 'தமிழோசை' போன்ற சஞ்சிகைகளையெல்லாம் வாசிப்பார்கள். இச்சூழல் எனது கவிதை சார்ந்த ஈடுபாட்டிற்கு காரணமாக இருக்கவேண்டுமென நான் இப்பொழுது நினைவு கொள்கிறேன். ஏனென்றால் இவ்வாறான சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதை, கட்டுரைகள் போன்றவை என்னை

ஈர்த்ததைவிட, கவிதைகள்தான் அதிகம் ஈர்த்தன. உதாரணமாக ஒன்றைச் சொல்வதானால், எனது பத்தாவது வயதிலேயே சுதந்திரன் பத்திரிகையில் வெளிவரும் பரமகம்ஷதாசனின் கவிதைகளை விரும்பிப் படிப்பேன்.

"ஏர்முனைக்கு நேர் இங்கு எதுவுமே இல்லை.
தமிழ் மொழிக்கு இன்னலென்றால் தமிழனே இல்லை
தந்தை செல்வர் வாழ்வினிலே என்றுமே தொல்லை"

என்றும் S.J.V செல்வநாயகம் அவர்கள் குறித்த பாடலை அந்தச் சிறுவயதிலேயே மெட்டமைத்து, தமிழரசுக் கட்சியின் புங்குடுதீவு காரியாலய திறப்புவிழாவில் பாடினேன். அப்பொழுது அதன் வேட்பாளராகவும், பின்னாளில் பாராளுமன்ற உறுப்பினராகவும் வந்த இ.ஏ.கந்தையா அவர்கள் தனது நீளமான மணிப்பேர்சில் இருந்து ஒரு பத்துரூபாவை எடுத்துத் தந்தார். பத்துரூபா என்பதல்ல விடயம். அந்த வயதிலேயே எனக்கு அவற்றின்பால் ஈடுபாடிருந்தது. அக்காலத்தில் பரமகம்ஷதாசனால் எழுதப்பட்ட பாடல்கள், தமிழரசுக்கட்சி மேடைகளில் தமிழர் தேசிய கீதம் போல் பாடப்படும். அவரது ஈழத்தமிழகம் என்ற கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட பாடலை நான் மிகவும் விரும்பிப் படிப்பேன். விபரம் அறியாமலேயே தமிழ்த் தேசியத்தின்பால் நான் ஈர்க்கப்பட்டேன். எனது வீட்டுச் சூழலும் ஓர் அரசியல் சூழல் நிலவியதும் இதற்கு காரணமாக இருக்கலாம். குறிப்பாக 'சுதந்திரனில்' வெளியாகும் பல தமிழ்த் தேசியக் கவிதைகளைப் படிப்பேன். பரமகம்ஷதாஷன், பாண்டியூரான், இணுவில் மூர்த்தி, சடாச்சரன், ஜீவா ஜீவரத்தினம், இராஜதுரை போன்ற பலரது கவிதைகளும் சுதந்திரனில் வெளிவந்தது. இவர்களில் பெரும்பாலானோர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களாவர். அப்பொழுது 'சுதந்திரனில்' வெளிவந்த 'கலைப் பூங்காவை' தொகுத்தவர் மஹாகவி என்பதை பின்னாளிலேயே நான் அறிந்து கொண்டேன். நான் கவிதைகளையெல்லாம் நறுக்கெடுத்துவைத்துப் படிப்பேன்.

> **"எனது முதலாவது கவிதையான 'சடைத்துப் பருத்து நிற்கும் அந்த ஆலமரத்தைப் பாருங்கள்' என்னும் கவிதை மல்லிகையில் பிரசுரமாகியது. துரதிஷ்டவசமாக அதன் பிரதி என்வசமில்லாததால் அது தொகுப்பில் இடம்பெற முடியாமற் போய்விட்டது. அந்த முதலாவது கவிதையில் இன்றும் ஈடுபாடு கொண்டிருக்கும் திரு.நந்தினி சேவியர் அவர்கள் அதனை அடிக்கடி சொல்லிக்காட்டுவார். இவ்வாறு தொடர்ந்த பயணத்தின் நீட்சிதான் இன்றும் தொடர்கிறது."**

பின்னாளில் நான் 'ஸ்கந்தவரோதய' கல்லூரிக்குப் பயில்வதற்காகச் சென்றபோது அந்தப் பழக்கம் கைவிட்டுப்போனது. ஆனால் அதிகமான நூல்களைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. கல்லூரி நூல் நிலையம் பல தரப்பட்ட நூல்களை உள்ளடக்கியதாக இருந்தது. அதேவேளை இங்கு பல பழைய கொம்யூனிஸ்டுகள் ஆசிரியர்களாக இருந்தனர். ஆசிரியர்களாக இருந்த வி.பொன்னம்பலம் அவர்களும், எனது ஊரவரான வித்துவான் சி.ஆறுமுகம் அவர்களும் 'கலைமதி' என்னும் சஞ்சிகையொன்றை வெளியிட்டு வந்தனர். அது கொம்யூனிஸ்ட் கட்சிக்குரிய சஞ்சிகையாகும். அதில் இடம்பெற்ற பல கவிதைகளையும் விரும்பிப் படித்தேன். பின்னர் புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கு வந்தேன். நான் அங்கு வந்த வேளையிற்தான் மு.தளையசிங்கம் அவர்களும் ஆசிரியராக வந்து சேர்ந்தார். அவர்களுடனான தொடர்பு எனது தேடலை மேலும் வளப்படுத்திய தெனலாம். தளையசிங்கத்தின் சகோதரனான மு.பொன்னம்பலம் அவர்கள் வீரகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகளில் வெளிவந்த மஹாகவி, தான்தோன்றிக் கவிராயர் போன்றோரது கவிதைகளை எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். பின்னர் நான் அவர்களின் முழுத்தொகுப்புகளையும் படித்தது மட்டுமல்லாமல் வாசிப்பார்வம்மிக்க சில மாணவர்களுடன் இணைந்து 'மோகனகிரி' என்ற வீட்டில் சிறு நூல்நிலையமொன்றை உருவாக்கினோம். அதில் பெருமளவு நான் பணம் கொடுத்து வாங்கிய நூல்கள்தான் இருந்தன.

தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்கள், கவிஞர்கள் பலரது நூல்களும் சேகரிப்பில் இருந்தன. குறிப்பாக இன்று மீண்டும் பேசப்படும் தமிழ்ஒளியின் முழுத் தொகுப்புகளையும் வைத்திருந்தேன். அதே போன்று முருகையன் அவர்கள் இணையாசிரியராக விருந்த நோக்கு என்ற சஞ்சிகையும் வாசிப்பிற்கு கிடைத்தது. இவ்வாறான ஈடுபாட்டின் காரணமாகத்தான் நான் கவிதைத் துறையில் பிரவேசிக்க நேர்ந்தது. அந்தப் பிரவேசம் நான் பயிலும் காலத்திலேயே நிகழ்ந்தது. அப்பொழுது வாணிவிழாவின் இறுதிநாளை

சகல பாடசாலைகளும் சிறப்பாகக் கொண்டாடு வார்கள். எனது பாடசாலையின் இறுதிநாள் வாணிவிழாவின்போது எனது நீண்ட கவிதை யொன்றை வாசித்தேன். அது ஏறக்குறைய 30 கவிதைகள் கொண்டதாகும். அந்தக் கவிதை களில் பாரதி, பாரதிதாசனின் தாக்கம் காணப்பட்ட தாகத் தெரிந்தாலும், பல கலைஞர்களும் தங்க ளது கலைத் தாயாகக் கொள்ளும் கலைமகளின் விழாவில் எனது கவிதை அரங்கேறியதில் மகிழ்ச் சியாக இருந்தது.

பின்னர் எனது முதலாவது கவிதையான "சடைத்துப் பருத்து நிற்கும் அந்த ஆலமரத்தைப் பாருங்கள்" என்னும் கவிதை மல்லிகையில் பிர சுரமாகியது. துரதிஷ்டவசமாக அதன் பிரதி என்வச மில்லாததால் அது தொகுப்பில் இடம்பெற முடியாமற் போய்விட்டது. அந்த முதலாவது கவி தையில் இன்றும் ஈடுபாடு கொண்டிருக்கும் திரு.நந்தினி சேவியர் அவர்கள் அதனை அடிக் கடி சொல்லிக் காட்டுவார். இவ்வாறு தொடர்ந்த பயணத்தின் நீட்சிதான் இன்றும் தொடர்கிறது.

**மு.தளையசிங்கம் அவர்களுடனான தொடர்பு பற்றிக் குறிப்பிட்டீர்கள். திரு.தளையசிங்கம் அவர்கள் ஓர் ஆன்மீக வயப்பட்ட கருத்து நிலை பற்றிப் பேசியவர். நீங்களும் அவரது**

> **" எல்லாவற்றினதும் உச்சமாக இன்று போர்க்கால இலக்கியம் என்னும் வகைப்படுத்தலை வந் தடைந்திருக்கிறோம். 80களுக் குப் பின்னர்தான் போர்க்கால இலக்கியம் என்னும் இலக்கிய வகை ஒரு தோற்றம் கொள்கி றது. "**

**வழித்தோன்றலாகக் கருதப்பட்ட ஒருவர் தான். உண்மையில் ஆன்மீகம் என்பது ஓர் அகநிலை உணர்வு வயப்பட்ட விடயமா கவே பார்க்கப்படுகிறது. ஆனால் உங்களது கவிதைகளில் அகநிலைச் சாய்வை அரிதா கத்தான் காணக்கூடியதாக இருக்கிறது. பெருமளவிற்கு புறச்சூழல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டதொரு சமூக உணர்வுதான் மேலோங்கியிருக்கிறது. இந்த இடத்தில் ஒரு குழப்பநிலையும் குறுக்கிடுகிறது. இந்த அடிப்படையில் உங்களது தத்துவார்த்த பின் னணிபற்றிச் சற்றுச் சொல்வீர்களா?**

ஏற்கனவே நான் குறிப்பிட்டபடி எனது இளவள திலேயே, கவிதைகள் எழுதுவதற்கு முன்பாக, எங்களது ஊர்சார்ந்த பல்வேறு சமூகப் பணி களில் ஈடுபாடு கொண்டிருந்தேன். நான் முன்னர் குறிப்பிட்டதுபோன்று எனது வீட்டுச் சூழலில் தமிழ்த் தேசியப் போராட்டம்சார்ந்த, தமிழரசுக் கட்சிசார்ந்த ஈடுபாடு இருந்தது. 1956இல் காலி முகத்திடலில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் எனது சகோதரரான கருணாகரன் என்பவர் கலந்துகொண்டிருந்தார். அதிலே பங்கு கொண்ட பலர் தாக்குதலுக்கு இலக்காகினர். எனது சகோதரரும் தாக்கப்பட்டார். அவர் தான் தாக்கப்பட்டதன் நினைவாக இரத்தக்கறை படிந்த மேலங்கியை நீண்டகாலமாக வைத்திருந்தார். நான் அதை அடிக்கடி எடுத்து பார்த்துக்கொள் வேன். பின்னாளில் 1961ஆம் ஆண்டு சத்தியாக் கிரகம் நடந்தபோது நானும் ஊர்வலமாகச் சென்று யாழ்ப்பாணக்கச்சேரிக்கு முன்னால் அமர்ந்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கு கொண்டேன். அப்பொழுது எனக்குப் பத்து அல் லது பதினொரு வயதிருக்கும். இவ்வாறான சூழல் எனக்குச் சிறு வயதிலேயே தமிழ்மீதான அபி மானத்தையும், தமிழ்த்தேசியம், போராட்டம் சார்ந்த ஈடுபாட்டையும் ஏற்படுத்தியது. பின்னர் நான் புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கு வந்த போது எனக்கு அத்தான் முறையான சைவப் புலவர் அவர்களோடு மிகுந்த ஈடுபாடு கொண்டி ருந்தேன். அவர் மூலமாகவே பழந்தமிழ் இலக்கி யங்களின்பால் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது. பெரிய புராணம், திருவாசகம், தேவாரம், கம்பராமாய ணம் போன்றவை எல்லாம் அவர் மூலமாகவே எனக்கு அறிமுகமாகின. இதன் பின்னரேயே மு.தளையசிங்கத்தின்மீது ஈடுபாடு ஏற்பட்டது. அவ ரின்மூலமாகவே நான் அத்வைதத்தின்பால் ஈடுபாடு கொள்வதற்கான தூண்டுதலைப் பெற் றேன். அதற்கு முன்னரே அவர் எனக்கு ஆசிரிய ராக இருந்தபோது அவருக்கும் எனக்குமிடை யில் வகுப்பறையிலேயே விவாதங்கள் நடை பெற்றிருக்கின்றன. இதன்போது எங்களது மரபு சார்ந்த பல விடயங்களை நான் சொல்லுவேன். என் மூலமாகவே அவர் சைவசித்தாந்தத்தின் பால் ஈடுபாடு கொள்வதற்கான தூண்டுதலைப் பெற்றார். மு.தளையசிங்கம் அவர்கள் இரத்தின

புரியில் இருந்து புங்குடுதீவுக்கு வந்தபின்னர் என்னுடைய ஊர், எனது உறவுகள் என்ற அடிப் படையில் சிந்திக்கத் தலைப்பட்டார். பழைய துறவுநிலை போன்று ஒதுங்கியிருந்து ஆன்மீகம் என்ற பெயரில் தியானம் செய்யும் நிலையிலி ருந்து விடுபட்டு சமூக அக்கறையோடு சமூகத் தளத்தையும் ஆன்மீகத்தையும் இணைக்கின்ற ஒரு பார்வையை அவர் வரித்துக்கொண்டிருந் தார். நாங்கள் பல்வேறு சமூகப் பணிகளில் ஈடு பட்டோம். இதற்கு முன்னோடியான நிகழ்ச்சி பற்றியும் இந்த இடத்தில் நினைவு கொள்கிறேன்.

ஒருநாள் எனது பாடசாலையின் மலசலகூடம் அடைபட்டுவிட்டது. அப்பொழுது அதைத் துப் பரவு செய்கின்ற வர்க்கத்தவர் எங்களுடைய தீவி லேயே கிடையாது. நானும் எனது நண்பர்களான சிறுகதையாளராக இருந்து மறைந்துபோன நாகேச தர்மலிங்கம், தற்போது திருகோணமலை யில் அதிகாரியாகக் கடமையாற்றும் சுந்தரலிங் கம், தற்போது ஆசிரியராக இருக்கும் சதாசிவம் ஆகியோர் இணைந்து மலசலகூடத்தைத் துப் பரவு செய்வது என்று முடிவெடுத்தோம். இது பாடசாலையில் பிரபலமாகப் பேசப்படும் விடய மாக இருந்தது. மாணவர்கள் சேர்ந்து மாணவர் களுக்குரிய மலசலகூடத்தைத் துப்பரவு செய்தது மு.தளையசிங்கம் அவர்களுக்கும் ஒரு தொடர்ச்சி யான சிரமதானப் பணி குறித்த தூண்டுதலை வழங்கியிருக்கவேண்டும். தொடர்ந்து விடுமுறை யில் மு.தளையசிங்கம் அவர்களுடன் இணைந்து பல்வேறு சிரமதானப் பணிகளில் ஈடுபட்டோம். பொதுக் கிணறுகளையும், பாவனைக்குக் கடின மாகக்கிடந்த ஏழு குளங்களையும் துப்பரவு செய் தோம். இந்த முயற்சியில் ஒடுக்கப்பட்ட மக்களை யும் இணைத்திருந்தோம். ஆலயக் கிணறு களைத் துப்பரவு செய்வதற்கு அவர்களை அழைத்துச் சென்றோம். அவர்களுக்கு ஆலய வளவினுள் வைத்து உணவு பரிமாற முற்பட்ட போது பிராமணர்கள் சண்டாள பிரதிஷ்டம் செய்த னர். உண்மையில் இந்நிலைமை எங்களுக்கு, ஒடுக்கப்பட்ட சமூகங்களின் பிரச்சினையை கையில் எடுக்க வேண்டுமென்ற தூண்டுதலை வழங்கி யது. இதற்கு அப்பால் தியானம் செய்யும் முயற் சியிலும் ஈடுபட்டு வந்தோம். இந்தக் காலம் நான் எனது குருநாதரைத் தேடியலைந்த காலம். திரு கோணமலை, மட்டக்களப்பு, திருகேதீச்சரம் எனப் பல இடங்களுக்கும் சென்றிருக்கிறேன். இறுதி யாக நந்தகோபாலகிரி என்னும் குருதேவரைச் சந்தித்து தீட்சைபெற்றதும் எனது தேடல் முற்றுப் பெற்றது.

எனது குருதேவர்கூட ஒரு தனிப்பட்ட சமயத் திற்கான அழுத்தத்தைத் தராமல் சர்வமதசங்கம் என்கின்ற ஒரு சர்வமத நோக்கைக் கொண்டிருந் தார். எந்தச் சமயத்தைச் சாராதவனாக இருந்தா லும் சமூக அக்கறை உடைய வழியில் ஒருவன் காலடி எடுத்து வைக்கிறான் என்றால் அவன் சரியான வழியிற்தான் பயணிக்கிறான் என்பது எனது குருதேவரின் கருத்து. எனவே அங்கும்



ஒரு விரிந்த தத்துவார்த்த பார்வைக்கான அடித் தளம்தான் ஆன்மீகத் தளமாக வாய்த்தது.

எனவே இதுவரை காலமும் இருந்துவந்த கீழைத்தேய துறவு மனப்பான்மை உடைய, சமூ கத்தைப் புறந்தள்ளிய ஆன்மீகப் பார்வை என்றில் லாமல், சமூகத்தோடு ஒன்றிணைந்த, சகல சம யங்களினதும் அடிநாதமாக இருக்கும் ஆன்மீகத் தில்தான் நான் அக்கறை கொண்டிருக்கிறேன். எனவே, எனது தத்துவார்த்த பின்னணிபற்றிச் சொல்வதானால் சமயம்சார்ந்த கட்டுப்பாடுகள், கட்டுக்கோப்புகள், நிறுவனக் கட்டமைப்புகள் சாராத, சமயத்தின் அடிநாதமாகிய ஆத்மார்த்த தன்மையை வரித்துக்கொள்ளுதல் என்னும் உபா யமாகும். ஆத்மார்த்தம் என்பது சமூகவியல் யதார்த்தத்தைப் புறந்தள்ளிவிடும் தன்மையுடை

யதல்ல. அதனையும் இணைத்துக்கொள்ளும் தன்மையுடையதாகும். இதன் காரணமாகத்தான் நீங்கள் கூறியதுபோன்று என்னுடைய கவிதைகளில் சமூக அக்கறை மேலோங்கியிருக்கிறது. சமூக உணர்வு, சமூகவிடுதலை என்பவற்றில் மிகவும் அக்கறையுடையவனாகவே எனது படைப்புகளை வெளியிட்டு வருகிறேன்.

விடுதலை என்பது சமூக விடுதலை, ஆன்மீக ரீதியான விடுதலை என்ற அகன்ற பரிமாணத்தை உடையதாக இருக்கவேண்டும். ஆனால், பொதுவாக எந்தப் படைப்பாளிகளுக்கும் தத்துவார்த்த பார்வை என்பது ஒரு அமானுசியத் தன்மையைக் கொடுக்கும். முருகையன் அவர்கள் பாரதிபற்றிக் குறிப்பிடும் போது அழகாகக் கூறுவார். "சாதாரண சம்பவங்கள்கூட தத்துவத்தை ஆதாரமாக்கிக் கிடத்தல் அதிசயம்தான்." பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இடையிலான பிரதான வேறுபாடு பாரதியாரைப் போன்று பாரதிதாசனால் ஒரு சரியான தத்துவார்த்த பின்னணியையோ, சரியான சமூகவியல் தரிசனத்தையோ முன்னிறுத்த முடியாமற் போய்விட்டது.



ஆனால், நாங்கள் மேற்கத்தைய படைப்பாளிகளை எடுத்துப்பார்த்தால் அவர்கள் எந்தத் தத்துவத்தையும் சாராத தனியன்களாக இருந்தபோதும் அவர்களது எழுத்தில் முதலாளித்துவம் முன்னிறுத்தும் தனிமனிதவாதத்தை இனம் காணக்கூடியதாக இருந்தாலும் அவர்களது அறிவுசார் தேடல் அவர்களுக்கு தங்களது படைப்பை நகர்த்திச் செல்வதற்கான அடித்தளத்தைக் கொடுக்கிறது. ஆனால் தமிழில் அல்லது கீழைத்தேசச் சூழலில் அவ்வாறான நிலைமையில்லை. ஆனால், நாங்கள் பாரதி காலத்தில் பார்ப்போமானால், தமிழில் பாரதி, வங்காளத்தில் ரவீந்திரநாத்தாகூர், இஸ்லாமியத்திற்கும் மானுடத்திற்கும் பாலம் அமைத்த இக்பால் போன்ற கவிஞர்களிடம் அவ்வாறானதொரு தத்துவ தர்சனம் இருந்தது. அதுதான் அவர்களது படைப்புக்களுக்கு ஓர் அமானுஸ்யத் தன்மையைக் கொடுத்தது. எனவே, எந்தப் படைப்பாளியும் உதிரியான சம்பவங்களை, வெறுமனே சம்பவங்களின் விஸ்தரிப்புகளாக மட்டும் பார்க்காமல், அந்தச் சம்பவங்களினூடே சரடுடிக் கிடக்கும் ஒரு பார்வைப் பின்புலத்தைத் தொடும்போதே அந்தப் படைப்புக்கு ஒரு கனதி கிடைக்கின்றது. இந்த அடிப்படையிற் தான் நான் எனக்கான தத்துவார்த்த பின்னணியை வரித்துக்கொண்டிருக்கிறேன். அடிப்படையில் நான் ஓர் ஆன்மீகக் கருத்துநிலை சார்ந்தவனாக இருக்கும் போதும், எனது படைப்புக்களில் சமூகவியல் யாதார்த்தத்தைப் புறந்தள்ளாதவனாகவும் இருக்கிறேன். இந்த அடிப்படையிற்தான் நீங்கள் எனது கருத்துநிலையையும் படைப்புநிலையையும் பார்க்கவேண்டும்.

**80களுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியல் ஒரு நிலைமாற்றத்திற்குள்ளாகியது. ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெறுதல், மிதவாத அரசியல் செயற்பாடுகளின் வீழ்ச்சி, வலுவடைந்து சென்ற அரச ஒடுக்குமுறை, யுத்தம் எனப் பல்வேறு நிலைமைகள் தோன்றின. இலக்கியத்தைப் பொறுத்தவரையில் இந்நிலைமைகள் உடனடியாக கவிதைகளில்தான் எதிரொலித்தன. உண்மையில் 80களுக்குப் பின்னர்தான் போர்க்கால இலக்கியம் என்ற ஒரு புதியவரவு நிகழ்ந்தது. இன்றுவரை இயங்கிக்கொண்டிருக்கும். ஒரு கவிஞரென்ற வகையில் விடுதலைப்போராட்டம் அதன் பக்கவிளைவுகள் என்பவற்றால் தாக்குண்டு தகர்ந்துகொண்டிருக்கும் ஈழத்து இலக்கியப் போக்கை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

80களுக்குப் பின்னரான வளர்ச்சி என்னும் போது திடீரென நாங்கள் அப்படிச் சொல்லுவது சரியான பிரிகோடாக அமையாது. ஏனென்றால் தமிழர் தேசியப் பிரச்சினை என்பது எப்பொழுது எங்கே எவ்வாறு மையங்கொண்டது என்பதை நாங்கள் துல்லியமான அளவிடுகைக்கு உட்படுத்தமுடியாது. கிட்டத்தட்ட இலங்கைக்கு சுதந்

திரம் வழங்கப்படுவதற்கு முன்பாகவே இந்தப் பிரச்சினை தோன்றிவிட்டது. இதனைச் சரியாக மதிப்பிடுவதானால் சிலவேளை நாம் மலையகத்தை நோக்கியும் பிரயாணம் செய்யவேண்டி வரும். உதாரணமாக நடேசையர், மீனாட்சியம்மாள் ஆகியோரது படைப்புகளை ஆராய்ந்தால், அவர்கள் மலையக மக்கள்மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகப் பல கவிதைகள் எழுதியிருப்பதைக் காணலாம். உதாரணமாக இந்தப் பாடலைப் பாருங்கள்.

*சிங்கள மத்திரிமாரின் கூற்று*
*மிகவும் சீர்கெட்டதென்று சாற்று*
*இந்தியத் தமிழ் மக்களின் உணர்வு*
*பாய்ந்துவரும் நெருப்பு*

இந்த வரிகளில் சிங்கள மந்திரிமார் என அழுத்திக் கூறுவதும், தமிழ் மக்கள் எனக் குறிப்பிடுவதும் ஒருவகையில் தமிழ் - சிங்கள பிரிகோட்டைச் சுட்டிவிடுகிறது. 40களுக்கு முந்தியே இது நிகழ்கிறது. 40களில் நடேசஐயரின் தொழிற்சங்கவாதம்கூட வர்க்கம் சார்ந்த பார்வையை உள்ளடக்கியிருந்தாலும் அவற்றுக்குள் ஒரு தமிழ்த்தேசிய அம்சமும் ஒளிந்திருந்தது. இந்த உண்மையை நாங்கள் மனதில் இருத்த வேண்டியிருக்கிறது. அதேபோன்றுதான் தொழிற்சங்கங்களிலிருந்து தமிழ்த்தொழிற்சங்கங்கள் தோன்றியதையும் நோக்கலாம். பாட்டாளி வர்க்க சிந்தனைக்குள் இனவாதம் புகுந்துகொண்டபோது தமிழ்த்தேசிய தொழிற்சங்கம் உருவாக்கவேண்டிய தேவை உருவாகியது. குறிப்பாக கோடீஸ்வரனின் வழக்குக்கூட தொழிற்சங்க ரீதியான போராட்டம் என்பதனூடான தமிழ்த்தேசிய கோட்பாட்டுப் போராட்டமாக இருப்பதையே நாம் காணலாம். எனவே தமிழ்த் தேசியத்தின் தோற்றப்புள்ளி எது என்பது நாம் அதனை எவ்வாறு பார்க்கிறோம் என்பதிற்தான் இருக்கிறது. தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டம் வெடித்தெழுவதற்கு முன்பாகவே, மொழிசார்ந்த ஒடுக்குமுறைக்கும் நில அபகரிப்புக்குமெதிரான குரல்களும் மேலெழுகின்றன. மொழி ரீதியான ஒடுக்குமுறைக்கு முன்பாகவே தமிழ் நிலத்தின் மீதான அபகரிப்பு **D.S.**சேனநாயக்காவால் தொடக்கிவைக்கப்படுகிறது. அவர் மொழி ஒடுக்குமுறையை ஒத்திப்போடுகிறார். உண்மையில் இந்தச் சூழலைப் பின்புலமாகக் கொண்டு சில படைப்புகள் வெளிவந்திருக்கலாம். நாம் ஒரு மீள்தேடலுக்கு ஆட்பட்டாற்தான் அதனைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் 56க்கு முன்பின்னாக சிங்களம் அரசகரும மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்ற வாதம் மேலெழுகிறது. இந்நிலைமை மொழிசார்ந்தகூறுகள் புதைந்து கிடக்கும் பண்பாட்டின்மீதான ஆதிக்கமாகப் பார்க்கப்படுகிறது. எனவே முதலில் தமிழ்த் தேசிய எழுச்சியான பண்பாட்டு நிலையிற்தான் வடிவம் கொள்கிறது. இதனை நாம் பண்பாட்டுத் தேசியம் முனைப்புப்பெற்ற காலம் என்று சொல்லலாம். இந்தப் பின்னணியில் பல கவிஞர்கள் தோன்றினர். குறிப்பாக இன்றிருக்கும் யாழ்ப்பாணத்தின் முதிய கவிஞரான சச்சிதானந்தம், முருகையன், மஹாகவி, நீலாவணன் அதன் பின்னர் வந்த மு.பொன்னம்பலம், மட்டக்களப்பைச் சேர்ந்த பாண்டியூரான், வி.கே.இராசதுரை, எருவில் மூர்த்தி போன்ற பலரும் இக்காலத்தின் முக்கியமானவர்கள். சச்சிதானந்தம் அவர்களின் பாடல்கள் பாரதிதாசனின் பாடல்களாகப் பேசப்படும் அளவுக்கு தமிழ்த் தேசிய அம்சம் கொண்டவை. இந்தக் காலத்திற்தான் தமிழகத்தில் இந்திமொழித் திணிப்பும் இடம்பெறுகிறது. எனவே அங்கும், இங்கும் மொழி சார்ந்த பண்பாட்டுநிலை எழுச்சி சமகாலத்தில் இடம்பெறுகிறது. தமிழகத்தில் மாநில சுயாட்சி அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததால் அங்கு நிலப்பறிப்புப் பிரச்சினை இருக்கவில்லை.

ஆனால் எமது சூழலில் நிலப்பறிப்பு, மொழிப்பறிப்பு, பின்னாளில் அதன் நீட்சியாக அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டபோது தமிழ்த்தேசியம் கூர்ப்படைந்தது. உதாரணமாக கொல்வின் **R.D.** சில்வா **LSSP**யில் இருந்தபோது மொழிப்பிரச்சினையை மையப்படுத்தி ஒரு கருத்தை வெளியிட்டார். "ஒரு மொழி இருநாடு, இரு மொழி ஒரு நாடு". இந்தக் கருத்தை மனதிற்கொண்டு பண்பாட்டுத் தேசியத்தின் வழியாக இரு நாடுகள் தோன்றுவதற்கான பிரிகோட்டை காசி ஆனந்தன் போன்றோரது கவிதைகள் வெளிக் கொண்டுவந்திருக்கின்றன. அந்த வகையிலேயே அவரின் 'தமிழன் காவியம்' என்னும் குறுங்காவியமாகச் சொல்லப்படும் படைப்பு முக்கியமானது. அவற்றில் பாலாறு, தேனாறு ஓடுகின்ற கற்பனா பூர்வமான அம்சங்கள் இருந்தபோதும்கூட, அவ்வாறானதொரு வளமான பூமிக்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்ற தமிழர் ஏன் தமக்கென்றதொரு நாட்டுக்கு உரித்தானவர்களாக இருக்கக்கூடாது என்ற கருத்தை அக்காவியம் வெளிப்படுத்தி நின்றது. உண்மையில் இது அந்தநேரத்தில் என்னால் மிகவும் விரும்பிப் படிக்கப்பட்டதொரு படைப்பும்கூட. எனவே பண்பாட்டு நிலையில் தேசியம் அடையாளம் காணப்பட்டபோதும்

எங்களுக்கானதொரு பிரதேசம் தேவை என்னும் கருத்தை வெளிப்படுத்தும் படைப்புக்கள் தோன்றியிருந்தன. கவிதையில் காசிஆனந்தனை இனம் காட்டுவதுபோன்று மு.தளையசிங்கத்தின் 'தனிவீடு' என்னும் நாவலை நாவல் துறைக்கு உதாரணமாகச் சொல்லலாம். அதேபோன்று தளையசிங்கம், வரதர் போன்றோர் எழுதிய பல சிறுகதைகளில்கூட இதனை நாம் இனங்காணலாம்.

எனினும் இந்நிலைமையானது நாம் ஆயுத ரீதியான போராட்டத்தைக் கையில் எடுத்த பின்னர்தான் எங்களது உயிரோடு சம்பந்தப்பட்ட பிரச்சினையாக மாறுகின்றது. இந்தப் பின்னணியில் அதுவரை மொழிப்பிரச்சினையாக, நிலப் பிரச்



சினையாக இருந்த நிலைமைகள் மாறி எல்லாவற்றையும் உள்வாங்கிக்கொண்ட எமது மக்களின் வாழ்வியல் பிரச்சினையாக உருக்கொள்கிறது. இந்தச் சூழலை உட்செரித்துக்கொண்ட போதுதான் எங்களது படைப்புக்கள் நடைமுறை சார்ந்த ஒன்றாக மாற்றம் காண்கிறது. இந்தப் பின்னணியில் கவிதைகளின் போக்கைப் பார்ப்போமானால் முக்கியமாக மூன்றுவகையான மாற்றத்தைச் சொல்லலாம். ஒன்று உள்ளடக்க ரீதியான மாற்றம், நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று போராட்டம் சார்ந்து பல இளைஞர்கள் போராட்ட அணிகளுக்குள் இடம்பெறுதல். போரின் பக்கவிளைவாக இடப்பெயர்வு, அகதிவாழ்வு எனப் பல இன்னல்களை மக்கள் எதிர்கொள்ளுதல். இவைகள் எல்லாம் கவிதையின் பேசுபொருளாகியபோது இதுவரையிருந்த நிலைமாறி உள்ளதை உள்ளபடி இரத்தமும் சதையுமாகச் சொல்லும்நிலை தோன்றுகின்றது. மொழிக்கையாள்கையில் மாற்றம் நிகழ்கிறது. சேர. சோழ, பாண்டியன் என்னும் கற்பனா ரீதியான பேசுகைநிலை மாறிச் சாதாரண மனிதர்களிலிருந்து தோன்றிய போராளிகளைப் பற்றிப் பேசவேண்டிய தேவை எழுகிறது. அவர்களின் தியாகங்கள் பேசுபொருளாகின்றன. நாம் கனவிலிருந்து யாதார்த்தத்திற்கு வருகிறோம். இதற்கு செழியனின் 'மரணம்', சேரனின் 'யமன்' போன்ற தொகுப்புகள் குறிப்பிடக் கூடியவையாகும். இன்னொரு முக்கிய மாற்றம் வடிவமாற்றம். பேசுபொருள்கள் மாறியபோது, அதைச் சொல்லும்முறை மாறியபோது, வெளிப்படுத்தும் வடிவமும் மாறுகிறது. இந்த இடத்தில் மு.தளையசிங்கம் அவர்கள் குறிப்பிடும் 'மெய்யுள்' என்பதை நினைவுறுத்தலாம். அதாவது, உள்ளும், புறமும் மெய்யாக இருப்பதே மெய்யுள். இதை உணர்ந்துதான் இவ்வாறான வடிவ மாற்றங்கள் நிகழ்ந்ததெனச் சொல்லமுடியாவிட்டாலும் ஒரு புதிய வடிவம் எழும் என்பதற்கு அவரின் கருத்து உதாரணமாக இருக்கிறது. இந்த வகையில் நிலாந்தனின் 'வன்னிமாண்மியம்', 'ஓ! யாழ்ப்பாணமே' போன்ற படைப்புக்களைச் சொல்லலாம். அது தனியாக கவிதையாக நின்றுவிடாமல் ஒரு கலப்புருவான படைப்பாக வெளித்தெரிகிறது. இது போர்க்கால இலக்கியத்தின் இன்னொரு பரிமாணமாகச் சொல்லக் கூடியது.

எல்லாவற்றினதும் உச்சமாக நாம் இன்று போர்க்கால இலக்கியம் என்னும் வகைப்படுத்தலை வந்தடைந்திருக்கிறோம். நீங்கள் கூறியது போன்று 80களுக்குப் பின்னர்தான் போர்க்கால இலக்கியம் என்னும் ஒரு இலக்கிய வகை தோற்றம் கொள்கிறது. இதனது பக்கவிளைவுதான் இன்று நாம் தனியாக வகைப்படுத்தியிருக்கும் புலம்பெயர் இலக்கியம்கூட. புலம் பெயர் இலக்கியத்தில் போராட்டத்தை விமர்சிக்கும் அல்லது போராட்டத்தை எதிர்க்கும் பண்புகள் தென்பட்டாலும்கூட அதுவும் போராட்டத்தின் இன்னொரு பக்கம்தான். அதன் பக்கவிளைவுதான். எனவே போர்க்கால இலக்கியம் என்பது போர் பற்றிய, போராளிகள் பற்றிய இலக்கியம் என்றில்லாமல் - அது தனக்கேஉரிய பன்முகத் தன்மையைக் கொண்டது. அந்த வகையில் தமிழ்த்தேசியத்தின் 80களுக்கு முன்னரான ஆயுதப்போராட்ட நகர்வு போர்க்கால இலக்கியம் என்னும் பிரிகோட்டை அடையாளப்படுத்துகிறது எனலாம்.

(தொடரும்....)

## மூடிய படிக்கு

இளைய அப்துல்லாஹ்

எந்த அனுபவங்களையும்
கட்டிக்கொண்டு செல்ல முடியாமலிருக்கிறது
இங்கிருந்து.....
ஏக்கமும் கவலையும் பொதிந்த
எல்லா முகங்களையும்
கட்டிக்கொண்டுபோக முடியாமலிருக்கிறது.
பார்க்குமிடமெல்லாம்
வீதி அகலித்துச் செல்கிறது.
யுத்தமற்ற பிரதேசம் என்று
சொல்லத் திராணியற்று நிற்கிறேன்.
வலிகள் எங்கும் வலிகள்
ஒரு சுதந்திரத்துக்குள் இன்னொரு
மறுப்பு.
பழையது போல இருக்கும் எல்லாம்
என்பது பொய்.
மீண்டு மொருமுறை செத்துப்போக
எவர்க்குமே திராணி இல்லை.
கிடைக்காதா என்ற ஏக்கம் சுமந்த
உடல்களோடுதான்
என் மக்கள் இன்னும் திரிகிறார்கள்
ஒரு வளையாயினும்
என் வளையில் இருப்பேன் எனும்
உறுதியோடு.....
தொலைப்புகள் தொலைப்புகள்
இன்னும் தொலைக்க என்ன இருக்கிறது.
இந்தக் கார்த்திகை நிம்மதி(!)
அடுத்த கார்த்திகைக்காக இப்பொழுதே
யோசிக்கத் தொடங்கிவிட்டார்கள்.
பாதுகாப்பு வலயங்களுக்குள்
இன்னும் சிக்கியபடிக்கு....
□□

## இரண்டு கவிதைகள்

யோ.கர்ணன்


எல்லா நாட்களிலும்
ஒரே மாதிரியே இருப்பதில்லை
தெருக்கள்.
பள்ளங்கள் நிரப்பியும்
இல்லாத பள்ளங்கள் உண்டாக்கியும்
உருவம் மாற்ற
மழையினால் முடியும்.
உதிர்ந்து தெருவில் விழுந்த
இலையொன்றை
இடம் மாற்றவோ... அப்புறப்படுத்தவோ
கோடை கால காற்றாலும் இயலும்.
காற்றின் சூழலில் நிரவிய
பள்ளங்களும் அனேகம்.
ஆச்சரியமாக,
எந்த மழை நாளினாலும்
காற்றின் சூழலினாலும்
நிரப்பப்பட முடியாத பள்ளங்கள்
எல்லா வீதிகளிலும் இருக்கும்.
அவரவர் காதலிகள் பதித்துச் சென்ற
உருவங்களற்ற தடங்கள்
மனங்களில் உள்ளது போலவே
காதலிகள் அறியாமல்
மணல் வீதிகளிலும் உறைந்து போயிருக்கலாம்.
□□

2.
அடித் தென்னையே
'ஸ்ரெம்'பாக
வீட்டு முற்றத்திலாடிய
சின்ன வயதுக் கிரிக்கெட்டின்
சுவாரஸ்யம்
மைதானம் நடுவரென்றாடும்
இன்றைய கிரிக்கெட்டில் இல்லை.
எல்லாம்
விதி தெரிந்ததால்
வந்தவினை.
□□


# இருந்ததும் இல்லையென்றானதும்

புதுவை இரத்தினதுரை

நேற்றெம் ஊரிருந்த காற்றில்
இதமான குளிரும்
நேர்த்தியான சுகமுமிருந்தது.
சாணி மெழுகிய தலைவாசலில்
சந்தனக்காப்பெனும் புனிதமிருந்தது.
வாசலிறங்கக் கோலமிருந்தது.
வயலில் நம்பிக்கை விளைந்தது.
வெளியே அறியப்படாத எத்தனையோ
உள்ளே வெளிச்சம் நல்கின.
அரைஞாண் கயிற்றுக் கோவணத்திலும்
குறுக்காகக் கட்டிய மாராப்பிலும்
நிறையும் மனமிருந்தது.
மின்சாரம் மினுங்காத ஒழுங்கைகளில்
இருளெனும் எழிலிருந்தது.
அள்ளிய ஒருமிடறு நீரிறக்க
சுவாசம் சீராகும் சுகம் தெரிந்தது.



ஆலமரம் விசிறிய காற்றின் தாலாட்டில்
தேவநிலை சித்தித்தது.
ஊர்நிறைத்த கோயில்மணி நாதமும்,
கூத்துப்பாட்டும்,
நாதஸ்வர மங்கலமும்
தூக்கித் தட்டாமாலை சுற்றிவிட்டு
எங்கே தூரத்திப்பிடியென்பதாய்ப் போயின.
சாவுக்கும் சடங்குக்கும் ஊனுருகியொழுக
பக்கத்திற் சுற்றமிருந்தது.
சனியானாற் பிடித்திழுத்து எண்ணெமுழுக்காட்ட
ஆத்தைமார் இருந்தனர்.
புதுவருடத்தன்று புளியமரக்கிளையேறி
அன்னவூஞ்சல் கட்டி ஆட்ட
அம்மான்மார் இருந்தனர்.
சின்னத் திரளிப்பொடியும்,
வெள்ளிமுரலும்,
கூனிறாலும் போட்டுக் குழம்புவைக்க
குஞ்சாச்சிமார் இருந்தனர்.
நிழல் விழுத்தும் முற்றத்துப் பூவரசின் கீழே
பல்லாங்குழியாட அம்மான்மகள்மார் இருந்தனர்.
தில்லையம்பலப் பிள்ளையார்கோயிலுக்குப் போய்வர
திருக்கல் வண்டில்கள் இருந்தன.
என்ன இல்லையென்பதாய்
எல்லாமுமிருந்தன.
தையெனிற் பொங்கல்
சித்திரையிற் கஞ்சி
ஆடியிற் கூழென
வாய்க்குக்கூட வரையறையிருந்தது.
அப்பனுக்கு மூத்தவன்
ஆத்தாளுக்கு இளையவனென
சாவுக்குப் பின்னுமொரு சங்கையிருந்தது.
ஆகக்கூடிய தொலைவுப்பயணமெனக் கதிர்காமத்துக்கு
அதுவும் கால்நடையாகப் போகும்
வடிவிலங்கிய வாழ்வொன்றிருந்தது காலடியில்.
மாதமொரு கூத்திருந்தது கோயில் வெட்டையில்




அதுவே போதுமெனத் தூங்கியெழுந்தன ஊர்கள்.
சூடடித்துக் குவித்த நெல்லும்
கிழித்துலர்த்திய ஒடியலும்
நிறைத்த நெஞ்சில் நித்திரையிருந்தது
தழுவிப்போனது காற்று
உருகி உள்ளேறியது உறவு.
கமல்ஹாசனும் சிம்ரனும் சொல்லித்தர முன்னரும்
இலந்தைமரக் காட்டுவெளியிடையும்,
புல்லாந்தியும் நாயுருவியும் சணைத்த
ஒற்றையடிப் பாதையிலும்,
வயல் வரம்பிலும்,
வாய்க்காற் கரையிலும்,
தோட்டவெளி ஆடுகாற் பூவரசின் கீழும்
இணைந்ததும் பிணைந்ததுமென
இருந்தது எம்மூர்களிலும் காதல்.
இன்று எல்லாம் தொலைத்து
இடருருவிக் கிடக்கிறது வனப்பு.
துக்கித்திருக்கிறது சோபிதம்.
'வெஸ்ரேன் யூனியனில்' வந்திறங்கும்
வெளிநாட்டு ஆதாரம்
இஷ்டத்துக்குப் பெருகுதெனினும்
கொள்ளிக்குப் பிள்ளைகளில்லையே.
காட்சிப்பெட்டி,
கைத்தொலைபேசி,
துவைக்கும்பொறி,
குளிருறை இயந்திரமென
புதிதாயெழும் மாளிகையெங்கும் நிறைந்துளது.
ஆயினுமென்ன
முதுகேறி விளையாடிய பிள்ளைகளில்லையே.
மூத்திரம்பெய்ய பேரர்களில்லையே.
வந்த பணம்குவிந்து,
வங்கி நிறைந்து,
வட்டி வளருதன்றி
கைவிஷேசம் வாங்க யாருமில்லையே.
முற்றத்து முருங்கை நிறைகாய்
சுமைதாங்காது கிளைமுறிய
மரமும் பாறிச் சரிகிறது
உருவிச்சப்ப ஒருவரில்லையே.
கிணற்றடிவாழை குலைமுற்றிக்கிடக்கிறது
ஒருவரில்லையே உரித்துத் தின்ன.
பழைய சாய்மனைகளுக்கெதற்கு புதியவீடு?
எல்லா அழகும் இல்லையென்றாக
எலியோடும் உத்தரத்தை வெறித்தபடி
எத்தனை நாளுக்கென்றுதான்
கைத்தடிகள் காவலிருப்பது?
"பிள்ளைகளை அனுப்பினது பேய்வேலை"
கூழோ கஞ்சியோ குடித்தபடி
ஒற்றைப்போர்வைக்குள்
எல்லோரும் உறங்கியிருக்கலாம்.
இருந்ததை எண்ணி மகிழ்ந்ததுவாய்
இழந்ததை எண்ணிக் குமைந்ததுவாய்
உழவை எதிர்பார்த்துக் கிடக்கிறது ஊர.
வெளியார் வயலில்
வயலோர் வெளியில்.
முட்டும் இழுப்புடனும்
மூத்தோரே ஊர்முழுதும்.
□□



# மனநடை - 7

முதிரா வயோதிபர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் 44/90 என இலக்கமிடப்பட்ட அரச சுற்றறிக்கையாக 1990இல் வெளிவந்தபோது என் போன்ற சிலருக்குக் கொண்டாட்டமாகவே இருந்தது. 'விடுதலை, விடுதலை'யென்று பாரதியைப்போல பாடவேண்டும்போல இருந்தது. மாதச் சம்பளம், வயிற்றுப்பாடு, 'கோழி மேய்ச்சாலும் கோறனமேந்திலை வேலை' என்று என்னைச்சுற்றி வரிந்து கட்டியிருந்த கயிறு கட்டறுவதென்றால் சும்மாவா? உடனடியாக நிரப்பப்பட்ட படிவங்கள் பறந்தன. எனது சுயவிபரக் கோவையும் விடுதலை பெற்று, இரகசிய அறையிலிருந்து வெளியேறியது. இனி திணைக்கள நிர்வாகக் கிளையில்



என்ற நம்பிக்கையில் மாடிப்படிகளிலிருந்து இறங்கினேன். அப்பொழுது திணைக்களத்தில் எனக்கிருந்த மதிப்பும் மதியாதையும் கீழிறங்கிக் கொண்டிருக்கிறது என்ற விடயம் அப்போது புரியவில்லை. ***Men may come and men may go: But we will go on for ever*** (மனிதர்கள் வருவார்கள், மனிதர்கள் போவார்கள் நாங்கள் என்றும் ஓடிக்கொண்டேயிருப்போம்) என நதிகள் கூறுவதாகவரும் ஆங்கிலப்பாடல் வரிகள் திணைக்களத்தை விட்டுப்பிரியும்போது ஞாபகம் வரவில்லை. இருபத்தெட்டு ஆண்டுகள் கொண்ட தொடர்பு (விரும்பியோ விரும்பாமலோ) சுலபமாக விடுவிக்கக்கூடியதா? நண்பர்களின் முகங்கள் பார்வையை விட்டகன்றபோதிலும் மன இருக்கையிலிருந்து விலகாமலே இருந்தன. அவர்களுடனான உறவு என் ஆளுமையின் பலமாகவும், பலவீனங்களாகவும் வியாபித்திருக்கக்கூடும்.

# வயதைக் கொள்ளையடித்த நாற்காலிகளும் புதிய வீடுகளும்

ஞானரதன்

சர்வ வல்லமையோடு அமர்ந்திருக்கும் 'கிளாக்கர்' ஒருவரின் கைகளுக்கு வரும். எவ்வளவு நாட்களில் அல்லது மாதங்களில் அல்லது வருடங்களில் காரியம் முற்றுப்பெறும் என்பது 'கிளாக்கர்' உதட்டைப் பிதுக்கும் அல்லது தலையாட்டலைப் பொறுத்தது. அதற்கு மேல் ஆண்டவன் மீது தமிழ்ப் படங்கள் மாதிரிப் பழியைப் போடலாம். அல்லது பொருத்தமான ஆட்களைப் பிடித்து கீழே நுழையவேண்டும். எனக்கு இரண்டுமே சாத்தியப்படாதுபோலிருந்தது. எப்படியோ 'சுணக்கம்' ஏற்பட்டாலும் கிடைக்கத்தானே போகிறது

அரச அலுவலர் என்ற பட்டி கழற்றப்பட்டு எதிர்காலப் 'பென்சன்காரர்' என்ற முதிய முகவரியுடன் ஊரில், உடலை மறைத்துத் துவாயைப் போட்டுக்கொண்டு சாரத்துடன் உலாவந்தபோது தான் புரிந்தது சனம் போட்டு வைத்திருக்கின்ற கணக்கு. ஓய்வூதியம் கைக்குவர ஒருவருடமாவது பிடிக்கும் என்று அப்பொழுது யாழ்ப்பாண ஓய்வூதியக் கிளையில் கடமையாற்றிய 'தொந்தி' கிளாக்கர் கருணை புரிந்து வாயைத் திறந்து கூறியதே நான் செய்த பாக்கியம். கீழ்நோக்கி வழிந்துபோயிருந்தது அவரின் முகத்தின் தசைக்

கூட்டம். சிரிக்குமா இந்த முகம்? மனைவிகூட இளமைக்காலம் தாண்டியபின் அவரின் முகத்தில் சிரிப்பைக் கண்டிருக்கமாட்டாள்! கொழும்பிலிருந்து வரப்போகும் எனது ஓய்வூதிய சுயவிபரக் கோவை இவரின் கைகளுக்கு அல்லவா வரப்போகிறது? இவரைப்போன்ற பல வகையறாக்களைக் கொண்ட இந்த அரசசேவை என்ற சிலந்திவலைச் சிறையிலிருந்து மீண்டுகொண்டதே நிம்மதி தருவதாக இருந்தபோதிலும் 'கையில் கடிக்கத்' தொடங்கியவுடன் வீட்டில் இனிய வார்த்தைப் பரிமாற்றங்கள் அற்றுப்போயின. மறந்துபோன பழைய குடும்ப வரலாறுகள் கிளறப்பட்டு, வாக்குவாதங்கள், சண்டைகள் எனச் சூழ்ந்துகொண்டன. பென்சன்காரர் ஆகும்வரை கடன்தரமாட்டார்கள் என்ற விடயம் இன்னொரு மறைபொருள் - வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் உற்றார் உறவினர் காட்டும்போது பொருளின் சித்து விளையாட்டு அப்பொழுதுதான் புரிய வரும். திரட்டிய ஓய்வூதிய முற்பணம் கைக்குவரும் நாளின் கனவில் நாட்கள் ஓடி மறையும். "இந்த மனிசன் பொருள் பண்டத்தையெல்லாம் அழிச்சுக் குட்டிச் சுவராக்கப்போகுது" என்ற மனைவியின் புலம்பல் இன்னொரு பக்கத்தில் விரட்டியது.



சௌமியின் சூடு

அப்பொழுது எனக்குத் தெரிந்த 'வண்டவாளங்களைப்' பயன்படுத்தக் கூடிய ஏதாவது தொழில் வாய்க்குமா எனத் தேடிக்கொண்டிருந்தபோதுதான் நிதர்சன நிறுவனத்தின் பத்திரிகை விளம்பரத்தைக் கண்டேன். பிரதிகள் எழுதக்கூடிய எழுத்தாளர்கள் தேவை என்றிருந்தது. வீரகேசரி வெளியிட்ட எனது இரண்டு நாவல்களையும் சிறுகதைகளையும் தூக்கிக்கொண்டு நேர்முகப்பரீட்சைக்குப் போனேன். மண்டபமொன்றில் இருக்கச் சொன்னார்கள். தேநீர், பிஸ்கற் எல்லாம் வந்தன. ஓ! பரவாயில்லையே! அரச திணைக்களங்களில் நான் கண்டிராத காட்சியாக இருந்தது அது. உபசரிக்கும் பண்பும், இனிமையான வார்த்தைகளும், வந்திருப்பவர்களுக்குரிய கௌரவம் கொடுத்து நடந்துகொண்ட முறையும் அரச திணைக்களத்தில் ஊறிப்போன எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நாங்கள் அமர்ந்திருந்த மண்டபத்தின் முகப்பில் தேசியததலைவர் அவர்களின் பெரிய அளவிலான படம் மண்டப முகப்பை நிறைத்திருந்தது. குண்டுவீச்சுச் சிதறல்களால் ஆங்காங்கே பொட்டுப்பொட்டாகத் தடயங்கள் அதில் தெரிந்தன. அண்மையில் குண்டுவீச்சு விமானம் பரமேஸ்வராச் சந்திக்கருகில் நிதர்சனத்தின்மீது நடாத்திய தாக்குதலில் பழநி என்ற நிதர்சனப் போராளி வீரச்சாவடைந்த சங்கதியை வந்திருந்த ஒருவர் வர்ணித்தார். பீதிகொண்டு வந்திருந்த அரைவாசிப்பேராவது நேர்முகப் பரீட்சையிலிருந்து பின்வாங்கிவிடுவார்கள் என்று நினைத்தாரோ தெரியவில்லை. ஒருவரும் அசைந்தபாடில்லை. ஏனென்றால் குண்டுவீச்சு விமானங்களின் இலக்கு எதுவென்று மைபோட்டுத்தான் பார்க்கவேண்டும். விமானங்கள் வரும், குண்டுகள் விழுந்து புகைமண்டலம் பேரொலியோடு எழும். ஏன் அங்கு விழுந்தது என்பது விமான ஓட்டிக்கே வெளிச்சம். விமான ஓட்டியைப் பிடித்து "ஏனப்பா அந்த ஏழைச்சனத்தின்ர கொட்டிலுக்கு இலக்குவச்சுப்போட்டு பத்துப்பேரை முடிச்சனி?" என்று கேட்கவேண்டும் என்பது எனது நீண்டநாள் ஆசை. இவை பற்றியெல்லாம் மனித உரிமைகள் பற்றிக் 'கூலாக' எழுதுகிறவர்கள் ஏன் கவனிக்கவில்லை.

அதுபோக,

எழுத்துருவாக்கப் பணிக்குத் தெரிவுசெய்யப்பட்டுப் பணிக்காக அந்த மேல்மாடி அறைக்குள் போனேன். மேசை, கதிரைகள் நிரையாக பழைய அரச அலுவலகங்களை நினைவுக்குக் கொண்டு வந்தன. மீண்டும் அதே கதிரை மேசைகளோடு வாழ்க்கை கழியப்போகிறதா என்ற விரக்தி மனதில் முளைவிட்டது.

ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்யும்

பணி எனக்குத் தரப்பட்டது. வீடியோ, சினிமா, ஒளிப்பதிவு இப்படிப் பல்வேறு தலைப்புகளில் நூல்கள் அடுக்கப்பட்டிருந்தன. வீடியோ தொழில் நுட்பம் என்ற நூலைத் தமிழாக்கம் செய்யும் போது குறும்படப் பிரதியொன்றை எழுதுமாறு ஊக்கம் கொடுத்தார் அன்றைய நிதர்சனப் பொறுப்பாளர் பரதன். இலக்கியத் துறையில் ஈடுபாடு உள்ளவர்களை இலகுவாகக் கவரக்கூடி யது இத்துறை.

நிதர்சனத்தில் பணியாற்றிய அமரேசன் என்ற போராளி என்னிடம் ஒருநாள் வந்து தன் துயரக் கதையைச் சொன்னான். தன் கண்முன்னாலேயே தாயும் சகோதரியும் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதை பற்றைக்குள் மறைந்திருந்தபடி பார்த்தவன் அவன். அவன் தனது இதயச்சுமையை பேரிடியாக என் இதயத்தில் இறக்கிவிட்டிருந் ததை என்னால் உணரமுடிந்தது. இதுவே 'இனி யொரு விதி' என்ற எனது முதலாவது குறும்படத் திற்கான எழுத்துச் சுவடியாயிற்று. பரதனின் படப்பிடிப்பு, நெறியாள்கை 'இனியொரு விதி' குறும்படத்தைத் தடம் பதிக்க வைத்தன. பரதனின் படப்பிடிப்பு ஆளுமையே 'இனியொரு விதி'யின் பலமாக இருந்ததை மறுப்பதற்கில்லை. இதன் மூலம் உற்சாகமடைந்த பரதன் முழுநீளப்பட மொன்றைத் தயாரிக்க மிகுந்த ஆர்வம் கொண் டிருந்தார். 'காற்றுவெளி' திரைக்கதை உருவா னது.

'காற்றுவெளி' அனுபவங்கள் சுவாரஸ்யமா னவை. அதில்வரும் கிழவனார் புதிதாக வாங்கி விட்ட கோழியைத் தேடிப்பிடித்துத்தரும்படி போராளிகளைக் கேட்கிறார். அப்பொழுது ஒரே வீட்டில் வாழும் போராளிகளுக்கும் கிழவனாருக் குமிடையே நட்புறவு ஏற்பட்டிருந்தது. போராளி கள் கோழியைக் கலைத்துப்பிடிக்கும்போது இறந்துவிடுகிறது. கிழவனார் 'போனால் போகட் டும்' போராளிகளுக்குச் சமைத்துக் கொடுப்போம் என கறிசமைத்து, போராளிகள் பாணுடன் கோழிக்கறி சாப்பிடும் காட்சி படமாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. கோழியுரித்துத் தாச்சியில் கறிசமைத்து வைத்துவிட்டுக் கமராவை நிலைப் படுத்தியபோது தாச்சிச் சட்டியில் கோழிக்கறியின் சுவடேயில்லை. நான்கைந்து போராளிகள் அறை யொன்றிலிருந்து கொல்லென்று சிரித்தார்கள். இப்படித்தான் சிரிப்பும் கும்மாளமுமாகப் படப் பிடிப்பு நடந்தவேளை கேணல் கிட்டுவின் வீரச் சாவுச் செய்திவந்தது. படம் முடியவில்லை. மூட்டை கட்டிக்கொண்டு நிதர்சனத்துக்கு வந்து விட்டோம். மீண்டும் படப்பிடிப்புத் தொடங்கியது நிதர்சனத்துக்குப் புதிதாக வந்த பொறுப்பாளர் தமிழன்பன் எடுத்த முயற்சியாலும், திலகனின் அயராத உழைப்பாலும் 'காற்றுவெளி' 1994இல் வெளியானது. இத்திரைப்படம் இன்றும் பேசப் படுவதற்கு இதன் பின்னால் உள்ள உழைப்பே காரணம் என்று நினைக்கிறேன்.

(தொடரும்......)





**ஆற்றுகை**

**நாடக அரங்கியலுக்கான இதழ்**

ஆசிரியர்குழு: யோ.யோன்சன் ராஜ்குமார்,
கி.செல்மர் எமில், வை.வைதேகி
வெளியீடு: நாடகப் பயிலகம்
திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
விலை: ரூபா 40.00

மிக விரைவில் வெளிவருகிறது.

போராளி தமிழவளின்

**எல்லைகாக்கும் இல்லங்கள்**

எல்லைப்படை மாவீரர் பற்றி வேர்களினதும், விழுதுகளினதும் நெஞ்சுருக்கும் நினைவுகளும் நிமிர்வுகளும்.

வாழ்வின் தரிசனம் இங்கு இலக்கியமாகிறது.

கப்டன் வானதி வெளியீட்டகம்
கிளிநொச்சி,
தமிழீழம்.




காலை அசாதாரண அமைதியுடனிருந்தது. அணில்களின் கீச்சிடுதல்கள் மட்டும். இருந்திருந்துவிட்டு எங்கோ ஒரு காகம். இரவெலாம் ஓடி இன்னும் விடாமல் ஒலிக்கிற வீடியோக்காட்சி இரைச்சல்கள்கூட ஒழுங்கையின் ஒரு வீட்டிலிருந்தும் வரவில்லை. இரவு நல்ல மழை. ஆனால், இப்போது வானம் வெளித்திருந்தது.

"பாண் வாங்கக் கடைக்குப் போகேல்லையே, ரகு?", அம்மா நினைவு படுத்தினா.

"காசைத் தாங்கோ" எழுந்து நொண்டியபடியே போய், கொடியில் கிடந்த சட்டையை எடுத்தான்.

முச்சில்லு வண்டி சேற்றில் அசைய மறுத்தது. சில்லின் கைப்பிடியைப் பலங்கொண்ட மட்டும் அமுத்தினான். சங்கிலி அறுந்துவிடுமோ என்று பயமாக இருந்தது. இப்படியான வேளைகளிலெல்லாம் நேர்வதேபோல, அவனது இயலாமை பற்றிய அந்தக் கவலை இப்போதும் - புடைத்தெழுகிற இந்த வலதுகைத் தசைநார்கள் மாதிரிப் - பொங்கிற்று.

"பொறு, வாறன்" அம்மா விரைந்து வந்து வண்டியைத் தள்ளியதுடன் படலையையும் திறந்துவிட்டா. தெருவில் வண்டி இலகுவாக நகர்ந்தது.

பின்னாலிருந்து வந்த ஒரு சைக்கிள் வலு வேகமாக அவனைத்தாண்டிச் சென்றது.

"குட் மோணிங், ரகு!", பாலாவின் குரல் - ரகு வாயைத் திறக்கமுன்னரே சைக்கிள் ஒழுங்கை வளைவில் திரும்பி மறைந்தது. எண்ணற்ற தடவைகள் வந்து போகும் அந்த வலி இப்போதும் அவனை மூழ்கடிக்க, ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டான். தன்னைப்போன்ற துரதிஷ்டசாலியான ஒரு பிறவி இருக்கமுடியாது என்றுபட்டது. எல்லோராலும் நடக்க, ஓட, சைக்கிளை மிதிக்க, காற்றுப்போல நினைத்த இடமெல்லாம் போய்வர முடிகிறது. மிருகங்கள், பறவைகள்கூட. அவனுக்கு மட்டும் ஏனிப்படி?

தன்னொத்த வயதுக்காரர்களெல்லாம் நினைவில் வந்தார்கள். எல்லோரும்

# சுற்றிவளைப்பு

சாந்தன்

ஏதேதோ முயற்சியும் முன்னேற்றமுமாய்த் தானிருக்கிறார்கள்; குடும்பம், குழந்தைகள் என்றுகூட. முப்பது வயதாகியும் தான்மட்டும் எந்த நிலையான தொழிலோ வருமானமோ இன்றி.. போதாக்குறைக்கு நாட்டு நிலைமை வேறு.

மயிலு கடை பூட்டியிருப்பது தொலை



விலிருந்தே தெரிந்தது. கைக்கடியாரத்தைப் பார்த்தான். "புது" நேரம் ஏழரையைத் தாண்டியாயிற்று. என்னதானிருந்தாலும் ஏழுக்கு முதலே கடையைத் திறக்கிறவர் மயிலு. என்னாகியிருக்கும் இன்றைக்கு? கடைக்கு முன்னால் வேப்பமரத்தின் கீழிருந்த கல்லிற் குந்தியிருந்த சோமர் இப்போது கண்ணிற்பட்டார். ரகுவைக் கண்டதுமே, "இவன் இன்னும் வரேல்லை. எனக்கு நேரம் போகுது" என்று உரக்க அலுத்துக்கொண்டார்.

"இண்டைக்கு ஏதோ வித்தியாசமாயிருக்கு" என்றான் ரகு.

"அந்தா!" என்றார் சோமர், அதைக் காதில் விழுத்தாமலே, மயிலு வாறான்.

எக்கச்சக்கமான வேகத்தில் வந்த மயிலு சட்டென்று பிரேக் பிடித்துக் குதித்தார்.

"உங்களுக்குத் தெரியாதே?" என்றார் சண்டிக்கட்டை அவிழ்த்துவிட்டபடி. குரல் பயத்தில் ஊறியிருந்தது.

"என்ன?" என்றார்கள் இருவருமே.

"இண்டைக்கு ஊரடங்காம்!"

"ஆர் சொன்னது? ரேடியோ கீடியோ ஒண்டிலும் சொல்லேல்லையே?"

"இங்க மாத்திரந்தான் - இந்தச் சுற்று வட்டாரம் இரண்டு மூண்டு ஊரிலை மட்டும்."

"உனக்கு ஆர் சொன்னது?" சோமர் கேட்டார், குழம்பிப்போய்.

"அவங்கள்தான்!" என்றார் மயிலு, "விடிய ஒருக்கால் தோட்டத்தடிக்குப் போய் வருவமெண்டு போனால், அரசடி திரும்பின கையோடை எங்கயெண்டிருந்து தெரியாமல் மூண்டு நாலு பேர் வந்து மறிச்சாங்கள். எனக்கு ஈரல் குலைநடுங்கிச் சுது. 'இண்டைக்கு ஐஞ்சரையிலையிருந்து ஊரடங்கு, திரும்பிப் போ' எண்டு கலைச்சுவிட்டாங்கள்."

"ஆண்டவன்தான் கதி" என்றபடி சோமர் திரும்பி ஓடுவதுபோல நடந்தார்.

ரகுவுக்கு முதலே சேதி வீட்டுக்கு வந்திருந்தது. அம்மா படலையடியில் பார்த்திருந்தா பயமும் பதற்றமுமாய். பதினைந்துக்கும் அறுபதுக்கும் இடைப்பட்ட எல்லாரும் அம்மன் கோவிலடிக்குப் போக வேண்டுமாம். "என்ன அநியாயத்துக்கோ?" அம்மா புலம்பினா. தூரத்தில் நாய்கள் குரைக்கும் ஓசை கேட்டது.

"உள்ள வா, கெதியா", அம்மா படலையைச் சாத்தினா.

யாரோ அழுதபடி கூப்பிட்டார்கள்.

ராணி அக்கா.

"இந்த வளர்ந்த பிள்ளையளை வச்சுக்கொண்டு என்ன செய்யப்போறம்? ஆரோ, தலையாட்டி வருகுதாம்"

"பயந்து என்ன செய்யிறது, பிள்ளை? அவனைக்கேள்" அம்மா மேல்நோக்கி இரண்டு கைகளையும் விரித்தா. நாய்க

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

ளின் குரைப்பு நெருங்கி வந்தது நாலைந்து இடங்களிலிருந்து.

என்னவென்று தெரியாத, தவிர்க்கவே முடியாத அந்தப் பயங்கரத்திற்காக அவர்கள் காத்திருந்தார்கள். வயிற்றுக்குள் ஏதோ செய்தது, நெஞ்சு இடிப்பது கேட்டது. ஒழுங்கையில் இப்போது சனங்கள் போகத் தொடங்கியிருந்தார்கள். மூரி வேலி வரிச்சுக்கூடாய் விரையும் கால்கள். விடாமல், வரிசையாய். சாய்த்தபடி செல்கிற கனத்த காலணிகள், காக்கிக் காற்சட்டைகள்.

அப்பா அருகில் வந்தமர்ந்தார்.

"நானும் உன்னோட கோயிலடிக்கு வாறன்"

"எதுக்கு? தேவையில்லை!" என்று சொன்னாலும் ஆறுதலாயிருந்தது.

"ஒண்டும் சாப்பிட மனம் வராதுதான் இப்ப", அப்பா சொன்னார்,

"எண்டாலும், உள்ளதிலை ஏதாவது கொஞ்சம் சாப்பிட்டு வா"

"தேவையில்லை" என்றான் ரகு.

"எத்தினை மணிக்கு விடுவாங்களோ!"

"விடுறதெண்டாலும்" என்று நினைத்ததை அவர் சொல்லவில்லை. கண்களை ஒரு நிமிடம் மூடிக்கொண்டார். அம்மா சாமியறையில் கும்பிட்டுக்கொண்டிருப்பது அவருக்குத் தெரியும்.

படாரென்று படலை திறந்தது. "யாரு, வீட்டில?", அந்நியக் குரலொன்றின் அதட்டல். ஐந்தாறுபேர் உள்ளே நுழைந்தார்கள்.

அம்மா பூசையறையிலிருந்து வெளியே வந்திருந்தா. கைகளிரண்டும் நடுங்குவது வடிவாகத் தெரிந்தது.

"எத்தன வயசு ஒங்களுக்கு?"

"அவவுக்கு அறுபத்தொண்டு, எனக்கு அறுபத்தஞ்சு"

"அப்ப, நீ வா!", வந்தவன் ரகுவைக் காட்டினான்.

"நானும் வாறன்", அப்பா முச்சில்லு வண்டியைப் பிடித்தார்.

அதேவேளை, வீட்டினுள்ளே இருந்து இன்னொரு குழுவாக படையாட்கள் வந்ததை ரகு கண்டான். பக்கவாட்டால் மேலுமொன்று! பின்வேலி வெட்டி நுழைந்திருக்கிறார்கள்.

"நீ வரமுடியாது", முன்னால் நின்று கொண்டிருந்தவன், அப்பாவைத் தடுத்தான்.

"அவனைத் தனிய விடேலாது", வண்டியைத் தொட்டபடியே அப்பா படலைக்கு வெளியே வந்தார்.

சனங்கள் சாரிசாரியாகப் போனபடியிருந்தார்கள். ஆண்கள், பெண்கள், இளம் பையன்கள், இளம் பெண்கள், குழந்தைகளைத் தனியே வீட்டில் விட்டுவிட்டு வரஇயலாத இளந்தாய்மார்... எல்லாரும் தெரிந்தவர்கள் அல்லது உறவினர்கள்.

சுரேனும், வெள்ளையும் கைகாட்டிவிட்டுப்போனார்கள். கணேஷ் குடும்பத்தாருடனே போனான். தாய் தகப்பனுக்கு அறுபதாகவில்லைப் போலும். இருந்தாற்போல முன்வீட்டில் அமளி. யோகன் பெண்சாதி குளறிக்கேட்டது.



"இந்த இரண்டு பிள்ளைகளுக்கும் தகப்பன் அவர். அவரை ஏன் கூப்பிடுறியள்?", போன்மாதம்தான் பிறந்த சிசு அவள் கையிலிருந்தது. மற்றது பின்னால்.

"நீ இருக்கலாம். ஆனா அவன் வரணும்!" படையாள் மிரட்டினான்.

"கமலா, அழாதை! பின்னேரம் வந்திடுவன்", ஆறுதல் சொன்னபடியே யோகன் வெளியே நடந்தான், "அம்மா, அவளைப் பார்த்துக்கொள்ளுங்கோ!"

கமலாவின் குளறல் அடங்கமுன்னரே படையாட்களின் தலைவன் போன்ற ஒருவன் இவர்களிடம் வந்தான்.

"ஏன் நிக்கிறது, இங்க?" மிரட்டினான்.

ரகுவை வெளியே அழைத்து வந்தவர்களில் ஒருவன் ஏதோ சொன்னான்.

அதிகாரி கண்களில் ஆத்திரம் தெறித்தது.

"சண்டைக்கி போய்தானே காலு போனது?" அருகே நெருங்கி எதிர்பாராத விதமாய் ரகுவின் சாரத்தை திடீரென முழங்கால்வரை இழுத்தான்.

போலியோவால் பாதிப்புற்றுச் சூம்பி வளைந்த கால்கள் தெரிந்தன.

"அவனை விடு" கொமாண்டர் குரைத்தபடி நகர்ந்தான். அவன் ஆட்கள் பின் தொடர்ந்தார்கள்.

அப்பாவின் பெருமூச்சு பெரிதாய்க் கேட்டது. தனது உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள முடியாதிருந்தது ரகுவுக்கு. இன்னமும் எதிரே சனங்கள் போய்க்கொண்டிருந்தார்கள். இன்று வந்து என்றுமில்லாத சுயவெறுப்பு என்றுணர்ந்தான் ரகு.

(தனது ஆங்கிலமூலக் கதையிலிருந்து ஆசிரியரே மீளுருவாக்கியது.)

# அஞ்சலி



நாட்டுப்பற்றாளர்
**விழிசிட்டி கணபதிப்பிள்ளை சிவராஜா**
அவர்கள்

இலக்கியப் படைப்பாளி, நாட்டுப்பற்றாளர் விழிசிட்டி க.சிவராஜா அவர்கள் நாற்பது வருடங்களாகத் தொடர்ந்தெழுதி எங்கும் நன்கு அறியப்பட்டவர். 1960 ஆம் ஆண்டு தொட்டு தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்துடன் தன்னை இணைத்துக்கொண்டவர். சிறுகதைகள், நாடகங்கள், விவரணங்கள் மூலம் விடுதலைப்போராட்டத்தையும், சமூக விடுதலையையும் முன்னெடுக்கும் படைப்புக்களை எமக்களித்தவர். தொழிற்சங்கப் போராட்டங்கள் பலவற்றிலும் இணைந்து தொழிலாளர்களின் உரிமைக்காகவும் குரல்கொடுத்தவர். 1993ஆம் ஆண்டிலிருந்து புலிகளின்குரல் நிறுவனத்துடன் தன்னை இணைத்து அர்ப்பணிப்புடன் அயராது உழைத்தவர். இறுதிகாலத்தில் நிதர்சன நிறுவனத்துடன் பிணைந்திருந்து பல ஆக்கப் படைப்புகளுக்கு வழிசமைத்தவர். வெளிச்சத்தில் இவரின் படைப்புக்கள் பல வெளிவந்தன. வெளிவந்த அப்படைப்புக்கள் விடுதலைப்போராட்டத்தின் உண்மைத் தன்மையையும், போராளிகளின் அர்ப்பணிப்புகளையும் எடுத்துரைப்பதாக அமைந்தன. தன் படைப்புகளுக்காகத் தமிழீழத் தேசியத் தலைவரின் பரிசினையும், பாராட்டுக்களையும் பெற்று கௌரவம் பெற்றவர். அன்னாரின் இழப்பில் துயருறும் குடும்பத்தினருடனும் இலக்கியப் படைப்பாளிகளுடனும் இணைந்து வெளிச்சமும் துயருறுகின்றது.

வெளிச்சம்



சுனாமியின் சுவடு

மணலாற்றுக் காட்டினுள் தம் பலத்தைப் பெருக்கிய பெண் புலிகள், காட்டிலிருந்து வெளியேறி நாட்டுக்கு வந்து ஒரு வருடம் நிறைந்து விட்டிருந்தது.

இப்போது 1991ஆம் ஆண்டு. கொக்குவிலில்

# அளவுகோல்கள்

மலைமகள்

அமைந்திருந்த எமது தளத்தில் நடந்துகொண்டிருந்த கட்டுமான வேலைக்குத் தேவைப்பட்ட சில மேலதிகமான சீமெந்துப் பைகளை ஏற்றிச் செல்வதற்கென திருநெல்வேலிக்கு வந்து, கடை ஒன்றில் சிட்டைபோட்டு, ஏற்றிச்செல்ல தெருவில் நின்ற லான்ட்மாஸ்ரர் ஒன்றையும் வாடகைக்குப் பிடித்தாயிற்று.

ஓட்டுநர் தனது லான்ட்மாஸ்ரரைக் கடைவாயிலுக்கு நேரே கொண்டுவருவதற்காக நாம் காத்திருந்தோம். லான்ட்மாஸ்ரர் கிட்டே வந்ததும் ஒரே வீச்சாக சீமெந்துப் பைகளைத் தூக்கி லான்ட்மாஸ்ரரினுள் வீசி அடுக்கிவிட்டு, நாம் மிதிவண்டிகளில் ஏறி உழக்கவேண்டியதுதான் - சீமெந்து பின்னாலே பையப்பைய வந்துசேரும்.

இரண்டுபேர் சேர்ந்து ஒரு பையைத் தூக்கப் போவதை நினைக்கச் சிரிப்பாக இருந்தது. நாட்டையே இந்திய இராணுவம் சூழ்ந்திருந்த நேரம், காட்டுக்குள் நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் முதுகுகளிலே சீமெந்துப்பைகளைச் சுமந்து எத்தனை தொலைவு நடந்தோம்! ஒரு நாளில் மட்டும் எத்தனை பைகளைச் சுமந்திருப்போம்!

இப்போது ஒரு ஐந்து பைகளைத் தூக்கியேற்ற இருவர் தேவையே இல்லை. ஆனால் தனியே தூக்குவதன் விளைவாக முதுகிலே சீமெந்து ஒட்டிய நிலையில் வீதியால் போகநேரிடும் வில்லங்கத்தைத் தவிர்ப்பதற்காகவே, இருவர் தூக்க வேண்டியுள்ளது.

லான்ட்மாஸ்ரரை இயக்கத்தொடக்கிய நேரத்திலிருந்தே யாரையோ தேடுவதுபோன்று சுற்றும் முற்றும் பார்த்தவாறு வந்த ஓட்டுநர், அந்தப் பார்வை மாறாமலேயே எங்களிடம்,

"தூக்கி ஏத்திறதுக்கு ஆக்கள் பிடிக்கேல்லையோ தங்கச்சி?"

என்றாரே பார்க்கலாம்.

"எங்களைப் பாக்க, ஆக்கள் மாதிரித் தெரியேல்லையோ?"

என்று சிரிக்காமலேயே கேட்டவாறு நாமிருவரும் சீமெந்துப் பைகளைத் தூக்கியேற்றியதை



சுனாமியின் சுவடு

திருநெல்வேலிச் சந்தியே புதினமாகப்பார்த்துக் கொண்டிருந்தது அன்று. ஆனால், பின் நாட்களில் வாழைக்குலைகள், காய்கறிச்சாக்குகள் போன்ற பாரமான பொருட்களை மிதிவண்டிகளில் சந்தைக்கு எடுத்துவரும் சில அம்மாக்கள் அவற்றை மிக இலகுவாக ஏற்றி இறக்குவதைக் கண்டிருக்கின்றேன்.

ஓ ஓ ஓ

இது 1992ம் ஆண்டின் ஒருநாளில் நடந்தது. இதற்குக் காரணமாக அமைந்த சம்பவம் நடந்ததோ 1991ஆம் ஆண்டின் ஒரு நாளில். ஆனையிறவுப் பகைத்தளம்மீதான எமது ஆகாயக் கடல்வெளிச் சமரின் ஒருநாளில் இரவுநேரச் சண்டையொன்றின்போது தலையில் படுகாயமுற்ற நிலையில் ஒரு பெண்போராளி, இராணுவத்தினரின் முட்கம்பிச் சுருளிடையே வீழ்ந்து போனார். அவரது தலைப்பின்னல் கம்பிச்சுருள்களிடையே சிக்கிவிட்டது. பொழுதோ புலர்ந்து கொண்டிருந்தது. தலையை இழுப்பதற்குக் கடும் முயற்சிசெய்த அவர் மயங்கிப்போனார்.

விடிந்த பின்னர்தான் வேவுவீரர்களின் கண்ணில் பட்டார். பரந்த ஆனையிறவு வெளியின். உப்புநீரிடையே முட்கம்பிச் சுருளினுள் கிடந்த அவரை, இரவுவரை பொறுமையோடு காத்திருந்த வேவுவீரர்கள் தலைமுடியை வெட்டி அறுத்துவிட்டே தூக்கியெடுத்து, உயிரைக் காத்தார்கள்.

இந்திய இராணுவ காலத்தில் காட்டிலே வாழ்ந்தபோதும்கூட நீண்ட கூந்தல் எங்களைப் பலதடவைகள் சிரமப்படுத்தியிருக்கின்றது. மரக்கிளைகளுள் சிக்கி எங்கள் பயணங்களைத் தாமதப்படுத்துவதும், அறுந்து கிளைகளுள் சிக்கித் தொங்கி எமது நகர்வுப்பாதைகளை இந்தியப் படைகளுக்கு காட்டிக்கொடுப்பதுமாக, பல தொல்லைகள்.

எல்லாவற்றையும் ஆற அமர ஆராய்ந்த தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள், பெண் போராளிகளுள் விரும்பியவர்கள் தலைமுடியை வெட்டலாம் என்ற கருத்தை வெளிப்படுத்தினார். அடுத்தடுத்த நிலையிலுள்ள பொறுப்பாளர்கள் வழியாக எல்லோருக்கும் தகவல் வழங்கப்பட்டாயிற்று.

இனி நடக்கும் கதை, 1992ஆம் ஆண்டின் அந்த ஒரு நாளுக்குரியது. கொக்குவிலிலிருந்த எமது தளத்தில் மந்திராலோசனை செய்தோம். முடிவெட்டினால் எங்கள் முகம் எப்படித் தோற்றமளிக்கும் என்ற கேள்விக்கு விடைதெரியாததால், வெட்டுவதா, விடுவதா என்ற குழப்பம். காலைவேளையிலும், வெளிவேலைக்கெனப் புறப்படும் வேளையிலும் கூந்தலை அவிழ்த்து வாரிக்கட்டிக் களைத்துப்போன எங்களுக்கு, எப்படியாவது வெட்டியே ஆகவேண்டும் என்று விருப்பம்.

அப்பாவுக்கும் என்னைப்போலவே சுருள்முடி. ஒரு அங்குல உயரத்தில் அவர் வெட்டிவிடும் முடி கடலலைபோல நெளிநெளியாக இருக்கும். பெரும்பாலும் எனக்கும் அப்படித்தான் இருக்கும். எதற்கும் இரண்டு அங்குலத்தில் வெட்டிப்பார்ப்போம். திடமாக முடிவெடுத்துவிட்டேன்.

"ஏற்கனவே நீ தேவாங்கு மாதிரி, மொட்டை அடிச்சிட்டு வந்தியெண்டால், அசல் தேவாங்கே தான். எதுக்கும் முதலில நீ வெட்டிப்போட்டுவா உன்ரை முகரைக்கட்டையைப் பார்த்துவிட்டு நாங்கள் முடிவெடுக்கிறம்"

என்று எல்லாத்தோழியரும் வாழ்த்தி வழியனுப்பிவிட்டார்கள். சிறு வயதில் டிக்கு டிக்கு மாமா (முடிவெட்டும்போது இடைவேளைகளில் கத்தரிக்கோலை சும்மா விரித்து விரித்து மடித்து அவர் எழுப்பும் டிக் டிக் டிக் என்ற ஓசையே அவரின் காரணப்பெயரானது) வீட்டில் வந்து எனக்கு முடிவெட்டும்போது பயன்படுத்துவதற்கென்று ஒரு போர்வை, சீப்பு எல்லாம் தனியாக இருக்கும். (கடைக்குப்போய் முடிவெட்டியதேயில்லை) அந்த நினைவில் ஒரு சீப்பு, போர்க்க ஒரு சாரம் எல்லாம் எடுத்துக்கொண்டு யாழ். நகரை நோக்கிப் பயணமானேன்.

வீட்டாருடன் வாழ்ந்த நாட்களில் பொருட்கள் வாங்கவென யாழ்ப்பாணம் வந்துபோகும்போது, புதிய சந்தையின் நடுப்பகுதிக்குள் சிகையலங்காரக் கடையொன்றைக் கண்ட நினைவில் ஆரியகுளம் சந்தி கடந்து, ஆஸ்பத்திரிச் சந்தியால் திரும்பி, மணிக்கூட்டுக்கோபுர வீதியால் போய்க்கொண்டிருந்தபோது திடீரென ஞானம்பிறந்து மணிக்கூட்டுக் கோபுரத்தருகே மிதிவண்டியை நிறுத்தினேன்.

இந்தப் பெரிய நகருக்குள் ஒரு கடை மட்டுமா இருக்கும்? கோபுரத்தருகே நின்ற ஒரு

வரிடம் விசாரித்தேன். கையைக் காட்டினார் - அட! சந்தியிலேயே ஒரு கடை. கடைவாயிலில் நாளேடுகளை வாசித்தவாறும், நாட்டு நடப்புகளை அலசியவாறுமிருந்த பெரியவர்களைக் கடந்து உள்ளே நுழைந்தேன்.

"வாங்கோ, யாரைத் தேடுகிறீங்கள்?" என்றவர்,

"முடிவெட்ட வந்தனான்" என்ற என்னை அதிர்ச்சியோடு பார்த்தபடி நாற்காலியை இழுத்து விட்டார். நான் கொண்டுபோன பொருட்களை வெளியில் எடுக்க முன்னரேயே, கடையிலும் அவை இருந்ததைக் கண்டுவிட்டேன். இதைத் தொடர்ந்து சிகை அலங்காரிப்பாளருக்கும் எனக்குமிடையே நடந்த மிகச்சுருக்கமான உரையாடல் ஒரு நாவலுக்குரிய கருவை உள்ளடக்கியது.

கையில் கத்தரிக்கோலைத் தூக்கிய பின்னரும் "வெட்டுறதுதானோ?" என்று கேட்டதும், கீழிருந்து மேல்நோக்கி ஒவ்வொரு அங்குலமாகக் குறைத்து கண்ணாடியைக்காட்டி "காணுமோ, காணுமோ" என்று கேட்டு என் பொறுமையைச் சோதித்ததுமாக, நான் நினைத்த அளவிலே முடியின் அளவு குறைவதற்கு நாற்பத்தைந்து நிமிடங்களுக்குமேல் எடுத்துக்கொண்டார். எல்லாம் முடிந்தது.

ஆனால் இப்போதுதான் சிக்கல் ஆரம்பமானது. வீதியால் பயணித்த ஏனைய பயணிகள் முதலில் எனது தலையைச் சாதாரணமாகப் பார்ப்பார்கள். இடையிலுள்ள இடைப்பட்டியைக் கண்டபின்னர் திடுக்கிட்டுப்போய், மறுபடி தலையை அதிர்ச்சியுடன் பார்ப்பார்கள். அதற்கிடையில் பெரும்பாலும் யாருடனாவது மோதிவிடுவார்கள். ஏற்கனவே அறிந்தவர்கள் "அதுதானோ இது" என்று இனங்காண்பதற்கிடையில் மோதிவிடுவார்கள். வீதி முழுதும் விபத்துகளுக்கான வேர்களைத் தூவிக்கொண்டு வந்து சேர்ந்துவிட்டேன்.

இந்தியத் துணைக்கண்டத்தைத் தேடிப்போன கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டதுபோல, நான் சிகையலங்கரிப்பு நிலையமொன்றைக் கண்டதில் தொடங்கி, கொக்குவில் புகையிரதக் கடவையருகே நடந்த கடைசி விபத்து வரையான எனது கதையைக் கேட்டு, எனது தோற்றத்தைப் பார்த்து எல்லோரும் ஒரே குரலில் சொன்னார்கள்.

"நாளைக்கு எங்களைக் கடைக்குக் கூட்டிப்போ"

சில நாட்களின் பின் எல்லோருக்கும் எல்லாம் சாதாரணமாகிப்போனது.

ஓ ஓ ஓ

இப்போது 2002ஆம் ஆண்டு. பாதை திறந்தாயிற்று. அந்தப் பெண் ஒரு ஊடகவியலாளர். எங்களிடம் அவர் கேட்ட அனைத்துக் கேள்விகளது

சுனாமியின் சுவடு



மையமும் ஒரு கேள்வியையே சுற்றிச் சுற்றி வந்தன.

"அதிகளவு எடையுடைய கனரக ஆயுதங்களைச் சுமப்பது பெண்களாகிய உங்களுக்குக் கடினம். உங்களுடைய மென்மைக்கு முரணாக இது இல்லையா?"

எங்களுக்கோ சிரிப்பாக இருந்தது. கருங்கற்களாலான அம்மி, ஆட்டுக்கல், திரிகை போன்றவற்றோடும் உரல், உலக்கைகளோடும் மிக நெருக்கமான உறவு வைத்திருக்கும் எங்களுடைய பூட்டி, பாட்டி, அம்மா ஆகியோரின் வாரிசுகளான எங்களுக்கு, ஐம்பது கலிபரைத் தூக்கிச் சுடுவதெல்லாம் ஒரு வேலையா? ஆட்டுக்கல்லில் தோசைக்கு அரைத்து முடித்தபின் அம்மா ஒற்றைக் கையால் குழவியை வெளியில் தூக்குவதை எப்போதும் பார்த்திருக்கும் எனக்கு ஆர்.பி.ஜி. எல்லாம் ஒரு சுமையா?

நெல்லுக்குற்றுகின்ற பெரும் உரலை மூன்று பெண்கள் சூழ்ந்துநின்று மூன்று உலக்கைகளால்

மாறிமாறிப்போடுவார்களே! அழகாக மாற்று லக்கை போடுவார்களே! அந்தக் கடின உழைப்புக்காரிகளின் மென்மையை, கலகலப்பை உரல்களின் அருகிருந்தால் புரிந்துகொள்ளலாம்.

அரியாத்தை காலத்தில் அங்குசம் ஆயுதம். அதை அவள் கையிலெடுத்தாள். எங்கள் காலத்தில் ஆர்.பி.ஜி ஆயுதம். இதை நாங்கள் கையிலெடுத்தோம். கால மாற்றத்தைச் சரியாகப் புரிந்துகொள்வதை விடுத்து ‘ஆண்களைப்போல் முடிவெட்டி, ஆண்கள்போல் காற்சட்டை அணிந்து, ஆண்கள்போல் போருக்குப்போய்’ என்று ஏன் எங்கள்மேல் வீண்பழி சுமத்தவேண்டும்?

ஃ ஃ ஃ

கொழும்பு நகரின் அகலமான அந்த வீதியில் விசுக் விசுக்கென நடந்தோம். அழைத்துச் சென்றவர் எங்களின் காதோடு முணுமுணுத்தார்.

“கையை இப்பிடி விசுக்காதேங்கோ. காலைக் கிட்டவச்சு நடவுங்கோ. முன்னுக்குப்போற கொழும்புப் பொம்பிளையின்ரை நடையைப் பாருங்கோ”


சரியாகப் போனது. பள்ளிமாணவியாக இருந்த காலத்திற்கூட இப்படியொரு அன்ன நடையை நான் நடந்தது கிடையாது. சுட்டாலும் இந்த நடை எங்களுக்கு வராது.

எல்லாம் வாங்கி முடிந்தது. பெரிய பைகளில் அடுக்கினோம். ஓட்டோவைக் கூப்பிட்டோம். பைகளைச் சட்டென இரு கைகளிலும் தூக்கியபடி வேகமாக நாலைந்து அடிகூட வைத்திருக்கமாட்டோம். அந்தக்குரல் மறுபடி காதோடு எச்சரித்தது.

“பைகளைக் கீழே போடுங்கோ. எல்லாரும் உங்களையே ஒரு மாதிரிப் பாக்கிறாங்கள். இஞ்ச ஒரு பொம்பிளையளும் இப்பிடித் தூக்கிற தில்லை”

ஓகோ. இப்போதுதான் புரிகின்றது. மின் அரவை இயந்திரத்தின் ஆளியை மட்டுமே இயக்கத்தெரிந்த பெண்களால், ஆட்டுக்கல்லில் அரைக்கும் பெண்களை ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாதுதான்.

# அஞ்சலி



அரங்கக் கலைஞன்

**நாகலிங்கம் சுந்தரலிங்கம்** அவர்கள்

யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச்சந்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.நா.சுந்தரலிங்கம் அவர்கள் யாழ்.புனித பரியோவான் கல்லூரியின் பழைய மாணவராவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைப் பூர்த்திசெய்த இவர் பின்னர் அரசாங்க சேவையில் கல்விசார் அதிகாரியாகக் கடமையாற்றினார். சிறுவயதுமுதல் கலையார்வம் கொண்டு நல்லூர் ஸ்ரீ காமாட்சியம்பாள் மடாலயத்தில் நடைபெறும் கலைநிகழ்வுகளில் பங்கேற்றார். பின்னர் அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட நாடக அரங்கியலுக்கான டிப்ளோமா கல்வியையும் பெற்று அதில் பட்டதாரியுமானார். ஈழத்தின் அரங்காற்றுகையில் மிகவும் விதந்துரைக்கப்படும் அபத்த நாடகமான ‘அபசுரத்’தையும் ஜனாதிபதி விருது பெற்ற நாடகமான ‘விழிப்பு’ நாடகத்தையும் எழுதி நெறியாள்கை செய்து முதலிடத்தையும் பெற்றார். ‘சுந்தா’ என நன்கு அறியப்பட்ட இவர் ‘இரு துயரங்கள்’ முதலிய ஆக்கங்களைப் படைத்தளித்து ஈழத்து அரங்காற்றுகைக்கு அளப்பரிய பணியாற்றினார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் அரங்கியற்துறையில் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றி நாடகத்துறையில் புதியவர் பலரை உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. அன்னாரின் இழப்பில் துயருறும் குடும்பத்தினருடனும், கலைத்துறையினருடனும் வெளிச்சமும் இணைந்து இந்தப் பெருங்கலைஞனுக்குத் தனது அஞ்சலியைச் செலுத்துகின்றது.

வெளிச்சம்

# சுனாமி அழித்த சுகங்கள்

ந.தகையன்

மார்கழி நீருமாடி
மணி அடித்துப் பள்ளியெழுச்சி பாடி
பாரோர் விழிக்க நல்ல பாவையும்பாடி
பூவையும் போட்டு
புனிதம் எல்லாம் சேர்த்து
எங்கள் ஊரின் மூலையிலே - ஓடும்
தேரையும் பார்க்க

தெருத்தெருவாய் பக்த அலைகள் செல்ல
சுகமான அன்றைய காலைப்பொழுது
பெருஞ் சோகம் சுமக்கும் என்று
யார் அறிவார், யார் நினைத்தார்.

ஈழத்துச் சிதம்பரன் தேரோடி - முடிக்குமுன்னே
எம்முருக்கு இந்து சமுத்திர
நீரோடி வருமென்று
யார் நினைத்தார், யார் அறிந்தார்.

நீரா வந்தது! நெருப்பா வந்தது!
வெள்ளை நுரை தள்ளிய பேயா வந்தது!
பேயலையா வந்தது!
வானும், கடலும் திரண்டு வழிமறித்து வந்ததுவா?
வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது
வர்ணிக்க முடியாது என்பதைவிட
வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது.


சுனாமியின் சுவடு

அண்ணாந்து பார்த்து
அது என்ன? என்பதற்குள்
அள்ளிக்கொண்ட அநியாய அலைகள்
ஆசைக் கிளியண்ணரின்
ஆவியையும் பறித்தல்லவோ சென்றது.

கட்டுகளை அறுத்த கட்டுமரங்களும்
கவிழ்ந்து, தவழ்ந்து விளையாடிய
கண்ணாடிப்படகுகளும்
மீண்டும் வரைந்து கொள்ளமுடியாது போன
வலைகளும், வாடிகளும்
எம் தொழிலாளரை விட்டுத்
தொலைந்துபோனவைகள்தான்.

இன்னும்
தொலையாது இருப்பவைகள்
எம்மவரின் உடைந்துபோன
உள்ளங்களும், உணர்வுகளுமே!
கிள்ளிக்கிள்ளித் தந்த கடலோ
எம்மவரின் தொழில் உடைமைகளை
எல்லாம்
அள்ளிக்கொண்டேபோனது.

சுடுகாடும் சுகமிழந்தது.
இடுகாடும் இடம்மாறிப்போனது.
நன்னீர்க் கிணறுகளும் - நாம்
இனி அருந்தமுடியாத வன்னீரானது.

நன்னீருமில்லை
நம்மிடம் அழுவதற்கு
கண்ணீருமில்லை - என்று
கரையிலே கிடந்ததெல்லாம்
கடலிலே கொடுத்துவிட்டு
வெறுங்கையுடனேயிருக்கும்
எம்மவர் நிலையினை
உங்கள் உள்ளங்களில்
ஒப்படைக்கின்றோம்.
□□

# சமாதானத்தின் வலி

ஆதிலட்சுமி சிவகுமார்

திண்ணையில் பாயைவிரித்துப் படுத்துக்கொண்டான் கணேசு. நல்ல காற்று அவன் மேற்பட்டது. படுத்துக்கிடந்தபடியே வானத்தைப் பார்த்தான். பூப்பூவாய் சொரிந்து கிடக்கும் நட்சத்திரங்கள் அவனைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டின. எண்ணிக்கையற்று நிறையவாய்... அதில் ஒரு நட்சத்திரம் சற்று வித்தியாசமாய், உற்றுப்பார்த்தான். அது அவனைப் பார்த் துச் சிரிப்பதுபோல உணர்ந்தான். அதன் முகமும்.. சிரிப்பும்... அவன் எங்கேயோ பார்த்த மாதிரி... மனதுக்குள் நெருக்கமாகியது.

"ஓ... அமுதன்..."

நினைவினுள் பொறிதட்டியது.

"நான் இனி இந்தப் பக்கம் வாறது குறைஞ்சிடும்.... தூரப்போறன்..."

"தூரவெண்டால்... கன தூரமே..."

"ம்... உந்த வானத்தளவு தூரமெண்டு நினையுங்கோவன்.... சிலவேளை வானத்திலைகூட இருக்கலாம்..."

சிரித்தபடி... கைகளைப் பற்றியபடி... மிகவும் இயல்பாகத்தான் சொன்னான்.

"அ..மு..த..ன்.."

ஒருதடவை அவன் பேரை உச்சரித்துப் பார்த்தான் கணேசு.

அமுதன் - இந்தக் குடும்பத்துக்கு எப்படி அறிமுகமானான் என்பது தெரியாது.

ஆனால் - இந்தக் குடும்பத்தில் ஒருவனாக இருந்தவன்.

கணேசுவைவிட அவன் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் மிக நெருக்கமானவனாயிருந்தான்.

அவனுடைய ஊர் தெரியாது. உறவுகளைப்பற்றித் தெரியாது.

என்ன கேட்டாலும் சிரிப்பான்... சிரிப்பதைத் தவிர சொற்கள் வெளிவராது.

அபூர்வமாகத்தான் கதைப்பான். பிள்ளைகளுடன் நன்றாகக் கதைப்பான். அவர்களோடு ஒருவனாய் விளையாடுவான். இப்போது அவன் வருவதில்லை. எங்கு இருப்பானோ... ஆனால் - அந்த நட்சத்திரம் அவனை நினைவூட்டியது.

அவனைப்போல யாரையாவது கண்டால்... மனைவி அவனைப்பற்றி நினைவுபடுத்துவாள்.

"ஏனப்பா இப்ப அந்த அமுதனண்ணை வாறேல்லை... சமாதான காலம்தானே... வரலாம் தானே..." என்பாள் மகள்... காலடியிற் கிடந்த நாய் உறுமியது. தலையைத் திருப்பிப் பார்த்தான். வேறு யாரோவீட்டு நாயொன்று வேலிக்கரையால் போய்க்கொண்டிருந்தது.

அவனுடைய மனைவி குழந்தைகளையும் கொண்டு ஊருக்குப்போயிருந்தாள். ஊரில் அவளுடைய அக்காவின் மகளுக்குத் திருமணம். மணமகன் வெளிநாடொன்றிலிருந்து வருகிறான்.

கணேசுவும் போயிருக்கவேண்டும்.

ஆனால்.... பசுமாடுகளையும், கோழிகளையும் விட்டு அவனால் போகமுடியாது.

கணேசு ஊரிலிருக்கும்போது - புடவைக் கடை ஒன்றில் காசாளராக இருந்தான். காலையில் ஏழு மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டால் - திரும்பி வீடுவர இரவு ஏழு மணியாகிவிடும்.

இடம் பெயர்ந்தபிறகு.... சொந்தமாக ஒரு சிறிய பெட்டிக்கடை வைத்திருந்தான். வருமானம் போதவில்லை.

விட்டுவிட்டு முத்தையன்கட்டில் வெள்ளாமை செய்தான். அதுவும் தொடர்ச்சியாகச் செய்யமுடியாமலிருந்தது.

வட்டக்கச்சியிலிருந்து தேங்காய் வாங்கி.. முழங்காவில் பகுதிக் கடைகளுக்கு விற்றான். அதுவும் உடம்புக்கு ஒத்துவரவில்லை.

இறுதியாகத்தான் வீட்டிலேயே ஏதாவது தொழில் செய்வது என்கின்ற நிலைப்பாட்டுக்கு வந்தான்.

வெள்ளாமையில் மிஞ்சிய காசு கொஞ்சம் இருந்தது. அதில் பசுமாடு வாங்கினான். கொஞ்சக் கோழிகளும் வாங்கினான். இரண்டும் அவனை ஏமாற்றவில்லை. நல்ல வருமானம். செலவுகள் எல்லாம் போக ஒவ்வொரு மாதமும் கையில் நாலாயிரம் மிஞ்சும்.

வவுனியாவுக்குப்போய் மோட்டார் சைக்கிள் ஒன்றுகூட வாங்கிவந்தான். இரண்டு வருடங்களுக்கு முன்னர் பிறந்த மகன் பிரதீபனின் பலன்தான் வருமானத்தையும் நிலையான தொழிலையும் தந்திருப்பதாக மனைவி அடிக்கடிச் சொல்லிக்கொள்வாள்.

அவள் இப்போது ஊருக்குப்போயிருப்பது இரண்டாவது தடவை. முதலொரு முறை வைத்திய ஆலோசனைக்காக பெரியாஸ்பத்திரிக்குப் போனபோது உறவினர்களையும் பார்த்து வந்திருந்தாள்.

அவளுடைய அண்ணன் மாநகரசபை அலுவலராக இருப்பதால் அவர் வீட்டிலேயே நான்கு நாட்கள் தங்கிவந்தாள்.

இப்போது சுன்னாகத்திற்தான் அவளுடைய அக்கா மகளுக்குத் திருமணவீடு. அங்குதான் அவள் நிற்பாள்.

ஊர்க்கலியாணம் என்றால் மிகவும் களைகட்டியிருக்கும். இப்போது கிராமப்புறக் கொண்டாட்டங்களிலும் நகர்ப்புற நாகரிகங்கள் நுழைந்துவிட்டதை எண்ணி அவன் மனம் வருத்தமுற்றது.

இந்த நாகரிக நுழைவுகளால் உறவுகள் அந்நியப்பட்டுப்போவதுதான் மிச்சம் என்பது அவனது நினைப்பாக இருந்தது.

"இப்ப வாழையிலைச் சாப்பாடெல்லாம் மறைஞ்சு... முள்ளுக் கரண்டியளும் கத்தியளும்தான் மச்சான் எங்க பார்த்தாலும்..."

ஒருநாள் ஊர்பற்றிக் கதைத்துக்கொண்டிருந்தபோது கிருபா சொன்னது ஞாபகத்



துக்கு வந்தது.

மனைவி வருவதற்கு இன்னமும் இரண்டு நாட்களாவது செல்லும். கணேசு இப்போ வரும்போதுதான் சந்திக்கடையில் இடியப்பம் சாப்பிட்டுவிட்டு வந்தான்.

வீடு கலகலப்பின்றி வெறிச்சோடிக் கிடப்பது அவனுக்கு மனவருத்தத்தைத் தந்தது.

விடிந்தவுடன் தொலைத் தொடர்பு நிலையத்துக்குப்போய்... பவானியையும் பிள்ளைகளையும் விசாரித்துப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

நுளம்புகள் காதருகே சங்கீதம் பாடின. ஊர்போன மனைவியினதும் குழந்தைகள



சுனாமியின் சுவடு

தும் நினைவுகளுடனேயே கணேசு ஒன்றித்திருந்தான்.

மூத்தவள் கார்த்திகாவுக்கு ஒன்பது வயது. அவள் பெரியவளானால் ஊரிற்தான் சிறப்பாகக் கொண்டாடவேண்டும் என்பது பவானியின் விருப்பம். அவனுக்கு அதில் விருப்பமில்லை என்றாலும் - எந்த அபிப்பிராயமும் சொல்லாமலிருந்தான். ஊர்முழுவதும் நிறைந்திருக்கும் இராணுவத்தினரும்... அவர்களுடைய காவல் நிலைகளும், ஊரின் நாகரிக மோகமும் அவனுக்கு அசௌகரியங்களாகவேபட்டது.

சனிக்கிழமை காலை பத்துமணிக்கெல்லாம் பவானி வீட்டுக்கு வந்துவிட்டாள். கணேசு சந்தைக்குப் போய்விட்டு வந்த போது முற்றத்தில் கொடிமுழுவதும் உடுப்புகள் உலர்ந்துகொண்டிருந்தன. பிள்ளைகளில் இருவர் நித்திரை. குசினிக்குள் அடுப்புப் புகைந்துகொண்டிருந்தது. பவானி கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும்... மூத்தவள் "அப்பா இஞ்ச... அப்பா இஞ்ச" என்று கொண்டு வந்த பொருட்களையெல்லாம் காட்டினாள். ஒரு பை முழுவதும் மணிக்கடைச் சாமான்கள் இருந்தன.

வாசலில் குதியுயர்ந்த செருப்புகள் கிடந்தன.

பவானி வந்தாள்.

"காலமை என்னப்பா சாப்பிட்டனீங்கள்?..."

"பசிக்கேல்ல... இனித்தான் ஏதும் சாப்பிடவேணும்..."

"நான் இல்லாட்டி... மிச்சம்பிடிக்கிறதுக்காக பசிக்கேல்லை பசிக்கேல்லை எண்டு பட்டினி கிடப்பியள்..."

குசினிக்குள் போனாள்.

"உங்கட குணம் தெரிஞ்சு நான் வரேக்குள்ளையே பஸ்ஸால இறங்கின இடத்திலை பணிஸ் வாங்கியந்தனான்... இந்தாங்கோ..."

அவன் வாங்கி அதை அருகே வைத்தான்.

"ஊரில எல்லாம் அந்தமாதிரி இருக்குதுகளப்பா..."

"இவ்வளவுகாலமும் எவ்வளவு கஷ்டத்துக்குள்ள இருந்த சனம்... நல்லா இருக்கத்தானே வேணும்..."

"..........."

"சின்னவன் அங்கை ஒரு குளப்படியும் செய்யேல்லையே...?"

"அங்கை எங்கை... பாட்டும்.. படமும்.. படப்பிடிப்பும்... அதுகளுக்கு குளப்படி செய்ய நேரம் கிடந்தாலெல்லோ... சாப்பாடு தண்ணியே வில்லங்கப்பிடிச்சுத்தான் குடுக்கிறது. பிரதிக்குட்டிகூட கண்வெட்டாம படம் பாத்துதப்பா..."

மனைவியின் குரலில் என்றுமில்லாத உற்சாகம் புகுந்திருப்பதை அவன் அவதானித்துக்கொண்டான்.

"முட்டை கடையில ஒன்பது ரூபாவுக்கு எடுக்கிறாங்களப்பா. நேற்றும் நாப்பது குடுத்தனான்..."

"............"

"இன்னுமொரு கூட்டைப் போடுவமெண்டு யோசிக்கிறன்... சபாநிதி கொஞ்சக் கல்லுக்கிடக்குத் தரலாமெண்டவன்..."

"உங்களுக்கு ஒரே கோழிப் பைத்தியம் தான்..."

"ஏன் பவானி... உந்தக் கோழியளாலை தானே இண்டைக்கு எங்கட சீவியம் போகுது...'

"போகுதுதான்..."

"என்ன ஒரு மாதிரி இழுக்கிறீர்.."

"நீங்கள் கோழி, மாடு எண்டு உயிரை விடுகிறியள்... ஊரில ஆனா ஆவன்னா தெரியாதவனெல்லாம் ராசா மாதிரி இருக்கிறாங்கள்..."

அவனுக்கு மனதில் வலி எடுத்தது...

"அக்கான்ர மருமோன் நோர்வேயில இருந்து வந்திருக்கிறான்... சதாசிவச் சித்தப்பான்ர மூத்தவன் ரொறன்ரோவில இருந்து வந்தவன்... நவாலி மாமியின்ர மாமா கட்டாறிலை இருந்து வந்திருக்கிறார். யோகேசுச் சித்தியின்ர சித்தப்பா ஜேர்மனில இருந்து வந்தவர்... நல்லகாலம் நீங்கள் அங்க வந்திருந்தா தலையக் குனிஞ்சுகொண்டுதான் நிண்டிருக்க வேணும்..."

அவன் திடுக்கிட்டுப்போய் பவானியைப் பார்த்தான். அவள் கழுத்தில் யாரோ பரிசாகக் கொடுத்த தங்கச் சங்கிலி மின்னிக்கொண்டிருந்தது. ஏனோ அவனுக்கு அழுகை வரும்போல இருந்தது.

பேசாமல் நிலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

பவானி சுடச்சுடக் தேநீரைக் கொண்டு வந்து வைத்துவிட்டு அவனருகே நெருக்கமாக அமர்ந்தாள். அவளிலிருந்து வந்த நறுமணம் அவனை ஈர்த்தது. கைவிரல்களுக்கும் கால்விரல்களுக்கும் சாயமிட்டிருந்தாள்.

"என்னப்பா... குழம்பிப்போனீங்களே..."

அவனுடைய தலைமுடியை விரல்களால் நீவியபடி கேட்டாள்.

"எல்லோரும் "டிப்ரொப்பா" வெளிநாட்டில இருந்து வந்துநிக்கிறாங்கள். நீங்கள் அங்க வந்தா என்னவேலையெண்டு சொல்லுறது?..."


அவளுடைய பார்வைக்குள் இருக்கும் அறியாமை அவனுக்குப் புரிந்தது.

மௌனமாகத் தேநீரை எடுத்துக்குடித்தான்.

சித்தப்பான்ரை மூத்தவன் திரும்பிப் போகேக்கை ஆறேழுபேரைக் கூட்டிக் கொண்டுபோய் கொழும்பில வைச்சு கனடாக்கு ஏத்திப்போட்டுத்தான் போகப்போறானாம்..."

"........."

"உங்களுக்கு வெளியால போற நோக்



சஞாயிலின் சுட்டு

கம் இல்லையோ எண்டு கேட்டவன்...''

"........."

"இஞ்ச ஒருவரியம் கஷ்டப்பட்டு உழைக்கிறதை அங்க மூண்டு மாதத்திலை உழைக்கலாமாம்...''

ஏழு வருடங்களுக்கு முதல் ஜேர்மனிக்குப்போகவென்று எல்லோரிடமும் விடைபெற்றுச் சென்ற செந்தில் கொள்கலனில் பாறினில் சடலமாக எடுக்கப்பட்டு.. திருப்பி அனுப்பப்பட்டது நினைவில் வந்தது அவனுக்கு. "திரும்பிப்போகேக்கை இஞ்சாலையும் ஒருக்கால் வந்திட்டுப்போறதெண்டு சொன்னவன்... வந்தால் என்ன செய்யிறது. வீடும் இப்பிடிச் சொட்டையும் சொறியுமாகக் கிடக்கு...''

"உன்ர பிழையுமில்லை... என்ர பிழையுமில்லை இதெல்லாம் இந்தச் சமாதானத்தின்ரை பிழை..'

"நான் சொல்லுறது உங்களுக்குப் பிடிக்கேல்லையே...''

முகத்துக்கு நெருக்கமாகிக் கேட்டாள்.

"என்னால இந்த இடத்தைவிட்டு ஒருடமும் போகேலாது...''

சடாரென்று எழுந்து படலைவரை நடந்தான். பவானியின் விசும்பல் ஒலி கேட்டது.

பத்து வருச வாழ்க்கையில முதல்முதலாய் அழுகிறாள்.

அவள் கண்ணீர் அவனை இழுத்தது. கால்கள் மேற்கொண்டு நடக்க மறுத்தன. திரும்பிவந்து அவளின் தலையைத் தொட்டான். கண்களைத் துடைத்துக்கொண்டு பணிசை எடுத்து நீட்டினாள்.

'சாப்பிடுங்கோ...'

அவன் வாங்கிக்கொண்டு திண்ணையில் அமர்ந்தான். அவளும் அருகே அமர்ந்தாள்.




**வட அல்வை முருகேசனார்**
**பன்முகப் பார்வை**

சமூக விடுதலைப் பணியாளர் ச.முருகேசு அவர்களின் நினைவு வெளியீடு

தொகுப்பாசிரியர்: மு.அநாதரட்சகன்

வெளியீடு:
ஆனந்தகானம்
ஆவரங்கால், புத்தூர்.




தவிர
கவிதைகளுக்கான
இருதிங்கள் இதழ்
ஆசிரியர்: தானா.விஷ்ணு

தொடர்பு முகவரி:
498/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு: ரூபா 10.00


சுனாமியின் சுவடு

# சுனாமியும் சிறீலங்கா அரசும்

அ.அன்ரனி

2004ஆம் ஆண்டு இறுதியின் சோக நிகழ்வாகவும் பல்லாயிரம் மனித உயிர் அழிவினதும் சொத்தழிவினதும் காரணகர்த்தாவாகவும் உருவெடுத்த சுனாமி பற்றிய பேச்சுக்கள் பையப்பைய அடங்கிப்போயின.

பேரலையில் அள்ளுண்டு மாண்டுபோனவர் போக காணாமல் போனவர் பட்டியல் நீள்வதும் மீள்கட்டுமானம், மீள்புனரமைப்புச் சார்ந்த நடவடிக்கைகள் சம்பந்தமான நிகழ்ச்சி நிரல் தயாரிப்புகளும் பேச்சுகளும் தற்போதும் தொடர்கின்றன.

சுனாமி அனர்த்தம் நடந்து இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன. ஏதோ ஒரு சில பகுதிக்கு மட்டும் மனிதாபிமான உதவிகள் சென்றடைந்தன. அதிகம் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்திற்கு பெருமெடுப்பில் உதவிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக அரசு பறைசாற்றுகின்றது. ஆனால், உண்மை பாதிக்கப்பட்ட மக்களுக்குத்தான் வெளிச்சம்.

பேரனர்த்தம் நடந்து முடிந்து நாட்கள் பல கடந்துவிட்டன. இன்னும்கூட சரியானபடி உயிரிழப்பு, சொத்தழிவு பற்றிய தகவலைத் திரட்ட முடியாது அரசு திணறுகிறது. அதீத அக்கறையின்மை, பாராமுகம், இனப்பிரிப்பு என்பன புரையோடிப்போயிருப்பதால் அரச தரப்பின் செயற்பாடுகள் இவ்விடயத்தில் மந்தகதியில் இருப்பதில் விநோதமில்லையே.

இலங்கையின் பெரும்பகுதி கடலால் சூழப்பட்டுள்ளது. கரையோரப் பாதுகாப்பு எவ்வாறு அமைந்திருக்கவேண்டும் என்பதும் தகுந்த கருவிகளின் துணையோடு இயற்கை அழிவுகளால் நாடு தாக்கப்படாது பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் அரசிடமே உள்ளது. ஆனால் தமது சாக்கடை அரசியல் சிம்மாசனத்திற்கும் கொழும்பின் ஸ்திரத்திற்கும் கோடிக்கணக்கில் செலவு செய்துவரும் அரசு நாட்டின் பாதுகாப்பு வேலைகளைப் பலவீனமாக வைத்திருந்தமை ஒன்றும் வியப்பில்லையே.

பகைமையை மறந்து மனிதாபிமானத்துடனும் அக்கறையுடனும் செயற்படவேண்டிய காலம் இது. பேரினவாதம் பேசி அதையே மனதில் நினைத்து இனவாதச் சிந்தனையோடு செயற்படுவது உகந்ததொன்றல்ல. சுனாமி மனித இனங்களைத்தான் அழித்தது. சாதி, மதம் பார்த்து அது கொன்று குவிக்கவில்லை. சுனாமியின் பின்னும் திருந்தாத சில மனிதர்கள் சுனாமியைவிடக் கொடியர்கள் என்பதொன்றும் தமிழர் தரப்பிற்குத் தெரியாத ஒன்றல்ல.

சுனாமி ஒரு நொடியில் பல்லாயிரம்பேரை அழித்தது. சிங்களப் பேரினவாதம் இரு தசாப்தங்களாக பல்லாயிரம் தமிழர்களைக் கொன்று குவித்தது.

சுனாமி அழிவுப்படலம் கடலிலிருந்து பிறந்தது. சிங்கள இனவாத ஆழியோ அவர் அடிமன ஆழத்தில் புரையோடிப்போயிருக்கும் குரோதத்திலிருந்து பிறந்தது. இதுதான் வேற்றுமை.

தமிழீழப்போரை எப்பாடுபட்டாவது அடக்கியே தீருவது என்ற போக்கில் போரைத் தீவிரப்படுத்தி அதற்காகவே இலங்கையின் அனைத்து வளங்களையும் தாரை வார்த்தவர்களல்லவா இவர்கள்?

பாதுகாப்புச் செலவீனத்தில் பத்தில் ஒரு பங்காவது நாட்டின் உண்மையான தேவைக்குச் செலவு செய்திருந்தால் நாட்டின் பேரழிவினை அரைப் பங்கிற்காவது குறைத்திருக்கலாம் அல்லவா? இது மக்களது கருத்து.


பேரழிவின் பின்னாலும் பேரினவாதக் கண்ணோடு பாதிக்கப்பட்ட மக்களைத் தரம்பிரிப்பது வேதனைக்குரியதொன்றே. போதாததிற்கு பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டு சேதாரங்களைத் தரிசிக்கவெனவந்த பல சர்வதேச அரசியல் தலைவர்களையும், சர்வதேச மனிதாபிமான தொண்டர் நிறுவன அதிகாரிகளையும் கொழும்புத் தரிசிப்போடு மாத்திரம் அனுப்பிவிட்டது அரசு.

அவர்களால் அனுப்பப்பட்ட உதவிகளையும் அரசு எதற்காகப் பங்கிட்டுக்கொண்டது? அரச களஞ்சியங்களையும் இராணுவத் தள மையங்களின் களஞ்சியங்களையும் நிரப்பிவிடவே அவை கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டனவோ? இது அம்பலத்துக்கு வராத செய்தியாக இருக்கின்றது.

'உடையார் செலவில் சடையார் வாணம்விட்ட' கதையாய் பேரழிவைக் காரணங்காட்டி கொழும்புக் களஞ்சியங்களை நிரப்பிக்கொள்கிறது அரசு. மனிதாபிமான உதவிகளாக சர்வதேசம் அள்ளிக் கொடுத்த உதவிகளை இராணுவ உதவியென பெயர்மாற்றம் செய்து பொத்திக்கொண்டது. அப்பம் பிரித்த குரங்கின் கதையாய் இருந்துவிட்டு உலகத்தின் கவனம் தன்னில் குறைபிடிக்காத வகையில் சில கிள்ளித்தெளிப்பு நடவடிக்கையைப் பிரபலப்படுத்தவும் தவறவில்லை. அனைத்து மக்களுக்கும் உதவிகள் சென்றடைகின்றன எனப் பூச்சாண்டி காட்டிவிட்டு அரச பூதம் உதவிகளைத் தின்றுவிட்டு ஏப்பம் விடுகிறது.

தன்னிறைவுப் பொருளாதார முன்னேற்ற நிலையை அடையக்கூடியவிதமாய் பல அரிய மூலவளங்கள் இலங்கையில் உண்டு. அதிலும் குறிப்பாக கடலை அண்டிய பிரதேசங்களிலேயே அம்மூலவளம் குவிந்துள்ளது. அதனைச் சரியான முறையிற் பாவித்து முன்னேற்றமடைய இற்றைவரையிலான சிங்கள அரசுகள் எவையும் அக்கறைகாட்டவில்லை. தானும் பிரயோசனப் படுத்தாதுவிட்டதுடன் அந்நிய தேசங்களுக்கும் அதனைத் தாரைவார்த்தன. அதனால் கிடைத்த பொருளாதாரத்தை யுத்தம் எனும் பூதத்துக்குத் தீனிபோடச் செலவு செய்தன.

அவ்வாறாக விரயமான பொருளாதாரத்தை எல்லாம் தகுந்த செயல்வினைக்கு விதைத்திருந்தால், இன்று இலங்கையில் அழிந்துபோன மனித உடைமை அழிவுகளில் குறைந்தது பாதியளவாவது குறைத்திருக்கலாமல்லவா? இன்று சர்வதேச உதவிகளை எதிர்பார்த்து கொட்டாவி விடத் தேவையில்லை. மனித உயிர்களை மதிக்கும் தன்மையினை வளர்த்துக்கொண்டவர்களாலல்லவா அப்படி நடந்துகொள்ள முடியும். மனித குல அழிவை விரும்பும் மகா பேரினவாத குண்டர்களுக்கு எங்கே இது விளங்கப்போகிறது?


சுனாமியின் சுவடு

கோடிகோடியாகப் போருக்காக அரசு சர்வ தேசத்திடம் கடன்பட்டது. ஒருமுறைதானும் மிக முக்கிய தேவையெனக் கருதப்படும் இயற்கை அழிவுகளிலிருந்து பாதுகாக்கும்பொருட்டு முன்னெச்சரிக்கைக் கருவிகளையும்,, ஆலோசனைகளையும் பெற்றிருக்கலாமல்லவா? இவை யாவையும் மறந்து தனியே போர்தான் வாழ்வு என்றிருந்தார்கள். இன்று தான் பலனைக் கண்டார்கள். அவர்களுக்கென்ன? அனுபவித்தவர்களுக்கல்லவா தெரியும்? அழிந்துபோனது சாதாரண மக்கள்தானே.

இதில் மேலும் வேதனைக்குரிய விடயமென்றிருப்பது பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் மீண்டும் பாதிக்கப்பட்டதே. அரச படைகளின் ஆக்கிரமிப்பாலும், சிறிது நாளுக்கு முன்னர் மட்டக்களப்பில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினாலும் தமது சொந்த நிலங்களை இழந்து பல தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து இருந்தார்கள். யுத்தத் தாண்டவத்தினாலும், வெள்ளப்பெருக்கினாலும் உயிரிழப்பையும், இடப்பெயர்வையும் சந்தித்தவர்கள் இடம்பெயர்ந்த இடங்களில் தமது ஸ்திரத்தன்மையினைக் கட்டியெழுப்ப முன்னமே அவர்களைச் சுனாமி ஆழிப்பேரலை தாக்கி அழித்தமை சகிக்க முடியாத ஒன்று. அதிலும் மட்டக்களப்பு மக்களின் நிலையோ சொல்லி மாளாது.

வெள்ளம் பாதித்த அந்த மக்களுக்கான நிவாரணப்பணி சம்பந்தமாக வழமையான ஆலோசனைக்கூட்டம், நிகழ்ச்சித் தயாரிப்பு என்பன மாத்திரத்தோடு நின்றுவிட்டது அரசின் உடனடி நிவாரணப் பணி. எந்தவித நிவாரணப் பணியும் கிடைக்கப்பெறாதநிலையில் அந்த மக்களையே சுனாமி ஆழிப்பேரலையும் தாக்கி அழித்தது வேதனைக்குரியதொன்று. ஒரு சில ஆயிரம்பேர் பாதிக்கப்பட்ட வெள்ளப்பெருக்கு விடயத்தையே சரியாக அணுகமுடியாத அரசு பல்லாயிரம்பேரைப் பாதித்த அதிலும் குறிப்பாக தமிழர் தாயகப் பிரதேசங்களில் அநேகம்பேர் பாதிக்கப்பட்ட சுனாமி அனர்த்த விடயத்தில் எவ்விதம் வழுவற்ற விதத்தில் நடந்து கொள்ளும்? ஏதோ பேச்சளவில் உதவிப்பணி தொடரலாமே ஒழிய செயலளவில் அரசதரப்பு பாராமுகத்துடனேயே செயற்படுகின்றது. சுத்து மாத்து அரசியலில் ஊறிப்போன அரசு மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ளுமென்று நாமும் எதிர்பார்ப்பது முட்டாளத்தன மானதொன்றே.

சிறுபான்மைத் தமிழர்களை அழிப்பதற்காய் கண்டகண்ட குண்டர்களோடு கூட்டு வைத்தது சிங்களத் தலைமைக் கட்சி. அந்தக் குண்டர்களையும் அதன் அடியாட்களையும் அடிக்கடி குஷிப்படுத்தவேண்டிய தேவை அதற்கு ஏற்பட்டது. எந்தத் தசைத்துண்டுக்கும் பசி அடங்காது கொழுத்தவர்களுக்குத் தமிழினத்தின் அழிவு இன்னும் சந்தோஷத்தை ஏற்படுத்தியது.

மேலும் தமிழினத்தின்மீது தொடர் யுத்தத்தை நடத்தவேண்டிய தேவை அரசுக்கு இருக்கிறது. யுத்தம் நடத்தவேண்டுமானால் யுத்தகளத்தில் இருக்கும் இராணுவத் தளபதிகளின் பேச்சுக்கும், விருப்புக்கும் தலையாட்டித்தானே ஆகவேண்டும். அவர்களின் இராணுவத் தேவைகளையும் பூர்த்திசெய்யத்தானே வேண்டும். எப்படித்தான் நொந்துபோன இலங்கைப் பொருளாதாரத்தால் இதைச் சீர்செய்துகொள்ள முடியும்? எனவேதான் அரசு எங்கள் திருநாட்டையும் அந்நிய தேசங்களிடம் தாரைவார்க்கத் துடிக்கிறது.

நிலைமை இவ்வாறிருக்க கேவலம் இன்னுமொரு சம்பவமும் சுனாமி நடந்து முடிந்த சில நாட்களின் பின்னர் நடந்தது. அதாவது எத்தனை உயிர்கள் பறிபோனது? மக்களுக்கான உடனடி மனிதாபிமான உதவிகள் சென்றடைந்ததா? புனரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றதா? இதையே உண்மையில் அரச தலைவர்களாக இருக்கின்றவர்களின் வாயில் தற்போது எழுகின்ற கேள்விகளாக இருக்கவேண்டும்? ஆனால், எழுப்பப்பட்டது வேறுவிதமான கேள்விகள். புலிகளின் தலைவர் என்னவானார்? புலிகள் எத்தனைபேர் மாண்டார்கள்? ஆயுதங்கள் எத்தனை அழிந்துபோயின? இப்படியான கேள்விகளே எழுப்பப்பட்டன. போதாததிற்கு தேசியத் தலைவர் மறைந்துவிட்டார் என்று பெரும்போடு ஒன்றையும் போட்டுடைத்தனர்.

மேலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிவாரணப் பணியினை மேற்கொள்ள புலிகள் தடை விதிக்கின்றனர் என்றும் ஒரு குற்றச்சாட்டு. புலிகள் நிவாரணப் பொருட்களைப் பறித்துச் சென்றதாகவும் இன்னோர் சாராரின் குற்றச்சாட்டு. வருகின்ற உதவிகள் தமக்கூடாகவே வரவேண்டும் என்றும், தாமே அரைகுறையாகக் கிள்ளித் தெளிப்புகளைச் செய்யவேண்டும் என்பதும் அரசின் கருத்தாகவும் இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரணம் சரிவர சென்றடையவேண்டும் என்பதே புலிகளது நியாயமான கருத்தாகும்.



சுனாமியின் சுவடு

அத்தோடு அரசின் கபடத்தன்மையினை நன்கு அறிந்துவைத்திருப்பவர்கள் புலிகளல்லவா? அதனால் அரசின் கையை எதிர்பாராது புலம்பெயர் நாடுகளில் உள்ள எமது உறவுகள் கையளித்த உதவிகளைக் கொண்டும், ஒரு சில சர்வதேச நிறுவனங்களின் உதவியுடனும் வீடமைத்துக் கொடுத்தனர். படகு கட்டுமானத் தொழிற் பணியகங்களையும், இதர மனிதாபிமானப் பணிகளையும் T.R.O நிறுவனத்தினர் மூலமாக ஏற்படுத்திக் கொடுத்தார்கள் புலிகள். இவை எல்லாவற்றையும்விட மட்டக்களப்பு, அம்பாறைப் பிரதேசங்களில் மூவினத்தார்க்கும் T.R.O நிறுவனம் மனிதாபிமான உதவிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சுனாமிப் பேரலைஅனர்த்த மீள்கட்டுமான புனரமைப்பு நிதிக்காக இன்றுவரை சர்வதேச நாடுகள் பதினைந்து ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் அரசிடம் ஒப்படைத்துள்ளது. அந்த உதவியில் எத்தனை ஆயிரம் தமிழ்ப்பிரதேசத்தின் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்டது? எத்தனை வீடுகள் கட்டி மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன? பாதிப்புற்ற மீனவர் சமூகத்தில் ஒரு குடும்பத்திற்கு ஒரு மீன்பிடி வள்ளமாவது வேண்டாம் மீன்பிடி வலை யாவது கொடுக்கப்பட்டதா? எதுவுமேயில்லை. கோடியாகக் கிடைத்த பண உதவியும் பொருள் உதவிகளும் என்னவாகின? பாதிக்கப்பட்ட மக்களுக்கென வந்தது நாளை போர் முஸ்தீபுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதா? இது இன்று தமிழ் மக்களின் கேள்வி.

ஆகவே, சுனாமி எமக்கு மட்டுமல்ல சர்வதேசப் பார்வைக்கும் பல உண்மைகளை வெளிப்படுத்தி நிற்கிறது. புலிகளா, சிங்கள அரசா பயங்கரவாதிகள் என்பதை சுனாமி அனர்த்தத்தின் பின்னான அரசின் நடவடிக்கையில் இருந்து சர்வதேசம் புரிந்துகொண்டிருக்கும்.

இரு தசாப்தங்களாக அழுது புலம்பினோம் கூக்குரலிட்டோம் உலகம் கண்டுகொள்ளவில்லை. ஒருநொடியில் உலகில் சில பாகங்களை சுனாமி உலுக்கியது. அதன் பிரகாரம் நேரடித் தரிசிப்புகளும் அழிவு விபரங்களும் உலகத்தின் கண்களைத் திறக்க வைத்தது. இனியாவது தமிழினத்திற்கு உதவிகள் கிடைக்குமா? சுனாமி விழுங்கி ஏப்பம்விட்ட மக்கள் போக மிச்சமானவர்களுக்காவது உதவிகள் கிட்டுமா? அனுப்புகின்ற பணம், பொருள், உதவிகள் சரிவரக் கிடைக்கப்பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமா? காத்திருந்து பார்ப்போம்.




**கடல் அனர்த்தம்**
**சுனாமியின் எழுத்தாவணம்**
**ஆசிரியர் : வ.மா.குலேந்திரன்**


**வெளியீடு: தமிழினி பப்ளிகேஷன்**
**112 Bick ley Street,**
**London SW17 9NE, U.K.**

**விலை: இலங்கையில் ரூபா 60.00**

# காலம்தோறும் கடல்கோள்கள்

பொன்.பூலோகசிங்கம்

மானிட வரலாறு உருவான காலம் தொட்டு கடல்கோள்கள் இடம்பெற்று வந்துள்ளன. இதற்கான சான்றுகள் நாடுகளின் வரலாறுகளில் முழுமையாகப் பதிவாக்கப்படவில்லை. நாடுகளின் வரலாற்றில் 1703ஆம் ஆண்டு ஜப்பானில் இடம்பெற்ற சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் பற்றி சான்று கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த அனர்த்தத்தில் சுமார் ஒரு இலட்சம் ஜப்பானியர்கள் இறந்துள்ளனர். இக்காலகட்டத்திற்கு முன்னர் ஏற்பட்ட கடல்கோள்கள் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் இல்லாவிடினும் இலக்கியச் சான்றுகள் காணப்படுகின்றன.



## கண்டங்கள் பற்றிய ஆராய்ச்சி

விஞ்ஞான பூர்வமாக கண்டங்கள் பற்றி ஆராய்ந்த பூகற்பவியளலாளர்கள் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளையெல்லாம் நிலப்பரப்பால் ஒன்று சேர்த்த பரந்த கண்டம் ஒன்று இருந்தது என்றும் அது "லெமூரியா" கண்டம் என்றும் குறிப்பிடுகின்றனர். இது பற்றித் தமிழ் இலக்கியத்தில் எதுவும் கூறப்படாத போதும் மிகவும் தொன்மையான தமிழ் நூலான தொல்காப்பியத்தில் தமிழ் கூறுநல்லுலகம் என்பது பற்றிய ஒரு பாயிரம் காணப்படுகின்றது. அது பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகத்து"

என அந்தத் தொல்காப்பியப் பாயிரம் குறிப்பிடுகின்றது. இங்கு வடவேங்கடம் என்பது வடக்கேயிருந்த மலையைக் குறிக்கின்றது. தெற்கே குமரி என்பதும் மலையைத்தான் குறிப்பிடுகின்றது. தமிழ் கூறு நல்லுலகின் பண்டைய எல்லைகளாக மலைகள் வடக்கும் தெற்குமாக இருக்கின்ற அதேவேளையில் கிழக்கும் மேற்கும் ஆள் புல நீட்பரப்பை எல்லையாகக் கொண்டிருந்தன என்பது விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகளின் முடிவாகும்.

## சிலப்பதிகாரம் தரும் தகவல்

தென்குமரிமலையிற்தான் பஃறுளி ஆறு ஓடியதாகத் தெரிகின்றது. சிலப்பதிகாரத்தில் இந்த ஆறுபற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்து
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள..

குமரிக் கண்டத்தைக் கடல்கோள் தாக்கியபோது இந்தப் பஃறுளி ஆறும் கடலோடு கலந்துவிட்டது. குமரிக் கண்டத்தில் ஏற்பட்ட கடல்கோள் காரணமாக 49 நாடுகள் அழிந்து போனதாக சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார்.

இதேபோல இந்தக் கடல்கோள் பற்றிய

தகவல்கள் மகாநாமன் எழுதிய மகாவம் சத்திலும் இராஜவலிய என்ற பாளிமொழில் எழுதப்பட்ட சிங்கள, பௌத்த வரலாற்று நூலிலும் காணப்படுகின்றது.

## கலைப்பொருட்களின் இழப்பு.

காலத்திற்குக் காலம் ஏற்பட்ட கடல் கோள்கள் நிலத்தை விழுங்கின என்று கூறுவதைவிட அவை நிலத்தைச் சூறையா டின, மரண அவலத்தை ஏற்படுத்தின. பொதுமக்களின் சொத்துக்களிற்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி மக்கள் வாழ்வைச் சீர்குலைத்து நிர்மூலமாக்கின. நாகரிகத் தின் தொட்டில் என அழைக்கப்படும் நதிக்கரைகளையும் அவை சுமந்துநின்ற மக்கள் குடியிருப்புக்களையும் நாசம் செய் தன. பண்பாட்டு விழுமியங்களின் அடை யாளச் சின்னங்களான சிற்பங்களையும், ஓவியங்களையும், ஏனைய பிற கலைப் பொக்கிஷங்களையும் அவை காவு கொண்ட தோடு கடலுக்குள் அள்ளிச் சென்றன. கடல் கோள்கள் ஏற்பட்டபோதெல்லாம் மக்கள் இடப்பெயர்வுகளும் பின்தொடர்ந்தன.

## முதல் இடப்பெயர்வு

சுமார் கி.மு. 3000 ஆண்டளவில் அமெ ரிக்காக் கண்டத்தில் ஏற்பட்ட கடல்கோள் கள் காரணமாக தமிழ்மொழி பேசிய மக்கள் கூட்டத்தினரில் ஒரு பகுதியினர் இடம்பெயர்ந்து வட இந்தியாவின் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் குடியேறினர். மொகஞ் சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட சேர்.ஜோன் மாசல், சேர்.வில்லியம் ஜோன்ஸ் போன் றோர் 1925ஆம் ஆண்டு இதுபற்றிய தமது முடிவுகளை விஞ்ஞான பூர்வமான ஆரா ய்ச்சி மூலம் புலப்படுத்தினார்கள். இந்தக் கடல்கோள்கள் பற்றிய குறிப்புக்களைத் தென்னகத்து ஆய்வாளர்களும் வெளிப் படுத்தியுள்ளனர்.

தமிழக வரலாற்றில் சேர சோழ பாண் டியர் என மூவேந்தர் காலம் குறிப்பிடப் படுகின்றது. இதில் பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்ததாகக் கூறப்படுகின்றது. முதற்சங்கம் அமைக்கப் பட்ட தென்மதுரை கடல்கோள் காரணமாக 4000 வருடங்களுக்கு முன்னர் அழிந்து போனதாகக் கூறப்படுகின்றது. இதன்பின் னர் பாண்டிய மன்னர்களின் இராசதானி யாக கபாடபுரம் விளங்கியது. இங்குதான் இடைச்சங்கம் அமைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. அதனைச் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பதாக கடல்கோள் காவு கொண்டது.

## இளங்கோவும் ஷேக்ஸ்பியரும்

தமிழில் எழுந்த ஐம்பெருங்காப்பியங் களுள் சிலப்பதிகாரம் ஒன்றுதான் சமூக வாழ்க்கையை மையப்பொருளாகக் கொண்ட காப்பியமாகும். ஷேக்ஸ்பியர் வரைந்த வெனிஸ் நகரத்து வணிகர் சமூக வாழ்க் கையை எடுத்தியம்புவது போல சிலப்பதி காரம் வணிகர் வாழ் நிலையைப் பின்புல மாகக் கொண்டதாகும். ஷேக்ஸ்பியர் இத் தாலியில் உள்ள வெனிஸ்நகரை வியந்து போற்றுவதுபோல இளங்கோவடிகள் சிலப் பதிகாரத்தில் தமிழகத்து காவிரிப்பூம் பட்டினத்தையும், இங்கு இடம்பெற்ற இந்திர விழாவையும் சிலாகித்துப் பாடியுள்ளார். இந்தக் காவிரிப்பூம்பட்டினம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பதாக கடல்கோள் அனர்த்தத்தின்போது காவுகொள்ளப்பட் டது.

இவ்வாறு பார்க்கும்போது சுமார் 5000 வருடங்களுக்கு முன்பு குமரிக் கண்டத்தை யும், 4000 வருடங்களுக்கு முன்பு தென் மதுரையையும் 3000 வருடங்களுக்கு முன் பாக கபாடபுரத்தையும், 2000 வருடங் களுக்கு முன்பாக காவிரிப் பூம்பட்டினத் தையும் கடல்கோள் காவுகொண்டமை இலக்கியச் சான்றுகள் மூலம் புலப்படுத்தப் பட்டுள்ளது.

## பல்லவர் காலமும் சோழர் காலமும்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலம் சங்கம் மருவிய காலத்தின் பின்னர் பல் லவர் காலத்தில் பக்தி இலக்கியம் சிறப் புப் பெறலாயிற்று. பல்லவர் காலத்தின் சிற் பக்கலை சிறப்புப்பெறலாயிற்று. மாமல்ல புரத்து சிற்பங்கள் யாவும் பல்லவர் காலத்


சுனாமியின் சுவடு

தின் சிறப்பைப் பிரதிபலிக்கின்றன. ஒரே யொரு கல்லைக் குடைந்து அஞ்சு ரதம் செய்த பெருமையும் சிறப்பும் வினைத்தி றனும் கொண்ட சிற்பாசாரியார்கள் இக் காலகட்டத்தில் வாழ்ந்தார்கள். இவர்களால் செதுக்கப்பட்ட பல சிற்பங்கள் சோழர் காலத்தில் ஏற்பட்ட மற்றுமொரு கடல்கோள் காரணமாகக் கடலினுள் அமிழ்ந்துபோயின. கடல்கொண்ட சோழபுரம் என் பது இக் காலத்தில் எழுந்த ஒரு கடல் கோள் அனர்த்தமேயாகும்.

சோழர் காலத்தைத் தொடர்ந்து ஐரோப் பியர்கள் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகளைத் தமது ஆளுகைக்குட்படுத்தினார்கள். இதே வேளையில் அவர்களைக் கவர்ந்த பல அற்புதமான சிற்பங்களை ஆயுத முனையில் இவர்கள் கொள்ளையடித்துத் தமது நாடு களுக்கும் கடத்திச் செல்லத் தவறவில்லை. பல மேலைத்தேய நாடுகளின் அரும் பொருட் காட்சியகங்களில் கீழைத்தேய சிற் பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பல்லவர் காலத்து விலைமதிப்புள்ள பெரும் அரும்பொருட்கள் பின்னைய காலங்களில் ஏற்பட்ட கடல்கோள்கள் கார ணமாக கடலுக்குள் மூழ்கிப்போயின அல் லது ஐரோப்பியர்களால் கொள்ளையடிக் கப்பட்டு அவை அவர்தம் நாடுகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. இவ்வாறு எடுத் துச்செல்லும்போது கப்பல்களில் அல்லது ஓடங்களில் ஏற்பட்ட உடைவு காரணமாக அவை கடலுக்குள் மூழ்கிப்போனதும் உண்டு.

## 2004 சுனாமி கற்றுத் தந்த பாடம்

கடந்த வருடம் 2004ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப் பேரலை காரண மாக இலங்கையின் கரையோர மாகாணங் களில் எல்லைக் கிரா மங்கள் சில கடலில் மூழ்கியமையால் இலங் கையின் புவியமைப் பின் வரைபடத்தையே அது மாற்றியுள்ளது. இந்தச் சுனாமி கடல்கோளின்போது கடலுக்குள் பாம்பணையில் பள்ளிகொள் ளும் பரந்தாமனின் சிற்பம் ஒன்றை நடுக் கடல் வற்றிய நிலையில் தாம் பார்த்த தாக சில முஸ்லிம் மீனவர்கள் குறிப்பிட் டிருந்தார்கள். இந்தக் கருங்கல் சிற்பம் முன்னைய காலங்களில் ஏற்பட்ட கடல கோள் அனர்த்தங்களின்போது கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் அல் லது ஐரோப்பியர்கள் தென்னகத்திலி ருந்து அல்லது ஈழத் தமிழகத்திலிருந்து கொள்ளையடித்துக்கொண்டு கடல் மார்க்கமாக எடுத்துச் செல்லும்போது கடலில் ஏற்பட்ட விபத்துக் காரணமாக கப்பல் சிதைந்துபோக இந்தப்பாரிய கற்சிற்பங்கள் கடல் நீரில் மூழ்கிச் சிதையாமல் இருப்பதாகவே தெரிகின்றது. இவ்வாறு காலம்தோறும் ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தங்கள் மனித வாழ் வில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியே வந் துள்ளன.

நூல் அறிமுகப் பகுதிக்கு படைப்பாளிகள் மற்றும் வெளியீட்டகங்களிலிருந்து இரண்டு புத்தகங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகளுக்கான விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

# யாரை நாம் நோவோம்?

கணனிக்கவி

யாரையாம் நோவோமினி,
எவரிடம் தான் சொல்வோம்?
போரைநாம் தவிர்த்தன்றிருந்து,
நேசக்கரம் நீட்டி நின்றோம்.

நாரைப்போய்க் கல்லிலிருந்து
உரித்தவா றாய் முயன்றோம்,
ஊரைக்கூட்டி உலகைக் கூட்டி
நியாயத்தைக் கேட்க வைத்தோம்.

ஏரைப்பூட்டி கல்மீ துழுது
எம்முடலைப் பசளை இட்டோம்,
சுரைக்கொட்டை விதைக்கக் கள்ளி
முளைகொள்ள இன்று கண்டோம்.

கூரையாகி நின்றவரைக்
கூற்றுவன் வசம் இழந்தோம்,
தாரைவார்த்துக் கொடுக்கவோவெம்
மகவுகளை நாம் வளர்த்தோம்?

வேரைவெட்டி விட்டது போல்
செயலிழந்து நிற்கின்றோம்,
விரைவில் அது போலவொன்று
வளர்ந்துவிட நாம் நிமிர்வோம்.

கௌசல்ய னோடுஜவர்
உயிர்களைப் பறித்தா ரெவரோ,
கௌரவர் போல் இத்தீவில்
கொடுமைகள் புரிவா ரெவரோ,

கௌதமர் போதனையை
களங்கமுற வைப்பா ரெவரோ,
கௌரவம் அற்றுவாழ்வில்
உலகிகழக் கெட்டழி வாரவரே!



# தெருப் பாடகன்

சோ.சி.கலைக்கதிர்

அவன்
தன் கையிலிருந்த
றபானில்
தட்டியபடி
பாடிக்கொண்டிருக்கிறான்.

வயிற்றுப் பசியின்
கொடுமையினாலோ,
அல்லது
இழப்பின் துயரத்தினாலோ,
அல்லது
போர் வரும் என்ற
பயத்தினாலோ,
அவன் பாடுகிறான்.

பார்வையாளர் களோ
அவனது பாட்டுக்கு
தாளம் போட்டபடி
போகிறார்கள்.
அவனது கண்ணீரை
யாரும் பார்ப்பதாக
தெரியவில்லை.

# காற்றினை அறையும் குரல்கள்

பாட்டுக்குயில்



காற்றினை அறையும்
குரல்களின் எழுப்பலில்,
விழித்த காதில் உனது குரலும்
“கலக்கப்பட்டு கலக்கப்பட்டு”
வடியும் போதில்...
வெளியே வெளிவர...

நகர மறுத்து;
உள்ளும் புறமும்
இடைவெளியின்றி;
நிமிர்ந்து நிமிர்ந்து;
காற்றிலே கட்டிய பயங்கர...

சொல்!
காவு கொண்ட
கடலின் அடியிலா
அரக்கமீனின்
அடிவயிற்றிலா
அல்லது...
போட்டு மூடிய
எந்தப் பொதுக்கு(ழி)யுள் நீ.
□□

ஓ... மீன்காரா!

மீன்களை விற்றே
வலையினை விரித்தாய்

வலையினை விரித்தேன்
மீன்களை வாங்கியே

பார்வைகள் முடித்து,
பதிற்கறி கேட்டாய்.
பத்து வருடமாய்ப் பசித்ததினாலே....

நாளை போயிற்று!!!
நாளை போயிற்று!!!
இனி எப்போதும்
இறந்த காலமே.

அலைகள் வந்து
கவலையை எறிந்தன
வலைகள் ஒன்றாகி
வாழ்க்கை விரிவதற்குள்.

‘என்னைக் காப்பாற்றுங்கள்!’
‘என்னைக் காப்பாற்றுங்கள்!’

# தின்னும் நினைவு

இராட்சத அலையே எழுந்து நிமிரும்
கோரக்காட்சி!
ஆழப்பதிந்து, உள்ளே விரிந்து உயிரை உலுக்கி
ஏக்கம் தருமே.


எனக்கேயான
அம்மாவை,
அப்பாவை,
அக்காவை,
அண்ணாவை,
என்னுள் பொறுக்கி என்னுள் பொறுக்கி
முழுமையாக்கு முன்...
அவற்றை
ஆழப்பதிந்த இராட்சத அலையின்
கோர நினைவு
முழுமையாய்த் தின்னுதே.
□□

# எப்படிப் புரியும் உன்வலி ?

த.ஜெயசீலன்

உன்னை எனக்கு ஓரிரண்டு மாதத்தின்
முன்னர்தான் தெரியும்.
உற்சாக உருவாய் நீ
ஓடித் திரிவாய் - ஒன்றுசொன்னால் ஒன்பதாய் நீ
தேடித் தருவாய்.
திடீரென்று ஓர் நாளுன்
வீடு வந்தேன்;
உந்தன் வெற்றி இரகசியத்தை
உன் மனைவி மக்கள் உருவத்தில்
நான் கண்டேன்.
அன்று எனக்களித்த
அன்பு உபசரிப்பு
இன்றென் நெஞ்சினிலே இடியாய் இறங்கியது.
கடலலைகள் காவுகொள்ள
கட்டியவள், சேய்களென
அனைவரையும் இழந்து நீ
அநாதைத் தனிமரமாய்
கதறிய கதறலிலென் ஆன்மா கருகிற்று.
''முப்பத்தொன்று'' அன்று உன்வீட்டு முற்றத்தில்
''அவர்களினை'' அள்ளி
அவசரமாய்ப் புதைத்துவிட்ட
இடத்தில்;
இரவுவரை கிடந்து புரண்டே நீ
துடித்த துடிப்பென்னைச் சுட்டுப் பொசுக்கிற்று.
நடைப்பிணம்போல் எங்கோ
வெறித்தபடி திரியும்
உந்தனுக்கா ஈடாகும் மரணக் கொடுப்பனவு?
உனக்கு ஒரு ஆறுதலைச்
சொல்ல ஏதும் வார்த்தையற்று
மனது கனக்க... மௌனமாயுன் கைதொட்டேன்.
எங்களை மீறிய இயற்கைப் பலியெடுப்பு
உன் மனைவி மக்கள்
'ஏதும் புரியுமுன்னர்' கொண்டுபோச்சு!
அந்திரெட்டிக் கல்வெட்டில்
பார்த்தேன் முகங்களினை...
'எங்களுக்கு இப்படியேன்'...
என எழுந்ததங்கலாய்ப்பு.
இன்று அமைதியாய் இரையும் கடலுக்கு
எப்படிப் புரியும் உன்
போன்றோரின் விலைகொடுப்பு?
□□

சுனாமியின் கூடு



R.S

வாழ்த்து மடல்கள் வடிவமைப்பா
அழைப்பிதழ்கள் வடிவமைப்பா
புத்தகங்கள் வடிவமைப்பா
உங்கள் எந்தத் தேவையாயினும்
எங்களிடம் வாருங்கள்
நாங்கள் உங்களுக்கு
அழகாக அச்சிட்டுத் தருவோம்.

# நிலா பதிப்பகம்

பிரதானசாலை, கிளிநொச்சி.

இணை நிறுவனமான:-

**குணா** டியிற்றல் இமேயிங்- டியிற்றல் பிறிண்ட்

புதிய சேவைகளாக அறிமுகம் செய்கிறார்கள் பின்வரும் சேவைகளை-

- கலர் செப்பிறேசன் (வண்ணம் பிரித்தல்)
- மென்காப்பிடுகை (40" x 60")
- அச்சுப்பொறிசார்ந்த திருத்தங்கள்
- டியிற்றல் பிறிண்ட் (36" x 60")


வெளிச்சம்
சுனாமி
26.12.2004